www.tamilarangam.net


# நிகரி
NIHARI

"மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே" - பாரதி

Issue No - 3, 10th February 2002

வாரவெளியீடு
இதழ் 3 - பெப்ரவரி 10, 2002
விலை ரூபா 12/=


**சந்திரிகா அதிகாரம் !**

நக்கியே அழியும் நாயென்றால் குப்பை
உக்கியே அழியும் உண்மையிது ! - முக்கியே
தேரை அழியும்: சந்திரிகா அரசோவெம்
ஊரை அழித்துவிட்டே ஓயும் !

**– ஈழமோகம்**

# சர்வ வல்லமையும் நானே!



புகைப்படங்கள் : சிறியந்த வல்பொல

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நிலவும் "எதிர்க் கட்சி" உறவு முறையானது, சமாதானத்திற்கான முயற்சிகளுக்கு ஆப்புவைக்கும் ஒன்றாக மாறிவிடுமோ என்ற அச்சம் இப்பொழுது பரவலாக எழுந்துள்ளது. சமாதானப் பேச்சு, யுத்தமற்ற நிலை என்பன பற்றி பிரதமர் எவ்வளவுக்கு அதிகமாக வலியுறுத்துகிறாரோ அவ்வளவுக்கு ஜனாதிபதி அவர்கள் தனது அதிகாரத்தின் பெருமையை வலியுறுத்தத் தொடங்கியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற 54வது "சுதந்திர" தின விழாவையொட்டி ஜனாதிபதி ஆற்றிய உரையானது, தனது அதிகாரத்தை வலியுறுத்தி பாராளுமன்றத்தையும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தையும் மிரட்டுவது போன்ற தொனியைக் கொண்டிருந்ததாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமான உறவு ஆட்சியை சிறப்புற அல்லது குழப்பமற்ற முறையில் நடாத்த உதவுவதாக அமைய உதவ வேண்டும். ஆனால் சமாதானத்திற்கு யுத்தமே ஓரே வழி என்று கூறும் ஜனாதிபதியும் சமாதானப் பேச்சே, யுத்த நிறுத்தமே அதற்கான ஆரம்பம் என்று கருதும் பிரதமரும் இரு வேறு திசைகளில் அரசாங்கத்தை இழுக்க முயல்வதால் இந்த உறவு ஒரு இழுபறி உறவாக உருவெடுத்து வருகிறது. இந்த இழுபறி சமாதானத்துக்கு மட்டுமல்ல, ஸ்திரமான ஆட்சிக்கும் குந்தகமாக அமைந்துவிடப் போகிறதே என்ற அச்சம் நியாயமான அச்சம் என்பதில் ஐயமில்லை அதிலும், தனது அதிகாரம் பற்றி ஜனாதிபதி திரும்பத் திரும்ப கூறுவது இதை இன்னும் வலுப்படுத்துவதாக அமைகிறது.

"எனக்கு நிறைய அதிகாரங்கள் இருக்கின்றன" இது சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த 4ம் திகதி நாட்டு மக்களுக்கு இலங்கையின் சுதந்திரதினத்தையொட்டி தொலைக் காட்சியிலும் வானொலியிலும் ஆற்றிய உரையில் தெரிவித்திருந்த கூற்று.

கொழும்பு சுதந்திர மண்டபத்தில் நடந்த சுதந்திர தின விழாவில் நிறை-வேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சந்திரிகாவும் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டனர். ஆனால் பாரம்பரி-யமாகத் தொடர்ந்து வந்த "நாட்டு மக்களுக்கு சுதந்திர தின விழா மேடையிலிருந்து ஆற்றும் உரையை இம்முறை ஜனாதிபதியோ பிரதமரோ நிகழ்த்தவில்லை.

இதன் பின்னர் தான் நாட்டு மக்களுக்கு வானொலி தொலைக்காட்சி மூலம் ஜனாதிபதி சுதந்திரதின உரையை ஆற்றினார்.

இந்த உரையில் தான் தனக்கு நிறைய அதிகாரங்கள் இருப்பதாக ஜனாதிபதி எடுத்துக் கூறியிருந்தார்.

ரணில் ஆட்சியுடன் ஜனாதிபதி பலப்பரீட்சைக்குத் தயாராகிறாரா? என்ற சந்தேகத்தை இது எழுப்புகிறது.

இந்த வைபவத்துக்குச் சிலதினங்க-ளுக்கு முன்னர் தான் பொது ஜன முன்னணிப் பிரமுகர்கள் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா தமக்குள்ள அதிகாரங்களில் எழுபத்தைந்து வீதமான அதிகாரங்களைத் தாம் இன்னும் பயன்படுத்தவில்லை என்று தெரிவித்திருந்தார்.

பொதுத் தேர்தல் முடிந்து முடிவுக-ளும் வெளியாகி புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தான் பதவியேற்-பார் என்ற நிலையில், நாட்டில் கலகங்கள் தொடர்ந்து கொண்டிருப்-பதைக் கண்டித்து அவற்றை உடனடி-யாக நிறுத்தும்படி பொலிஸ்மா அதிபருக்கு ரணில் விக்கிரமசிங்க சாதாரணமாக ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ரணிலின் இந்த அறிக்கை வெளி வந்ததும் முப்படைகளுக்கும்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்...


பிரித்தாளும் உத்திக்கான அறிவியல் அடித்தளம் எது? 3



புலிகளின் தலைவர்களை எப்படி கோல்ல முடிந்தது? 10



புலிகள் மீதான தடை: அரசியற் தந்திரம் மாத்திரமே! 8



5 சிறைகளில் இளைஞர் உண்ணாவிரதம் ! தமிழ் தலைவர்களோ...?



9 கூட்டமைப்பில் கட்சிகளின் தனித்துவம்?



ஜே.ஆர் பிரேமதாசா சந்திரிகாவினூடே ரணில்வரை 6




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அமெரிக்கத் தூதுவர் இன்று கூறியது

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் சில தினங்களுக்கு முன் இலங்கை இனப்பிரச்சினை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் 'இலங்கை இரு நாடுகளாகப் பிளவுபடுவதை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அதே வேளை இலங்கையின் இனநெருக்கடியைப் பொறுத்தவரை ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் சாத்தியப்படக் கூடியதல்ல. இரு நிலைப்பாடுகளுக்கும் இடைப்பட்டதான ஒரு சிறந்த அதிகாரம் கொண்ட தீர்வே அம்மக்களுடைய வேட்கையான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யுமென்று அமெரிக்கா கருதுகிறது என்று கூறியுள்ளார்.

வவுனியாவுக்குச் சென்றிருந்த சமயத்திலேயே தூதுவர் ஆஷ்லி வில்ஸ் இக் கருத்தைத் தெரிவிக்கிறார்.

இதே அமெரிக்கத் தூதுவர் சில மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்ள முடியாதென்று கூறியிருந்தார். பிளவுபடாத இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்றும் சொல்லியிருந்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லிக் கொள்ளும் சிங்கள ஆங்கிலத் தினசரிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் தூதுவர் ஆஷ்லி-வில்ஸைப் பாராட்டி சரியாகச் சொல்லியிருக்கிறார் என்று போற்றிப் புகழ்ந்தனர்.

பொதுத் தேர்தலின் பின்னர் வவுனியாவுக்குச் சென்ற பின்னர் தான் தூதுவர் ஆஷ்லி வில்ஸுக்கு ஞானம் பிறந்திருக்கிறது.

## தீர்வுக்கு ஆதரவு !

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் முழு ஆதரவும் அனுதாபமும் உள்ளது.

இவ்வாறு வட அயர்லாந்தின் சமாதானத் தலைவரும் 1998ஆம் ஆண்டில் சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றவருமான ஜோண் ஹயூமஸ் தெரிவித்திருக்கிறார்.

இனவேற்றுமைகள் காரணமாகப் பிளவுபட்டுள்ள மக்களை குண்டு வீச்சுக்களும் இராணுவ நடவடிக்கைகளும் மேலும் பிளவுபடுத்தி விடும் என அவர் மேலும் எச்சரித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு மனிதாபிமான தீர்வினைக் காணவிளையும் பட்சத்தில் சகல சமூகத்திற்கும் உயிர் வாழ்வதற்கு உள்ள உரிமையை அங்கீரிக்க வேண்டும். சமாதானத்திற்கான பாதை மிக நீண்டதாக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

## சர்வ வல்லமையும்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தளபதி நானே, படைகளுக்கு ஆணையிடும் அதிகாரம் தனக்கேயுள்ளது என்று ஜனாதிபதி சந்திரிகா ஒரு அறிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி இப்படி அறிக்கை விடுவதற்கு அவரது அமைச்சரவையில் அமைச்சராக விருந்த ஒரு அமைச்சர் விடுத்த அறிக்கையே தூண்டுதலாக இருந்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத்தான் சந்திரிகா அம்மையார் தொடர்ந்திருந்து வருகிறார். அவருக்கு நிறைய அதிகாரங்கள் இருப்பது அவருக்கும் தெரியும். ரணில் தலைமையில் ஆட்சிக்கு வந்திருக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இதை ஆட்சி பீடத்துக்குத் தெரிவு செய்திருக்கும் மக்களுக்கும் நன்கு தெரியும்.

இந்த நிலையில் "எனக்கு நிறைய அதிகாரங்கள் இருக்கின்றன"" என்று ஜனாதிபதி சந்திரிகா அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்?

பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போதும், தேர்தல் முடிந்து புதிய ஆட்சி அமைக்கப்பட்ட பின்னரும் ஜனாதிபதியின் மீது ஒழுக்க வழுவுரைக் குற்றச் சாட்டுக் கொண்டு வந்து பதவியிலிருந்து அவரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் அமைச்சர்கள் சிலர் உட்பட இன்றைய ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் பகிரங்கமாகத் தெரிவித்து வந்தனர்.

இதே சமயம் ஒன்றிரண்டு ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் ஜனாதிபதி முறை தவறி நடந்தார் எனக் குற்றம் சுமத்தி அது சம்பந்தமான ஆதாரங்களையும் வெளியிட்டு வருகின்றன.

சில கொலைச் சம்பவங்களில் உண்மைகளும் அவற்றிற்கான ஆதாரங்களும் தெரிந்திருந்தும் குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்கான செயல்களை ஜனாதிபதி செய்தார் என்றும் இப்பத்திரிகைகள் ஆதாரங்களுடன் செய்திகளை வெளியிட்டுவந்தன.

இதே சமயம் சந்திரிகா அம்மையார் மிகுந்த ஆர்வத்தோடும் அக்கறையோடும் ஜெயவர்தன புரத்தில் பெரும் பணச் செலவில் அமைத்து வந்த ஜனாதிபதி மாளிகையின் கட்டட வேலைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதில்லை என்ற புதிய அரசின் தீர்மானமும் மற்றும் சில வேலைத்திட்டங்கள் தொடரப்படாததும் ஜனாதிபதிக்கு மன வெறுப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானம் பேச்சுத் தொடங்குவதற்கு முன்னரே கொழும்பு நகரில் செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நீக்கப்பட்டதும் ஜனாதிபதிக்கு திருப்தியளிக்கவில்லை. இதை உடனடியாகவே ஒரு அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுமிருந்தார்.

இந்த நிலையில்தான் தன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கத் துணிந்தாலும் தமது திட்டங்களைச் செயல்படுத்தத் தடையாக இருந்தாலும் தாம் தமது அதிகாரங்களை ரணிலின் ஆட்சிக்கெதிராகப் பிரயோகிப்பார் என்பதைச் சொல்லாமல் சொல்லுவதாக தமது அதிகாரங்கள் பற்றிப் பேசுவதற்குக் காரணமா என்று கருதப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவது சம்பந்தமான ஏற்பாடுகள் ஜனாதிபதிக்குத் திருப்தியளிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைந்துள்ளது.

யானை - புலி கூட்டுத் தேர்தல் பிரசாரம் இப்போது நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை புலிகளுக்குப் பலி கொடுக்க ரணிலின் ஆட்சி முனைந்துள்ளதாகச் சமாதானப் பேச்சு எதிர்ப்புப் பிரசாரமாக கவர்ந்தெடுக்கப்படுகின்றது.

எங்கு பார்த்தாலும் புலித் தோல் போர்த்திய யானை காட்சியளிக்கும் சுவரொட்டிகள் காட்சியளிக்கின்றன.

வீதி ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்து நடத்தும் ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்த்து கிராமப் புறங்களிலும் நகரங்களிலும் பொதுக் கூட்டங்கள் வைத்துப் பிரசாரமும் செய்து வருகிறது. சமஷ்டி ஆட்சி என்றாலே நாடு பிளவு பட்டு விடும் என்றும் சமஷ்டி ஆட்சி அமைக்கவே நோர்வேயின் உதவியுடன் சதி நடக்கிறதென்றும் ஜே.வி.பி. பிரசாரம் செய்கிறது.

இதே சமயம் நாட்டில் பல பகுதிகளிலும் கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வங்கிகளும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும், சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் கடந்த சில மாதங்களாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1970ஆம் ஆண்டுக் காலப் பகுதியிலும் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 1970 தேர்தலில் போட்டியிட்டது. அச்சமயத்தில் நாட்டைப் பிரிக்க முயற்சி நடப்பதாகத் தென்னிலங்கையில் அரசியல் கட்சிகள் பிரசாரம் செய்துவந்தன.

இச்சமயத்தில் "தவச"" குழுப் பத்திரிகைகள் (எம்.டி.குணசேன நிறுவனம் வெளியீடு) இலங்கையில் "நாம் தமிழர்"" இயக்கம் இரகசியமாகக் கூட்டங்கள் நடத்தி வருவதாகவும் இந்த இயக்கம் நாட்டைப் பிரிப்பதற்கு ஆயுதப் போராட்டம் நடாத்தத் திட்டமிட்டு வருவதாகவும் தினமும் செய்திகள் வெளியிட்டு வந்தன.

1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பி.யின் ஆயுதக் கிளர்ச்சி ஆரம்பமானதைத் தொடர்ந்து "நாம் தமிழர்" இயக்கம் என்ற செய்தியே பத்திரிகைகளில் வெளிவராமல் போயிற்று.

இப்பொழுது விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்துவதற்கு முயற்சி செய்யப்படும் பேச்சுவார்த்தைகளுக்கு சிகல உறுமயவும் எதிர்ப்புத் தெரிவித்துப் பிரசாரம் செய்து வருகிறது.

பேரினவாத இயக்கங்களுடன் பேரினவாதப் பத்திரிகைகளும் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகளும் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில்தான் ஜனாதிபதி தமது அதிகாரங்கள் பற்றியும் வலியுறுத்தி வருகிறார்.

பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெறுவதற்கு சுமுகமான சூழ்நிலை தொடர்ந்தும் நிலவுமா?

### நிகரி வருடாந்த சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| இலங்கை. | : | 600.00 ரூபா |
| இந்தியாவும் சார்க் நாடுகளும் | : | 25 அமெரிக்க டொலர் |
| மத்திய கிழக்கு நாடுகள் | : | 30 அமெரிக்க டொலர் |
| ஐரோப்பிய நாடுகள் | : | 36 அமெரிக்க டொலர் |
| அமெரிக்கா | : | 46 அமெரிக்க டொலர் |

## எங்கடை ஆக்கள் ஏன் இப்படி ?

யாழ்ப்பாணம் போவதற்காக இரத்மலானை விமானநிலையம் சென்ற உறவினர் ஒருவரை வழியனுப்பச் சென்ற போது அங்கிருந்த ஒரு விமானப்படை சிப்பாய் ஒருவருடன் பேசும் வாய்ப்புக் கிடைத்தது.

புதிய அரசாங்கத்தின் வருகையின் பின் உருவாகியுள்ள சூழல், கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் கடமை பார்க்கும் படையினர்களின் முகத்தில் இருந்த கடுகடுப்பை குறைத்திருப்பதாகத் தெரிகிறது.

காண்கிற தமிழர்கள் எல்லோரையும் புலிகள் என்று நினைத்துக் கொண்டு அணுகுகிற அவர்களது நினைப்பில் மாற்றம் வந்திருக்கும் என்று எனக்கு நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஆனால், புலிகளாயிருந்தால் தான் என்ன இருந்துவிட்டுப் போகட்டுமே என்று அவர்கள் நினைக்கிறார்கள் போல எனக்குத் தோன்றியது.

யாழ்ப்பாணம் இப்ப பழைய யாழ்ப்பாணம் இல்லை. அங்கை எல்லாச் சாமானும் இருக்கு. நீங்கள் 'பற்றி" கொண்டு போக ஏலாது எண்டதுக்காக கவலைப்படத் தேவையில்லை. அங்கை தேவையான எல்லாச்சாதி பற்றியும் இருக்கு"

பற்றரிகளைக் கொண்டு செல்ல முடியாது என்பதை அவர் எனது உறவினருக்கு விளக்கிய விதம் இப்படி இருந்தது. உண்மையில் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

'போர் இல்லாவிட்டால் இந்த நாடு எவ்வளவு நல்ல நாடாய் இருக்கும். இந்தச் சமாதானம் எத்தனை நாளைக்கு இருக்கப் போகுது எண்டது தான் இப்ப என்ரை கவலை" என்றார் அவர்.

'அரசாங்கத்தில் இருக்கிற ஆக்கள் நினைச்சால் இந்த நிலைமை நீடிக்கும். அவைக்கு விருப்பமில்லாதது தான் பிரச்சினை" என்று சொன்னேன் நான்.

'உண்மை தான். ஆனால் புலிக்கும் அப்படித்தான் அவைக்கும் சமாதானம் வாறதிலை அவ்வளவு விருப்பமில்லை. அவையும் குழப்பாமல் இருக்கோணும்" என்றால் அவர்.

நான் அதிகம் தேவையில்லாமல் பேசுகிறேன் என்பது போல எனது உறவினர் என்னைப் பார்த்தார். நான் மௌனமாகினேன்.

உறவினர் போனபின் திரும்பி வந்த என்னிடம் அதே அதிகாரி கேட்டார்.

'நீங்கள் யாழ்ப்பாணம் போகேல்லையோ?"

'இல்லை... பிளேனிலை போக நிறைய காசு வேணும். பஸ் ஓடினால் போவன்"

'பஸ் ஓடுற பாதை திறந்தாலும் வழியிலை கொள்ளை அடிக்கிறதும் நடக்கும்... அதுகும் உங்கடை ஆக்கள் தான் செய்யினம்" என்றார் அவர்.

'அப்படியா?" என்று கேட்டேன் நான்.

'ஓம்... ஒரு முஸ்லிம் லொறியை ரிவி, டெக் போலை சாமனோடை அப்படியே கடத்திக் கொண்டு போயிட்டினம்.

'ஆர்"

'உங்கடை ஆக்கள் தான்"

'எப்ப..."

'ஏன் தெரியாதே... இப்ப கிட்டடியிலை தான்"

அவர் சொன்ன 'உங்கடை ஆக்களை" யார் என்று நான் கேக்கவில்லை.

அந்த 'எங்கடை ஆக்கள்" ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்ற எண்ணத்துடன் அவரிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு நடக்கத் தொடங்கினேன்.

## அதிகமான சுதந்திரம் காலிமுகத் திடலில்

54வது சுதந்திர தினவிழா மீண்டும் 'கன காலத்துக்குப்" பிறகு சுதந்திரச் சதுக்கத்தில் நடைபெற்றது.

சுதந்திர தினவிழாவை சுதந்திரச் சதுக்கத்தில் நடத்தும் துணிவை தரவல்ல ஒரு சூழலை உருவாக்கியதற்காக நிச்சயம் ரணில் பெருமைப்படலாம்.

ஆனால் வழமை போல, சுதந்திர தின விழாவுக்கு தமக்கு அனுமதி கிடைக்காது என்ற காரணத்தாலோ என்னவோ பொது மக்கள் பெருமளவில் கலந்து கொள்ளவில்லை. அங்கே ஒரு மூலையில் நின்ற ஒரு சிறிய கூட்டம் மக்களைத் தவிர யாரையும் காண முடியவில்லை.

சுதந்திர தினத்துக்கும் நாட்டில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதை, அன்று காலி முகத்திடலில் கூடியிருந்த கூட்டம் தெளிவுபடுத்தியது.

சுதந்திர சதுக்கத்தைவிட காலிமுகத்திடலில் தமக்கு அதிகமான சுதந்திரம் இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

அந்த நினைப்பில் தப்பில்லை என்பதை சந்திரிகா எப்போது புரிந்து கொள்ளப் போகிறாரோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரித்தாளும் உத்திக்கான அறிவியல் அடித்தளம் எது?

- டி. சிவராம்

1985 நடுப்பகுதி என்று நினைக்கிறேன். முதன் முதலாகச் சென்னை போயிருந்தேன், இயக்க அலுவலாக. ஒரு நாள் உமாமகேஸ்வரன் அவர்கள் என்னை அழைத்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர் என்னைப் பார்க்க விரும்புவதாகக் கூறினார். 'சரி' என்று நான் புறப்படுகையில், "ஆள் ஒரு பிராமணர். இந்திய, வெளிநாட்டு உளவுத்துறைக்கும் ஆய்வுகள் செய்து கொடுப்பவர். ஆகவே கவனமாகக் கதை", என்று சொல்லி அனுப்பினார். அங்கே போனால், சற்று நேரம் பொதுவாக பேசிக் கொண்டிருந்து விட்டு அந்தப் பேராசிரியர் தான் என்னைக் காண விரும்பிய விடயத்திற்கு வந்தார். யாழ்ப்பாணத்திற்கும், மட்டக்களப்பிற்குமுள்ள சமூக அரசியல் வேறுபாடுகள், முரண்பாடுகள். இயக்கங்களில் உள்ள மட்டக்களப்பு போராளிகளின் விழுக்காடு, இரண்டாம் மட்டத் தலைவர்கள் யார் யார் என்பவற்றைச் சுற்றியே அவருடைய கருத்தாடலின் செல் நெறி இருந்தது. அவர் ஏற்கனவே இந்த விடயத்தைப் பற்றி அறிந்து வைத்துள்ளார் என்பதும், தான் அறிந்தவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், மேலதிக நுட்பங்களை என்னிடம் அறிந்து கொள்ளவுமே முயல்கிறார் என்பதும் புலனாயின.

பேச்சு வழக்கு, சமூக அமைப்பு போன்ற விடயங்களில் வேறுபாடுகள் இருப்பினும் சிங்களப் பேரினவாதத்துடனான முரண்பாடே கிழக்கில் முதன்மையாக உள்ளது எனவும், இதற்கு அங்கு நடைபெற்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும், தமிழ் இன அழிப்பு நடவடிக்கைகளுமே முக்கியமான காரணமெனவும், எனவே தமிழ்த்தேசிய உணர்வு வட்டார மற்றும் பிராந்திய வேறுபாடுகளை மேவி நிற்கிறது எனவும் அவரிடம் கூறினேன். மட்டக்களப்பில் யாழ்ப்பாணத்துடன் உள்ள வேற்றுமைகள் உணரப்படுவதை விட சிங்களப் பேரினவாதத்துடனான முரண்பாடுகள் கூர்மையாகத் தொழிற்படுவதற்கு முந்தைய ஆண்டு (1984) வடமுனையில் நடைபெற்ற பயங்கரமான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றியும், அது எங்ஙனம் மட்டக்களப்பு மாவட்ட தமிழரின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கிற்று என்பது பற்றியும் எடுத்துரைத்தேன். பேராசிரியருடைய முகத்தில் ஈயாடவில்லை. மேற்படி அச்சுறுத்தல் காரணமாக வடமுனைப் பிராந்தியம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய படைத்தளமாக மாற்றப்பட வேண்டுமென்பதே எனது குறிக்கோள். இக்கருத்தை பல மட்டக்களப்பு தமிழ் இளைஞர்கள் ஆதரிக்கிறார்கள் என அவரிடம் சொன்னேன். பேராசிரியருக்கு முகம் சுருங்கி விட்டது. நமது கருத்தாடல் அதன் பின்னர் அதிகம் நீளவில்லை. இந்தப் பேராசிரியர் தற்போது ஸ்ரீலங்கா அரசுக்கு நெருக்கமானவராக உள்ளார். யாழ்ப்பாணம் ஸ்ரீலங்காப் படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் அங்கு முதன் முதலாக சந்திரிகா அரசினால் அனுப்பப்பட்ட வெளிநாட்டவர் அவரென்றே நினைக்கிறேன். இப்போது ஸ்ரீலங்காவிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளார். இவர் அண்மையில் தமிழகத்தில் இருந்து வெளியாகும் ஆங்கில இதழ் ஒன்றிற்கு தமிழர் அரசியல் - புலிகள் என்பன பற்றி ஒரு விரிவான கட்டுரை எழுதியிருந்தார். அதை வழமை போல சிங்கள இனவாத நாளேடுகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன.

புலிகள் அமிர்தலிங்கத்தைக் கொன்றார்கள். நீலனைக் கொன்றார்கள். யோகேஸ்வரனைக் கொன்றார்கள். ஆகவே கூட்டணி என்ன கணக்கில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்றதனூடாக புலிகளுடன் இணையலாமென்பதே இக்கட்டுரையின் ஊடுபாவான கருத்தாகும். இதே கருத்தை 'இந்து' ஆங்கில நாளேட்டின் கொழும்புச் செய்தியாளரும் வலியுறுத்துவது இங்கு நோக்கற்பாலது.

தமிழ் மக்கள் தமது நியாயமான உரிமைகளை ஒன்றுபட்டு வென்றெடுப்பதனை முறியடிப்பதற்கான பிரித்தாளும் உத்திகளின் சில வெளிப்பாடுகளே மேற்போந்தவையாகும். எமது உரிமைப் போராட்டத்தை சிதைத்து நாசமாக்குவதற்கு பல்வேறு பிரித்தாளும் உத்திகள் எம் மீது பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளன. எமது உரிமைப் போர் தொடங்கிய காலத்திலிருந்து நாம் இவற்றிற்குப் பலியாகி வந்துள்ளோம். இதற்குக் காரணம் எமது சமூகத்திற்கே இயல்பான அறிவியல் வறட்சியும் புரையோடிப் போயிருக்கும் மகா முட்டாள் தனங்களுமே காரணமாகும். பிரித்தாளும் உத்தி என்பது மனிதன் குழுக்களாக இயங்கத் தொடங்கிய காலத்திலிருந்து நடைமுறையில் உள்ளது. அர்த்த சாஸ்திரத்தை எழுதிய கௌடில்யர் தொடக்கம் கிறிஸ்துவுக்கு 5ம் நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீனப் போரியல் அறிஞரான சுன் - சி வரை இந்தப் பிரித்தாளும் உத்தி பற்றி விளக்கி உள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கமும், புலிகளின் வளர்ச்சி பெற்ற மரபுவழிப் படைபலமும் இவை இரண்டின் அரசியற் சேர்க்கையால் எமது விடிவுப் பாதையில் ஏற்பட்டுள்ள காத்திரமான தள மாற்றமும் எம் மீது பிரித்தாளும் உத்திகள் மிக நுட்பமாகப் பிரயோகிக்கப்படும் ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன.

இங்கு இது தொடர்பாக எமது வரலாற்றை சற்றுப் புரட்டிப் பார்ப்பது அவசியம். 1983இல் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பின் பின்னர், ஸ்ரீலங்கா அரசை தன்வல்லாதிக்க வலைப் பின்னலுக்குள் கொண்டு வருவதற்காக ஒரு அழுத்தக் கருவியாக எமது போராட்டத்தைப் பயன்படுத்தி தனது குறிக்கோளை அடையும் நோக்குடன் இந்தியா கூட்டணியுடனும் தமிழ்ப் போராளி அமைப்புக்களுடனும் தொடர்பை ஏற்படுத்தியது.

தனது குறிக்கோளை பிசகில்லாமல் அடைவதற்கு இந்தியா பின்வரும் பிரித்தாளும் உத்திகளைப் பிரயோகித்தது.

1. தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றுக்கும், ஸ்ரீலங்கா அரசுடன் நேரடித் தொடர்பு - அதாவது தனது அனுசரணை இல்லாத சுயாதீனமான தொடர்பு - ஏற்படா வண்ணம் இருதரப்பையும் பிரித்தது. இதற்காகவே கூட்டணி மற்றும் இயக்கத் தலைமைகள் சென்னையில் தனது நேரடிக் கண்காணிப்பில் இருக்கும்படி ஒழுங்குகளும் வசதிகளும் செய்து கொடுத்தது.



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பிளவுகளை ஏற்படுத்தி அவற்றை "நீரூற்றி" வளர்த்தமையாலேயே பின்னர் இந்தியப் படைகள் இங்கு வந்த போது இலகுவாக இயங்கக் கூடியதாயிற்று. இந்தியாவின் பிரித்தாளும் வேலைகள் இவ்வாறு ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களையும் தமிழர்களையும் பிளவு படுத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசு 1985 இலிருந்து வேலை செய்யத் தொடங்கிற்று. அதில் வெற்றியும் கண்டது. 1990களின் ஆரம்பத்தில் புலிகள் விட்ட தவறுகள் இதற்கு இன்னும் வலுவூட்டின. 1984இல் விசேட அதிரடிப் படையினருக்குப் பயிற்சி அழித்த பிரித்தானிய எஸ்.ஏ.எஸ். அமைப்பின் ஆலோசனையின் பேரிலேயே முஸ்லிம் தமிழ் முரண்பாட்டுக்கு அடித்தளமிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறாக கூட்டணியையும், இயக்கங்களையும் ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்பு ஏற்பட முடியாதவாறு பிரித்து வைத்ததாலேயே இந்தியா படிப்படியாக இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்க்கின்ற தவிர்க்க முடியாத மூன்றாம் சக்தியாக வளர்ச்சி பெற்று ஸ்ரீலங்காவை 1987இல் தன் வல்லாதிக்கத்தினுள் கொண்டு வரக் கூடியதாயிற்று. 1983ற்குப் பின் கூட்டணியோ இயக்கங்களோ தமிழகத்தில் கூடாரம் அடித்து தங்கவில்லையென வைத்துக் கொள்வோம். எமது போராட்டம் தற்போது நடைபெறுவது போல் ஸ்ரீலங்கா அரசுடன் "சண்டை - பேச்சு" என்ற பாதையில் போயிருக்கும். இந்தியா தனது படையை இங்கு அனுப்ப இடமேற்பட்டிருக்காது. இந்த வகையில் தனது வல்லாதிக்க வலையினுள் ஸ்ரீலங்காவைக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடும் காலம் கனியும் வரை கூட்டணித் தலைமைகள் வடக்குக் கிழக்கிலோ கொழும்பிலோ தங்கியிருந்தால் ஸ்ரீலங்கா அரசுடன் நேரடித் தொடர்பு ஏற்பட்டு விடும். எனவே யாரும் அப்படித் தங்கியிருக்க விடக் கூடாது என்பதிலும் இந்தியா கவனமாக இருந்தது. இதனாலேயே தர்மலிங்கம் கொலை செய்யப்பட்டார் (இவ்விடயத்தில் இரண்டாம் பேச்சுக்கு இடமில்லை).

2. தமிழ் தேசியப் பிரச்சினையை ஸ்ரீலங்காவை மண்டியிட வைப்பதற்கான அழுத்தக் கருவியாகப் பயன்படுத்துவதை முறியடிக்கும் வகையில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் தனியாகவோ கூட்டாகவோ தன் பிடியை மீறிப் போய் விடக் கூடாது என்பதற்காக பல இயக்கங்களை இந்தியா வளர்த்து விட்டது. அத்துடன் இவற்றுள் தொடர்ச்சியாக முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் ஆயுதங்கள் கொடுக்கின்ற அளவுகள் தொடக்கம் முரண்பாடுகளை வளர்க்கக் கூடிய கதைகளைக் கட்டி விடுவது வரை பல செயல்களைத் தொடர்ச்சியாகச் செய்து வந்தது.

வலுவுடனும் தேசிய நோக்கில் பற்றுடனும் காணப்பட்ட விடுதலை அமைப்புக்களில் இரண்டாம் மட்டத் தலைவர்களில் பிரதேச, சமூக, கோட்பாட்டு மற்றும் தனிநபர் வேறுபாடுகளைக் கவனமாகக் கற்று அவர்களை உடைக்கக் கூடிய வேலைகளைச் செய்தது.

இன்று ஒரு உண்மையான புரட்சியாளராகப் போற்றப்படும் ஒரு இயக்கத்தின் மறைந்த இரண்டாம் மட்டத் தலைவர் தொடக்கம் கிழக்கிஸ்தான் அமைப்போம் என்று புறப்பட்ட இன்னொரு இரண்டாம் மட்டத் தலைவர் வரை இந்திய வெளிநாட்டு உளவுத் துறையின் பிரித்தாளும் பேச்சுக்களையும் உறுதி மொழிகளையும் நம்பி மோசம் போனவர்களே.

கூட்டணியையும் இயக்கங்களையும் திம்புவில் ஒன்றுபட அனுமதித்ததன் மூலம் சுய நிர்ணய உரிமை, தாயகம், தேசியம் எனும் கோட்பாடுகளை முதன்மைப்படுத்தி ஸ்ரீலங்கா அரசு மீது உச்ச அழுத்தத்தை ஏற்படுத்த வழி செய்த இந்திய அரசு பின்னர் இரண்டாண்டுகள் செல்லு முன் சுய நிர்ணய உரிமை பற்றிய கருத்தே கிஞ்சித்தும் இல்லாத மாகாண சபை அமைப்பை ஏற்றுக் கொள்ள வைத்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பிளவுகளை ஏற்படுத்தி அவற்றை "நீரூற்றி" வளர்த்தமையாலேயே பின்னர் இந்தியப் படைகள் இங்கு வந்த போது இலகுவாக இயங்கக் கூடியதாயிற்று. இந்தியாவின் பிரித்தாளும் வேலைகள் இவ்வாறு ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களையும் தமிழர்களையும் பிளவு படுத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசு 1985 இலிருந்து வேலை செய்யத் தொடங்கிற்று. அதில் வெற்றியும் கண்டது. 1990களின் ஆரம்பத்தில் புலிகள் விட்ட தவறுகள் இதற்கு இன்னும் வலுவூட்டின. 1984இல் விசேட அதிரடிப்படையினருக்குப் பயிற்சி அழித்த பிரித்தானிய எஸ்.ஏ.எஸ். அமைப்பின் ஆலோசனையின் பேரிலேயே முஸ்லிம் தமிழ் முரண்பாட்டுக்கு அடித்தளமிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அடக்கு முறை அரசுகளும், ஏகாதிபத்தியங்களும் தாம் அடக்கியாள நினைக்கும் சமூகங்களை வெற்றிகரமாகப் பிரித்தாளுவதற்கு அச்சமூகங்கள் அவற்றின் அரசியல் வரலாற்றுப் பின்னணிகள் என நுட்பமான அறிவு தேவை. வியட்னாமில் அமெரிக்கா தோற்றுப் போனதற்கு அந்நாடு பற்றிய மானுடவியலையும், சமூகவியலையும், அமெரிக்கப் படைத்துறை சரியாகக் கற்காததும் ஒரு முக்கிய காரணமென பேர்னாட் புரோடி **(Bernard Brodie)** என்னும் போரியல் அறிஞர் கூறுகிறார். நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பேராசிரியரின் கேள்விகளும் இங்ஙனம் பிரித்தாளும் உத்திக்கான அறிவியல் அடித்தளத்தை உருவாக்கும் நோக்கில் கேட்கப்பட்டவையே.

ஏகாதிபத்தியங்கள், எதிர் கெரில்லாப் போரியல் எனப் பல அடக்குமுறை வடிவங்களுக்கும், நம்மவர் விமர்சனமின்றித் தூக்கிப் பிடிக்கின்ற சில மேலைத்தேய அறிவியல் கோட்பாடுகளுக்கும் உள்ள தொடர்பை இனி[illegible]போம்

www.tamilarangam.net




# மங்கலில் ஒரு வெளிச்சம்

- விஷ்ணு

இப்பெயர் இலங்கையின் பலபாகங்களிலும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. ஊடகங்கள், தமிழீழ விடுதலைப் புலிகள், வடக்கு - கிழக்கு வாழ் மக்கள், பாராளுமன்றம், அரச உயர்மட்டம் என அனைத்துப் பகுதிகளிலும் இடைவிடாது ஒலித்தது. பேராபத்தை விளைவிக்கவல்ல இவ்இரசாயன ஆயுதம் "வேகச்சித்திரவதை" க்கு பெயர் பெற்றது. மிகக் குறுகிய செக்கன்களில் ஒரு சதுரசென்ரி மீற்றரில் 30 கிலோகிராம் அழுத்தத்தை இது ஏற்படுத்தும். சாதாரணமாக நமது சூழலின் அழுத்தம் இதனிலும் பலமடங்கு குறைவானது. இவ்வகையான ரொக்கட்டுக்கள் 1000 இலங்கை அரசினால் 2001 ஆம் ஆண்டின் முற்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ரஷ்யா தயாரிப்பானாலும் இங்கிலாந்திலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டது. ஏனெனில் சர்வதேச இரசாயன ஆயுத உடன்பாட்டிற்கு ஏற்ப ரஷ்யாவில் அது விற்பனை செய்ய முடியாமையே. ஆனால் இங்கிலாந்தின் சட்டத்திலுள்ள ஓட்டைகளை கண்டறிந்து ஆயுத முகவர்கள் மூலம் கொழும்பு துறைமுகத்துக்கு இவ்வாயுதம் தருவிக்கப்பட்டுள்ளது. இவ் ஆயுத கொள்வனவின் போது பெரும் ஊழலும் இடம்பெற்றுள்ளது. ஆர்.பி.ஓ.ஏ. ரொக்கட் தம்மிடம் இருப்பதை தெரியாத்தனமாக ஒப்புக் கொண்ட இராணுவப் பேச்சாளர் பின் ஏற்பட்ட கடும் எதிரொலிப்பினால் அவ்வாறான ஆயுதம் எதுவும் தம்மிடம் இல்லையெனவும், அவ்வாறு இருப்பின் அது இராணுவ சட்டபூர்வ தேவைகளுக்கு பயன்படுமெனவும், முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை தெரிவித்திருந்தார். இவையெல்லாவற்றிற்கும் அப்பால் இந்த ரொக்கட் சாவகச்சேரி நகரின் அழிவில் பெரும்பங்கு வகித்ததாகவும், "அக்கினிச் சுவாலை" இராணுவ நடவடிக்கையின் போது பயன்படுத்தப்பட்டதாகவும், வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பதுங்கு குழி ஒன்றின் மீது ஏவப்பட்டதாகவும் அதில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் இருவர் சிதைவடைந்து குறிப்பாக கண்பகுதி பெரும் பாதிப்புக்குட்பட்டிருந்ததாகவும் செய்திகள் வெளியாகின. ஒரு முறை மாத்திரம் பாவிக்கக் கூடிய இவ் ரொக்கட் செலுத்திகளை தாக்குதல் முடிந்ததும் உடனடியாக சாட்சியங்கள் இன்றி எச்சங்களை அப்புறப்படுத்த வேண்டும் என உயர் மட்டங்களால் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் ஆதாரத்தை அடியோடு அழித்துவிடலாம் என படைத் தலைமைக் கருதியது.



ஆனால் ஓரளவு வெளியே வந்தாலும் உடனடியாக அமுங்கிப் போன அல்லது அமுக்கப்பட்ட ஒரு சம்பவத்தை நினைவுபடுத்துவதன் மூலம் இலங்கை அரசு இரசாயன ஆயுதமான ஆர்.பி.ஓ.ஏ. யை வைத்துள்ளதை உறுதிப்படுத்தலாம். 24.07.2001 அன்று அதிகாலை விடுதலைப் புலிகளின் படையணி கட்டுநாயக்கா விமானப் படைத்தளம், சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் மீது பெருந்தாக்குதலைத் தொடுத்த போது ஒவ்வொரு புலிப் போராளியும் தமது இலக்கை தாக்க கூடிய வகையில் தமக்கு சாதகமான முறையில் நிலையெடுத்திருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் தான் இரு போராளிகள் "ராடர்"" கோபுரத்தின் மீது ஏறிநின்று தரித்து நின்ற விமானங்களை தகர்த்துக் கொண்டிருந்தனர். விமானங்களை தகர்க்கக் கூடிய குண்டுகள் முடிவடைந்ததும் சாதாரண ஆயுதங்களுடனேயே கோபுரத்தின் மீது நின்றுள்ளனர். விடிந்த போது தான் இவர்களை அங்கிருந்த படையினர் அவதானித்துள்ளனர். ஆனால் அவர்களைத் தாக்கும் அவசர காரியத்தில் படையினர் இறங்கவில்லை. ஏனெனில் இவர்கள் மீது ஏவப்படும் ஏதாவது ஒரு குண்டாவது ராடர்கருவிகள் மீது படுமாயின் விளைவு விபரீதமாகும். குறித்த காலப்பகுதிவரை இராணுவத்தினதோ, சர்வதேச விமான நிலையத்தினதோ விமான போக்குவரத்தை நடாத்த முடியாமல் போகும், முற்று முழுதான விமான சேவை ஸ்தம்பிதம் அடையும், சிலவேளை விமான விபத்துக்கள் ஏற்படலாம், இதனால் ஏகப்பட்ட செலவீனம் ஏற்படும். துப்பாக்கிக் குண்டுகளை ஏவாமல் இவர்களை கொல்ல குறிவைத்துள்ளனர். எவ்வாறெனில், குவித்துவைத்திருந்த இரசாயன ஆயுதத்தில் ஒன்றை இதற்குப் பயன்படுத்தினர்.

போராளிகளை, அச்சம் நிமித்தம் அண்மிக்காமல் இருந்தவர்களையும் ஏனையவர்களையும் மேலும் அப்புறப்படுத்தி விட்டு "ராடர்"" கோபுரம் மீது இரசாயன ஆயுதத்தை ஏவியுள்ளனர். இதன்போதே இருபோராளிகளும் மயக்கமடைந்து கண்கள் சிதைவடைந்த நிலையில் மரணித்தனர். இரசாயன ஆயுதம் தம்மிடமில்லை தாம் பாவிக்கவும் இல்லை என மறுக்கும் இலங்கை இராணுவத் தரப்பு இதற்கு எந்த வகையான ஆயுதம் பாவித்ததாக கூறுமா? கூறுகிறதோ, இல்லையோ ஏற்பட்ட பாதிப்பின் மூலம் பாவித்தது "இரசாயன ஆயுதம்"" என்பது உறுதியாகியுள்ளது. கொள்வனவு செய்யவில்லை என மறுக்கும் இராணுவத் தரப்பு குறுகிய நேரத்துக்குள் எவ்வாறு தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு இரசாயன ஆயுதத்தை கொண்டுவந்தது? இராணுவப் பேச்சாளர் கூறிய சட்டபூர்வத் தேவை என்றால் என்ன? ○

# நிமல் கொலையில் கண் திறக்குமா நீதி?

- சிவஒளி

பொ ஐக்கிய முன்னணியின் அமைச்சரவை பதவியேற்பு வைபவம் இடம்பெற்ற அன்றிரவு நிமலராஜனின் மூச்சு நிறுத்தப்பட்டது. நிமல் தன் உயிருக்கு குறி வைக்கப்பட்டிருந்ததை மரணத்திற்கு முன்பே ஊடகத்துறை நண்பர்களுக்குத் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அட்டகாசங்களைப் புரிந்து வந்த ஒரு ஆயுதம் தாங்கிய தமிழ் கட்சியே தொடராக தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுவதாக கூறியுள்ளார். இதை தெரிவித்து குறித்த சில நாட்களில் தான் நிமலின் உயிர் பறிக்கப்பட்டது.

நிமல் மரணத்தை அண்மிப்பதற்கு சில நாட்கள் முன்னதாக அரச படையினரின் மனித உரிமை மீறல்கள், இராணுவத்திற்கேற்பட்ட பெரும் பின்னடைவுகள், யாழ்ப்பாணத்தில் இயங்கிய தமிழ் அமைப்பின் அத்துமீறல்கள் போன்றவற்றை பத்திரிகையாளருக்கே உரிய போர்க்குணத்தோடு ஊடகங்களுக்கு வெளியிட்டார். இவற்றையெல்லாம் அரச தரப்பும், குறித்த தமிழ் அமைப்பும் பார்த்துக் கொண்டிருந்தது. தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள் மோசடிகளை போதிய ஆதாரத்துடன் நிமலராஜன் வெளியிட்டார். இது சர்வதேசமெங்கும் பரவி குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், நிதியங்கள் மற்றும் தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்புகளுக்கும் தெரிய வந்தது. இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறப்பட்ட உதவி வழங்குனர்கள் பல்வகையிலும் நெருக்கடிகளை உண்டு பண்ணினர். இது இலங்கை அரசுக்கு ஓர் சர்வதேச அழுத்தத்தை உண்டு பண்ணியதாக கூறப்பட்டது. இதனால் தமக்கு அவசியமான நடவடிக்கையை அவசரமாக மேற்கொண்டது.

1. உண்மையான தகவல்களை உலகுக்கு தெரியப்படுத்தி நெருக்குதலை ஏற்படுத்தியவரை பழிவாங்குதல்

2. எதிர்காலத்தில் இவ்வகையான நெருக்குதல்கள் ஏற்படாமல் இருப்பதைத் தவிர்த்தல்.

3. உண்மையான செய்திகளை வெளியிடுகின்ற ஏனைய ஊடகத்தினருக்கான எச்சரிக்கை.

இக்கொலை ஒரு கூட்டுச் சதி என்று ஆணித்தரமாகக் கூறலாம். ஏனெனில் குறித்த இரு தரப்பினதும் அராஜகங்களை அப்பட்டமாக வெளிப்படுத்தியமையினால் இரு தரப்பினருமே கண்டனத்துக்கு உள்ளாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சாட்சியங்கள் இல்லாமல் நிமலை சாகடிக்கப் பார்த்தது. ஆனால் சம்பவங்களை விட சந்தர்ப்பங்களே முக்கியம் என்பதற்கமைய குறித்த தரப்பினரை இனம் காண வைத்தது சில நடவடிக்கைகள். உயர் இராணுவ பாதுகாப்பு வலயத்துக்குள்ளேயே நிமலின் வீடு, இரவு நேர ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் இருபத்தைந்து மீற்றருக்கு ஒரு காவலரண், இரவானாலும் பகலாய் காட்டும் மின்விளக்குகள், இக்கட்டுக்கடங்கா காவல்கள் அனைத்தையும் கடந்து துப்பாக்கி, கிரனைட் வாள் போன்றவற்றை பயன்படுத்தி நிமல் வீட்டில் கொலையும், படுகாயங்களும் ஏற்படுத்தி விட்டு எப்படி அந்த காடைக் கும்பல் இராணுவ வலயத்தால் தப்பிப் போக முடிந்தது? சரி வரும்போது தான் கொலைக்காரர்கள் இராணுவ தரப்பினரது கண்களில் மண்ணைத் தூவி விட்டு அரவம் இல்லாமல் வந்தார்களெனின் தாக்குதல் நடத்தி விட்டு எவ்வாறு தப்பிச் சென்றார்கள். ஏனெனில் குடாநாட்டில் சிறிய ஒரு துப்பாக்கிச் சூடு இடம்பெற்றாலே திடீரென விழித்து குறித்த இடத்தை நான்கு பக்கத்தாலும் சுற்றி வளைக்கும் படைத் தரப்பு. அதுவும் நிமலராஜன் வீட்டுக்கு மிக அருகில் இராணுவ காவல்அரண்கள் இருந்த போதும் சூட்டு சம்பவம் இடம்பெற்று அரைமணி நேரம் வரை அவ்விடத்திற்கு படையினர் செல்லவும் இல்லை, அது தொடர்பாக அதிர்ச்சி கொள்ளவும் இல்லை. கால்நடையாக வந்தால் இராணுவத்திற்கு தெரியவில்லை என இராணுவ தரப்பு நியாயம் கூற முற்படலாம். ஆனால் கொலை இடம்பெற்ற இடத்திற்கு மிகமிக அருகில் கொலையாளிகள் துவிச்சக்கர வண்டியை விட்டு விட்டு சென்றுள்ளார்கள். ஊரடங்கு வேளையில் துவிச்சக்கர வண்டியில் நபர்களின் நடமாட்டம் அவதானிக்கப்படவில்லை என்பது வேடிக்கையாய் இருக்க மறுபுறம் இராணுவத்தின் பாதுகாப்பு ஓட்டையை கோடிட்டு காட்டுவதுடன் இராணுவத்திற்கு அவமானகரமான ஓர் விடயமாக உள்ளது. ஆனால் இராணுவத்தரப்பு தாக்குதலை நடாத்த வெளியக ஒத்துழைப்பினை வழங்கியதே தவிர தாக்குதலில் நேரடியாக ஈடுபட்ட தரப்பு அரச அரவணைப்புடன் அராஜகம் புரியும் தமிழ்க்கட்சி ஒன்றுதான். எவ்வாறெனில் இவர்கள் தாக்குதலில் ஈடுபடும் போது முற்றுமுழுதான யாழ்ப்பாண மக்களுக்கு உரித்தான தமிழில் உரையாடியுள்ளார்கள். குறிப்பாக தேர்தலில் குறித்த தமிழ் கட்சி செய்த வன்முறைகள், வாக்கு மோசடிகளை தெளிவாக எடுத்தக் காட்டியதால் தமது முடிமூடி தெரிய வந்ததால் கொதித்துப் போனவர்கள் கொலை செய்வதற்கு தயங்கவும் இல்லை, தாமதிக்கவும் இல்லை என்பது தெளிவாக புலனாகிறது.



கொலையைத் தான் அரச படையினரால் தடுக்க முடியவில்லை அல்லது முயலவில்லையாயின் கொலை தொடர்பாக சந்திரிக்கா அரசு என்ன நடவடிக்கையை உருப்படியாக மேற்கொண்டது? விசாரணைக் கமிஷன் அமைத்ததை தொடர்ந்து சீ.ஐ.டியினர் யாழ்ப்பாணம் சென்று வந்தார்களே தவிர தக்க நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கொலை தொடர்பாக விசாரணைக் கமிஷன் அமைப்பதென்பது குற்றவாளியைக் காப்பாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் செயற்பாடு போலத்தான் நிலவி வந்துள்ளது. அமைச்சரவை பதவியேற்பு வைபவம் இடம்பெற்ற அன்று நிகழ்ந்த இச்செயல் தொடர்பாக புதிய அமைச்சரவை நீதியான செயற்பாட்டிற்கு எவ்வித அழுத்தத்தினையோ, ஆதரவினையோ அளிக்கவில்லை. அநீதியைத் தொட்டுக் காட்டிய நிமலராஜனின் மூச்சும் அவருடைய பேனா முனையின் கூர்மையும் அன்று நிறுத்தப்பட்டாலும் கொலை நடந்து சரியாக ஒரு வருடத்தின் பின் எந்த ஆட்சி அக்கிரமமானது என்று தொட்டுக் காட்டினாரோ அந்த ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. இதனால் பேனா முனையின் கூர்மையான சக்தி பேரினவாத அரசுகளுக்கும் புரிந்திருக்கும். சரி, அரசு தான் அக்கறையின்றி இருந்திருப்பினும் ஜனநாயகத்திற்காக குரல் எழும்பும் டக்ளஸ் தேவானந்தா முதல் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகள் வரை அனைவரும் கொலையாளிகளைக் கண்டு பிடிக்க என்ன நடவடிக்கை எடுத்தார்கள். என்ன அழுத்தம் கொடுத்தார்கள்.

ஐந்தாவது தடவையாக வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் குடும்பத்தாருக்கு அறிவிப்பெதுவும் விடவில்லை. இறுதியாக இடம்பெற்ற வழக்கு விசாரணையில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சாட்சியங்களையும் தனது உத்தரவின்றி விடுதலை செய்தமைக்காக பொலிஸாரை நீதிவான் கடுமையாக கண்டித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நீதி கிடைப்பது நீதிவானின் கையில் மட்டும் தங்கியுள்ள விடயமல்ல. இதில் தொடர்புடைய அனைத்து தரப்பினதும் பூரண பங்களிப்பிற்குரிய விடயம். இழுத்தடிப்புகள் மூலம் நீதியை திசை திருப்பலாம். தாமதித்து வழங்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமன் என்பதை மனதில் வைத்து சகல தரப்பினருக்கும் அழுத்தத்தை அளிக்க அரசியல் வாதிகள் விரைவாக முன்வர வேண்டும்.

நிமல்ராஜனின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவார்களா? அவ்வாறு நீதிவான் நீதி விசாரணைக்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு எவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணிக்கு அழுத்தம் கொடுக்கப் போகிறது என்பவையெல்லாம் எழுகிற கேள்விகள். இவ்வாறான கேள்விகளுக்கான பதிலிலே தான் இவற்றின் எதிர்காலம் தங்கியிருக்கிறது என்பதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்பலாமா?

நிமலராஜன் மரணம் தொடர்பாக பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரிய எழுதியது நினைவுக்கு வருகிறது. 'ஒன்றை மட்டும் உறுதியாக எழுதி வைக்க முடியும். நிமலராஜன் கொலையாளிகளை வரலாறு சாக்கடைக்கு அனுப்பி வைக்கும். வரலாற்று சாபம் காரணமாக அவர்களும், அவர்களது கையாட்களும் சுட்டுப் பொசுங்கி போவது மட்டும் நிச்சயம் அடாவடித்தனமான அரசியல் கொலையாளிகளுக்கு சாபம் உண்டாகட்டும்." ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறைகளில் இளைஞர் உண்ணாவிரதம்! தமிழ் தலைவர்களோ...?

-எஸ்.எம்.ஜி-

நல்லெண்ணம் நட்புறவுக்கான நடவடிக்கைகள் ஒரு வழிப்பாதையாக இருக்கக்கூடாது. ஒரு தரப்பு மட்டுமே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் எடுத்துக் காட்டும் செயல்களில் ஈடுபடவேண்டுமென்று எதிர்பார்ப்பது இருந்த நிலைமையையும் மேலும் மோசமாக்கக் கூடும்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்றால் பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்றும் உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டவர்களும் கூட ஆலோசனை தெரிவித்து வந்தனர்.

ரணில் தலைமையிலான புதிய அரசு பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சுமூகமான தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தே ஆட்சிக்கு வந்திருக்கிறது.

ஆட்சிக்கு வந்த உடனடியாகவே நம்பிக்கை தரும் சில நடவடிக்கைகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டார்.

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக ஒரு மாத காலம் போர் நிறுத்தத்தை தமது நல்லெண்ண வெளிப்பாடாக அறிவித்தனர். இதை ஏற்றுக் கொண்ட அரசும் ஒரு மாத மோதல் தவிர்ப்பை அறிவித்தது.

இந்தப் போர் நிறுத்தமும் மோதல் தவிர்ப்பும் இருதரப்பினராலும் மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

இதேசமயம் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையும் எழுப்பப்பட்டது. இதற்குப் பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளுக்கும் மட்டுமல்ல ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் உள்ளவர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை என்ற பேச்சு எழும் போதெல்லாம் ஆட்சியின் உயர் பீடத்திலுள்ளவர்களும் பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் புலிகளை நம்ப முடியாது என்றும், அவர்களை நம்பக் கூடாது என்றும் உச்சக் குரலில் ஓலமிடத் தொடங்கிவிடுகின்றனர்.

"நாங்கள் இதற்கு முன் நான்கு தடவைகள் புலிகளை நம்பி ஏமாந்திருக்கிறோம்" என்று ஜனாதிபதியே முதல், அவநம்பிக்கைக் குரலை உயர்த்தினார்.

இதற்கு முன் நடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தது பற்றித் தான் பேசுகிறார்கள். இத்தோல்விக்குப் புலிகள் மீதே பழியையும் போடுகிறார்கள். பேச்சுவார்த்தைகள் எப்படி ஆரம்பமாயின என்னென்ன விஷயங்கள் பேசப்பட்டன, இதில் ஒப்புக் கொள்ளப்பட்டவைகளுக்கு ஜனாபதியினால் பிறப்பித்த உத்தரவுகள் படைத் தரப்பினால் நிறைவேற்றப்பட்டனவா? அரச அதிகாரிகள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தனரா?

1994 ஆம் ஆண்டின் பின் சந்திரிகா அம்மையாரின் அரசு முதன் முதலில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை ஏன் தோல்வியடைந்தது?

இது பற்றி உடனடியாகவே சந்திரிகா அம்மையார் நடுநிலையாளர் குழுவொன்றை நியமித்து உண்மை நிலையை ஆராய்ந்து அறிந்து அடுத்த நடவடிக்கையிலீடுபட்டிருக்க வேண்டாமா?

எப்போ பேச்சுவார்த்தை தோல்வியடையும் இதற்கு யார் மீது பழியைப் போடலாம் என்று காத்திருந்தது போல் பேச்சுவார்த்தை முறிந்ததும் பழியைப் புலிகள் மீது போட்டுவிட்டு ஏற்கெனவே தயார் படுத்தப்பட்டிருந்த படைகளை போருக்கு ஏவிவிட்டது சந்திரிகா அரசு.

முன்னர் விட்ட தவறுகளை மீண்டும் விடக் கூடாது. ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு கடந்த காலங்களில் நடந்தவைகளிலிருந்து புதிய வழிகளைத் தேட வேண்டும்.

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் அறிவித்ததும் அரசாங்கமும் மோதல் தவிர்ப்பு அறிவிப்பை வெளியிட்டுத் தமது நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வெளிக்காட்டியது.

ஆனால் விடுதலைப் புலிகள் தங்களிடமிருந்த போர்க்கைதிகள் பத்துப் பேர்களை விடுதலை செய்து தமது நல்லெண்ணத்தை வெளிக்காட்டியதுடன் நட்புறவுக்கும் கைகொடுத்துள்ளனர்.


அரசாங்கம் இந்த நட்புக் கரத்தைப் பற்றிக் கொண்டு தங்களின் நல்லெண்ணத்தை கைதிகள் விஷயத்தில் காண்பிக்க இன்னமும் முன்வரவில்லையே ,ஏன்?

சுதந்திரத்தையொட்டி 2500 கைதிகளை நாடுமுழுவதிலுமுள்ள சிறைகளிலிருந்து விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி காரணமெதுவுமின்றி கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாமலும் விசாரணை எதுவுமில்லாமலும் சிறையிலிருந்து வாடும் தமிழ் இளைஞர்கள் சிலரையாவது விடுதலை செய்திருக்கலாமே! போதைவஸ்து, கள்ளச்சாராய வழக்கில் சிறையிலிருந்த 17 பேர் ஒப்புக்கு மட்டக்களப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

அவசரகாலச் சட்டம் காலாவதியாகிப் போய் பல மாதங்களாகி விட்டன. இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பலரும் தமது எதிர்காலம் பற்றி எதுவுமே சிந்தித்துப் பார்க்க முடியாதுள்ளனர். இவர்களின் விடுதலை பற்றியாவது அரசு சிந்திக்கக் கூடாதா?

சித்திரவதை செய்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெற்று இவற்றின் மீது தொடரப்பட்ட பல வழக்குகள், சித்திரவதை செய்து பெற்ற குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன.

இதன் பின்னரும் இதே குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை நம்பி வைத்திருக்கும் வழக்குகளை கைகழுவி விட்டு சிறையில் வைத்திருக்கும் இந்த வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்யலாமே! அவசர கால சட்டம், பயங்கரவாதச் சட்டம் இப்படி பல சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு எதுவித விசாரணையும் இல்லாமல் வாழ் நாளில் வளம் பெற வேண்டிய இளமைக் காலத்தை சிறையில் கழித்து வீணாக்கி குற்றவாளிகளாக உருவாகுவதற்கு முடிவு கட்ட வேண்டும். பலவந்தமாக சிறுவர்களை விடுதலைப் புலிகள் படைக்கு திரட்டுவதாக வெளிவந்த செய்திகள் குறித்து ஜனாதிபதி தீவிர கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி மாளிகைச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.



சிறுவர்களை பலவந்தமாகப் புலிகள் பிடித்து சென்று தமது படைக்கு ஆட்திரட்டுகிறார்கள் என்ற குற்றச் சாட்டு நீண்டகாலமாகவே கூறப்பட்டு வருவதுதான். சர்வதேச மாநாடுகளிலும் முன்னாள் அமைச்சர் கதிர்காமர் சிறுவர்களை புலிகள் படைக்குத் திரட்டுவது பற்றி பேசிப் பேசியே விடுதலைப்புலிகள் இயக்கத்தை பிரிட்டன், பிரான்ஸ், முதலிய நாடுகள் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதில் வெற்றியீட்டினார். கதிர்காமரின் திறமை மற்றைய தமிழ்ப் பிரதிநிதிகளின் திறமையின்மையை எடுத்துக் காட்டுகிறதா? இவர்களும் வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து தமிழர் நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். வெளிநாட்டுப் பிரமுகர்களை சந்தித்தவர்கள். பிரிட்டிஷ் அமெரிக்கத் தலைவர்களுக்கு மகஜர் அனுப்பினார்கள். எதுவும் பயன் பெறவில்லையே!

இப்பொழுது பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை இரத்துச் செய்து தமிழ்க் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும் விசாரணை செய்ய வேண்டும் என்று கோரி பூஸா, களுத்துறை, போகம்பரை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய சிறைச்சாலையிலுள்ள தமிழ்க்கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். யாழ் சிறைச்சாலையில் ஒரு கைதி இரத்த வாந்தி எடுத்து மயக்கமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். மற்றொருவரும் மயக்கமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து யாழ். நீதிவான் நேரில் சென்று பார்த்துப் பேசியதைத் தொடர்ந்து பத்து தினங்களுக்கு உண்ணவிரதத்தை அவர்கள் ஒத்தி வைத்திருக்கின்றனர்.

இந்தத் தமிழ்க் கைதிகளின் நிலை பற்றி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எம்.பி விநாயகமூர்த்தி நீதியமைச்சர் வீ.நெ.மூ.லொக்கு பண்டாரவை சந்தித்துப் பேசியதாகவும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்ததாகவும் பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கின்றது. பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துவிட்டால் போதும் நமது எம்.பிக்கள் திருப்தியடைந்து விடுவார்கள்.

இதிலும் எந்த எம். பி முந்திச் சென்று அமைச்சரையோ அதிகாரியையோ சந்திக்கிறாரோ அவர் உடனடியாகவே பத்திரிகைகளுக்கும் செய்தியை முந்திக் கொடுத்து விடுவார்.

மக்களுக்காக இந்த எம்.பி தான் பாடுபடுகிறார் என்று நாலு பேர் சொல்ல வேண்டும். அடுத்த தேர்தலில் அவர் வாக்குச் சேகரிப்பதற்கு இது உதவியாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் முயற்சியில் உருவாக்கப்பட்டது. தேர்தலின் பின்னரும் இக்கூட்டமைப்பு ஒரே குரலாக செயற்படுமென்று கூறிக் கொண்டார்கள்.

ஆனால் தேர்தல் முடிந்த பின் அவரவர் தனிப்பட்ட செல்வாக்கை வளர்ப்பதிலும் அவரவர் கட்சி நலனைக் காப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

விசாரணை எதுவுமின்றி சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் நிலையை இன்று அவர்கள் சிறைகளில் ஆரம்பித்து நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தை வைத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெரும் போராட்டத்தை உருவாக்கி உலகறியச் செய்ய முன்வந்திருக்க வேண்டாமா?

சிறையில் எந்தக் காரணமும் இல்லாமல் வாடும் தமிழ் இளைஞர்களின் பட்டியலொன்றைத் தயாரித்து அவர்கள் கைது செய்யப்பட்ட நாள் முதல் நடந்த விசாரணைகள், சித்திரவதைகள் குறித்து வெளிநாட்டுத் தூதகரங்களுக்கும் வெளிநாட்டு மனித உரிமைக் குழுக்கள், வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்து குரல் எழுப்ப வேண்டாமா? சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க் கைதிகளின் பிரச்சினை வாழ்க்கையை வாழ முடியாமல் தவிக்கும் கடற்றொழிலாளர்கள் நடத்தும் போராட்டங்களை விட உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா? நடந்தால் எந்தெந்தக் கட்சியில் யார் யார் போட்டியிடுவது என்பதில் தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இன்று கவலை அதிகம்.!

இவர்களில் இந்தத் தேர்தல் அரசியல் போக்கினால் தான் கதிர்காமர், அவர்கள் மத்தியிலாவது கெட்டிக்காரரென்று பெயரெடுத்திருக்கின்றார் என்று சொல்லலாமல்லவா?

*விசாரணை எதுவுமின்றி சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் நிலையை இன்று அவர்கள் சிறைகளில் ஆரம்பித்து நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தை வைத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெரும் போராட்டத்தை உருவாக்கி உலகறியச் செய்ய முன்வந்திருக்க வேண்டாமா! சிறையில் எந்தக் காரணமும் இல்லாமல் வாடும் தமிழ் இளைஞர்களின் பட்டியலொன்றைத் தயாரித்து அவர்கள் கைது செய்யப்பட்ட நாள் முதல் நடந்த விசாரணைகள், சித்திரவதைகள் குறித்து வெளிநாட்டுத் தூதக்ரங்களுக்கும் வெளிநாட்டு மனித உரிமைக்குழுக்கள், வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்து குரல் எழுப்ப வேண்டாமா!*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- விக்டர் ஐவன்

# ஜே.ஆர், பிரேமதாச, சந்திரிக்கவினூடே ரணில்வரை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்து சொற்ப காலமே ஆகின்றது. அவரைப் பற்றிய ஒரு அரசியல் மதிப்பீட்டைச் செய்வதற்கு மேலும் காலம் தேவைப்படினும் பெற்றுள்ள குறைந்தளவு அனுபவங்களைக் கொண்டேனும் அவரை ஆர்.பிரேமதாசாவுடனும் சந்திரிகா பண்டாரநாயக்காவுடனும் ஒப்பிட்டுப் பார்ப்பது நாட்டுக்குப் பிரயோசனமானதொரு விடயமாக அமையும்.

ஒரு இராஜாங்கத் தலைவரைப் பற்றி மேற்கொள்ளும் மதிப்பீட்டின் போது அந்தத் தலைவரின் அல்லது தலைவியின் இலக்குகளை, அவரது நம்பிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வேண்டி மேற்கொள்ளும் உபாய முறைகள், அந்த உபாய முறைகளைச் செயற்படுத்துவதற்காக வேண்டி அவருக்குள்ள நிபுணத்துவம், பரிபாலன முறைகள் என்பன பற்றியும் கவனம் கொள்ள வேண்டி வருகின்றது.


பாரதூரமான வரையறைகள் இருந்த போதிலும் ஜே.ஆர்.ஜயவர்த்தன சுதந்திரத்தின் பின்னர் உருவான ஒரு பெரிய தலைவர் என்றே கூறல் வேண்டும். ஒரு பெரிய தலைவராகக் கொள்ள முடிவது, பாரிய அளவில் சிந்தித்து அந்தப் பெரிய இலக்குகளுக்காக வேண்டிச் செயற்படும், அந்த இலக்குகளை வென்றெடுப்பதற்குத் திறன் கொண்ட தலைவர்களையேயாகும். இந்த அர்த்தத்தில் ஜே.ஆர்.ஜயவர்த்தன, பராக்கிரமபாகு, அலெக்ஸ்சாண்டர் அல்லது நெப்போலியன் போன்ற பென்னம் பெரிய தலைவர்களின் இடத்தில் சேர்க்க வேண்டிய ஒரு தலைவராவார். பின்லாடன் பாராட்டக் கூடிய ஒரு பயங்கரவாத இயக்கத் தலைவரல்லாவிடினும், போர் ரீதியாகப் பார்க்கும் போது அவரும் நெப்போலியனை விடவும் பாரிய அளவில் சிந்தனை செய்த பாரிய இலக்குகளை வென்றெடுப்பதால் வெற்றி கொண்ட ஒரு தலைவராகக் கொள்ள முடியும்.

ஜனாதிபதி பிரேமதாசாவும் பாரிய அளவில் சிந்தித்த ஒரு தலைவரே. அது ஜே.ஆர்.ஜயவர்தனாவிடம் பெற்றுக் கொண்ட அனுபவமாக இருக்க வேண்டும். இருந்தாலும் ஜே.ஆர்.ஜயவர்தனா வேகமான பொருளாதார அபிவிருத்தியைப் பற்றி மட்டுமே சிந்தித்தார். நாட்டுக்குப் பெற்றுக் கொடுக்கும் துரித அபிவிருத்தியைக் கொண்டு மட்டும் நாட்டில் நிலவும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியுமென நினைத்தார். இருந்தாலும் ஜனாதிபதி பிரேமதாசாவின் சிந்தனை அதற்கு வித்தியாசமானதாகவே இருந்தது. அதன் துரித அபிவிருத்தியைப் பற்றி சிந்தனை செய்தது மட்டுமல்லாமல் பொருளாதாரப் பயன்கள் அசாதாரணமான முறையில் பிரிந்து செல்வதைக் கருத்தில் கொண்டு குறுகிய அளவில் வரப்பிரசாதங்களைப் பெறும் மக்களை உயர்ந்த இடத்துக்கு எடுத்துச் செல்லும் செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் சென்றார்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனாவைப் போன்றே ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் நாட்டுக்காக வேண்டி ஒரு இலக்கு இருந்ததோடு தமது குடும்பம் மற்றும் நண்பர்களுக்காக வேண்டியும் ஒரு இலக்கு இருந்தது. ஜனாதிபதி சந்திரிகாவிற்கு தனது குடும்பத்தார்கள் நண்பர்கள் போன்றவர்களுக்கான ஓர் இலக்கு இருந்த போதிலும் நாட்டுக்காக வேண்டி எந்தவொரு இலக்கும் இருக்கவில்லை. மேற்கூறிய இரண்டு தலைவர்களுக்கும் சந்திரிகாவிற்குமிடையே நிலவிய முக்கியமான வித்தியாசம் அதுவேயாகும்.

நாட்டுக்கு எல்லா வகையான அபிவிருத்திகளையும் பெற்றுக் கொடுப்பது ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் பிரதான இலக்காக இருந்ததோடு அந்த இலக்கை வென்றெடுப்பதற்காக வேண்டி மேற்கொள்ளும் பயணத்தின் போது அதற்கான எதிராக வரும் எந்தவொரு நபரையும், இயக்கத்தையும், சக்தியையும் அடக்குவதற்கான நியாயமான உரிமை தனக்கு இருப்பதாக எல்லாச் சந்தர்ப்பத்திலும் அவர் நினைத்தார்.

தான் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவு செய்ய தனக்கு அதிக அளவு அதிகாரங்கள் தேவையென நம்பிய அவர் அதைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி அதி விஷேட தன்மைகள் கொண்ட அரசியல் முறையொன்றையும் உருவாக்கிக் கொண்டார். ஜே.ஆர். ஜயவர்தன நாட்டு மக்களுக்கு சர்வாதிகாரப் போக்குடைய ஒரு தலைவராக இருந்த போதிலும் தனது குழுவினருக்கு (அமைச்சர் சபைக்கு) ஜனநாயக ரீதியிலான ஒரு தலைவருமாக இருந்தார்.







பேராசிரியர் மு.ஆ.டு.சில்வாவின் ஆய்வின்படி ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனா தனக்காக பாரிய ஆலோசகர் சபையொன்றையும் நிர்வாகக்குழுவொன்றுடனும் கூடிய பெரிய ஜனாதிபதிச் செயலகம் ஒன்றை கொண்டு நடாத்த வேண்டுமென நினைத்தார். அவர் தனது அமைச்சர்கள் சபைக்கு, விவாதங்களுக்கும் சுதந்திரமான கருத்துக்களைத் தெரிவிக்கவும் சந்தர்ப்பத்தை வழங்கினார். அதிகாரங்களை தனது அமைச்சர் சபை அங்கத்தவர்களிடம் பிரித்துக் கொடுத்தார். நாட்டின் தலைவராக அவர் மேற் கொண்டது அவர்களின் செயற்பாடுகளைக் கவனமாகக் கவனிக்கும், தேவையான சந்தர்ப்பத்தில் அவர்களை வழி நடாத்தும் கொள்கையினூடாக மிகவும் நிம்மதியாக அரச இயந்திரத்தின் "ஸ்டியரிங்கினை"" சுழலவைக்கும் கொள்கையைப் பின்பற்றுவதே. அமைச்சர் சபையில் இருக்கும் திறமைசாலிகளுக்கு தனது திறமைகளைக் காட்டவும், அதனூடாக எதிர்காலத் தலைவர்களாவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் ஒரு தலைவருமாக இருந்தார். அவர் நாட்டுக்கு ஒரு சர்வாதிகாரத் தலைவராக இருந்து கொண்டு தனது குழுவினருக்கு ஒரு ஜனநாயகக் கொள்கையுடைய ஒரு தலைவராகச் செயற்பட்டதினால் அவருக்கு எதிராக உள்ளார்ந்த கிளர்ச்சிகள் ஏற்படச் சந்தர்ப்பம் இருக்கவில்லை.

ஜனாதிபதி பிரேமதாசாவின் முறை அதற்கு வித்தியாசமானதாகவே இருந்தது. எல்லா விதமான பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குமப்பால் குறைந்த வரப்பிரசாதங்களைப் பெற்ற மக்களை கரை சேர்ப்பதற்கான இலக்கொன்றும் அவருக்கு இருந்தது. இருந்தாலும் அவர் தனது சக்தி மீது மட்டுமேயொழிய தனது குழுவினரின் சக்தி மீது எந்தவிதமான நம்பிக்கைகளும் வைக்கவில்லை. அதிகாரங்களை தனது குழுவினரிடம் பகிர்ந்தளிக்கும் கொள்கைக்குப் பதிலாக அனைத்து அதிகாரங்களையும் தனது கையில் வைத்துக் கொண்டு அமைச்சரவைச் செயலாளர்கள் மூலமாக நாட்டைப் பரிபாலிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தார். அவர் தனது குழுவினருக்கு ஒரு சர்வாதிகாரராக இருந்த போதிலும் நாட்டு மக்களுக்குச் சர்வாதிகாரராக இருக்கவில்லை. அதனால் ஜே.ஆர்.ஜயவர்தனாவிற்கு எதிராக கிளர்ச்சி செய்யும் நிலைக்கு பொதுமக்கள் செல்லாதிருந்த போதும் தனது அமைச்சரவைக் குழுவினர் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் நிலைக்குச் சென்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஆட்சி முறைச் செயற்பாடுகள் ஜே.ஆர்.ஜயவர்தன, பிரேமதாசா இருவரினதும் செயற்பாடுகளை விட வித்தியாசமானதாக இருந்தது. அவருக்கு தன்னைச் சேர்ந்தவர்களை



> இத்தகைய நடவடிக்கைகள் சமுதாய வாழ்க்கையில் உடனடியாக ஏற்படுத்திய மாற்றத்தின் காரணமாக திரும்பவும் பழைய வாழ்க்கையை நோக்கிச் செல்ல விரும்பாத நிலைக்கு அயர்லாந்து சமுதாயம் மாற்றமடைந்தது. ரணில் விக்கிரமசிங்க வட பிரதேசம் சம்பந்தமாகப் பின்பற்றும் கொள்கைகளும் அதிக அளவில் அதற்குச் சமமாகவே உள்ளன.

அபிவிருத்தி செய்யும் கொள்கையைத் தவிர நாட்டை முன்னேற்றுவதற்காக எந்தவித செயற்திட்டங்களும் இருக்காததோடு, அவர் நாட்டை ஆட்சி செய்தது காலனித் தலைவரைப் போன்றேயாகும். அவர் ஒரே தடவையில் நாட்டுமக்களுக்கும் தனது குழுவினருக்கும் ஒரு சர்வாதிகாரப் போக்குடைய தலைவராக இருந்தார். அதனால் ஒரே முறையில் தனது குழுவினரதும், பொது மக்களினதும் எதிர்ப்புக்குள்ளான ஒரு தலைவராக இருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவை இந்த மூன்று தலைவர்களோடும் ஒப்பிடும் போது, இந்த மூன்று தலைவர்களுக்கும் விளையாடுவதற்காக வேண்டிக் கிடைத்த விளையாட்டு மைதானத்தில் நிலவும் வேறுபாடான தன்மைகளுடன் ஆரம்பித்தல் வேண்டும்.

ஜே.ஆர்.ஜயவர்தனவிற்கு நிறைவேற்று அதிகாரங்களுக்கும் மேலாக ஆறில் ஐந்து வீத பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலமும் இருந்தது. ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு நிறைவேற்று அதிகாரங்களுக்கு மேலாக ஆறில் ஐந்து வீத பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலம் இருக்காத போதும், ஓரளவு பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலம் இருந்தது. சந்திரிகாவிற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்குப் புறம்பாக சிறு அளவிலான பாராளுமன்றப் பலம் இருந்தது. இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்திருப்பது நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரங்கள் இல்லாமலேயே, அவருக்கு இருப்பது ஓரளவு பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலம் மட்டும்தான். இந்தக் கருத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்திருப்பது மேற்கூறிய மூன்று தலைவர்களுக்கும் கிடைத்திருந்த விளையாட்டு மைதானத்தை விட வித்தியாசமான, கஷ்டமான, மிகவும் சிக்கலான ஒரு விளையாட்டு மைதானமேயாகும் அவரது தலைமைத்துவத்தை இறுதியாகத் தீர்மானிப்பதும் அந்த நிலையேயாகும்.

அவர் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள இலக்குகளும் தனது விருப்பத்தினால் தேர்ந்தெடுத்துக் கொண்ட இலக்குகளை விட, தேர்ந்தெடுப்பதற்காக வேண்டி வற்புறுத்தப்பட்ட அல்லது தேர்ந்தெடுப்பதற்காக வேண்டி வேறு இலக்குகள் இல்லாததினால் தேர்ந்தெடுக்க வேண்டி வந்த இலக்குமாகும். அதாவது மிகவும் கெட்டுப் போன நிலைக்கு வந்துள்ள இனங்களுகடையிலான பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நாட்டைச் சீர் செய்வது அவர் முகம் கொடுக்கும் இலக்காக உள்ளது. இதற்கு முன்பு கூறிய தலைவர்களுள் மிகவும் சிக்கலான இலக்கை முகம் கொடுத்து வருவது ரணில் விக்கிரமசிங்கவே ஆவார்.

ஜே.ஆர்.ஜயவர்தன மூடி வைத்திருந்த பொருளாதாரத்தைத் திறந்துவிட்டார். அது அனைத்து அபிவிருத்திக்கும் காரணமாக அமைந்திருந்ததோடு, அந்த பொருளாதார அபிவிருத்திக்கு முன்னே செல்லச் சந்தர்ப்பம், வழங்கி வருமானத்தை பிரித்து செல்லும் படியாகச் சீர் செய்வது ஜனாதிபதி பிரேமதாசாவின் இலக்காக இருந்தது. அடுத்து பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்காவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் அரசியற் செயற்பாட்டிற்கு மேலும் உயிரூட்டி இனங்களிடையே நிலவும் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வகையில் ஜனநாயக செயற்பாடுகள் வளர்ச்சியுறும் படியிலான பரிபாலன முறையொன்றை ஏற்படுத்துவதே. அவர் இனப்பிரச்சினை சம்பந்தமாக அதிக முற்போக்குச் சிந்தனை கொண்டவராகப் பேசினாலும், நியாயமான தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக கடைபிடித்தது உள்ள பிரச்சினையினை இலகுவில் தீர்த்துக் கொள் முடியாத அளவுக்குச் சிக்கலான நிலைக்கு இட்டுச் செல்வதே. இவைகளனைத்தினதும் இறுதி முடிவாக அமைந்தது என்றும் இல்லாத அளவிற்கு நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டதேயாகும்.

தற்போதுள்ள நிலையின்படி நல்லதொரு பொருளாதார நிலையை நோக்கி செல்ல முடிவது நாட்டில் நிலவும் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க முடியுமாயின் மட்டுமேயாகும். தற்போது ரணில் விக்கிரமசிங்க முகம் கொடுத்துள்ளதும் அந்தச் சவாலையே. இருந்தாலும் அவர் நிறைவேற்று அதிகாரம் எதிரணியின் கைகளில் இருக்கவில்லையே அதை வெற்றிகொள்ள வேண்டியுள்ளது.

அவரை எதிர்நோக்கி வரும் இந்தச் சவால்கள் மிகக் கஷ்டமானதும் சிக்கலானதுமாகும். ஒரு புறத்தில் அவர் தனது குழுவினரையும், கட்சியையும் நாட்டு மக்களையும் திருப்தியுறும் நிலையில் வைத்துக் கொள்ளல் வேண்டும். மறுபுறத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எதிரணியையும் தனக்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்தாத நிலையில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

இருந்தாலும் இவர்கள் எவரையும் திருப்திபடுத்த முடியாத நிலையிலேயே தற்போது ரணில் விக்கிரமசிங்க உள்ளார். கட்சி, குழுவினர், பொது மக்கள் எல்லோரும் இருப்பது அதிருப்தியுள்ள நிலையிலேயே. நிறைவேற்று அதிகாரத்துடன் கூடிய எதிரணியினர் இருப்பதும் தடங்கல்களை ஏற்படுத்தக்கூடிய இடத்திலேயே.

தான் எப்போதாவது அதிகாரத்திற்கு வரும் ஒரு சந்தர்ப்பத்தில் தலையிட வேண்டிவரும் பிரதான பிரச்சினை இனங்களுக்கிடையிலான பிரச்சினையே என்பதை உணர்ந்து கொண்டு, அந்தப் பிரச்சினையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிரணிகளின் நம்பிக்கையைப் பழுதுபடுத்தும் செயல்களில் இருந்தும் தவிர்த்துக் கொண்டது ரணில் விக்கிரமசிங்கவிடம் காண முடிந்த நல்லதொரு பண்பாகவே இருந்தது. புலிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமொன்று பற்றிப் பேசிப் பேசி, ரணில் விக்கிரமசிங்க பற்றி ஒரு பயங்கரமான சித்திரமொன்றை எதிரணியினர் வரைந்து கொண்டிருந்தாலும், ரணில் விக்கிரமசிங்க அந்தக் குற்றச்சாட்டுக்களின் முன்னே பொறுத்திருக்கும் கொள்கையைக் கடைபிடித்தாரேயொழிய சிங்கள மக்களின் சந்தோஷத்துக்குக் காரணமான கொள்கையை நோக்கிச் செல்லவில்லை.

அதிகாரத்துக்கு வந்ததும் வட பிரதேசம் சம்பந்தமாக மேற்கொண்டுவந்த பொருளாதாரத் தடையை படிப்படியாகத் தளர்த்தும் கொள்கைக்குப் பதிலாக வேகமாகச் செல்லும் கொள்கையைக் கடைபிடித்ததும் அவரிடம் காண முடிந்த உறுதியான பிரவேச முறையொன்றெனவும் கூற முடியும். அவரது செயற்பாடு பிரித்தானியாவின் ஜோன் மேஜர் வட அயர்லாந்து சம்பந்தமாகப் பின்பற்றிய கொள்கைக்குச் சமமாகவே இருந்தன. ஜோன் மேஜர் வட அயர்லாந்தின் சில பிரதேசங்களுக்காக வேண்டி ஏற்படுத்தியிருந்த தடைகள் அனைத்தையும் ஒரு நாளில் தளர்த்திக் கொண்டார். எல்லா விதமான பாதைத் தடைகளையும் அப்புறப்படுத்திக் கொண்டார். அந்தச் செயற்பாடுகளின் வேகம் காரணமாகவே பொருளாதாரச் செயற்பாடுகள் உயிர் பெற்று நெடுங் காலங்களாக மூடிவிடப்பட்டிருந்த இரவு கால சமுதாய வாழ்க்கைக்குச் செல்ல அயர்லாந்து மக்களுக்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இந்த நடவடிக்கைகள் சமுதாய வாழ்க்கையில் உடனடியாக ஏற்படுத்திய மாற்றத்தின் காரணமாக திரும்பவும் பழைய வாழ்க்கையை நோக்கிச் செல்ல விரும்பாத நிலைக்கு அயர்லாந்து சமுதாயம் மாற்றமடைந்தது. ரணில் விக்கிரமசிங்க வட பிரதேசம் சம்பந்தமாகப் பின்பற்றும் கொள்கைகளும் அதிக அளவில் அதற்குச் சமமாகவே உள்ளன

(அடுத்த இதழில் முடியும்)

www.tamilarangam.net



## விடுபட்டுப் போய்விடக்கூடாத சில விடயங்கள் - 3

*சி. சகாதேவன்*

இலங்கையின் தமிழ்ச் சனங்கள் என்றுமே அவசரக்குடுக்கைகள். சண்டை நின்று போயிற்றே!... இனியென்ன பழைய நிலை உடனடியாக வர வேண்டியது தானே என்று அவசரப்படுகிறார்கள். யாழ். மாவட்ட மீனவர்களின் அவசரம்... மட்டக்களப்புப் படுவான் கரை மக்களின் அவசரம்... இவை எல்லாவற்றுக்கும் காரணம், அவர்கள் அகராதியில் "யுத்த நிறுத்தம்"" "சமாதானம்"" ஆகிய இரண்டுக்கும் கருத்து ஒன்று என இவர்கள் நினைக்கிறார்கள்... ஊடகங்கள் மூலம் "நினைக்க"" வைக்கப்படுகிறார்கள்.

இலங்கையின் நீண்ட கால இனக்குழும யுத்தத்தின் ஒரு மிகப்பெரிய அமிசம், யுத்தநிறுத்தங்கள், சமாதானத்துக்கெனச் செய்யப்படுவன - செய்யப்படுபவையாகச் சொல்லப்படுகின்றவையெனினும், இது வரை சமாதானம் நிறைவேற்றப்படவில்லை.

இலங்கையின் நீண்ட காலப் போர் காரணமாக, மக்கள் நிலையில் குறிப்பாக வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் நிலையில் ஒரு விடயம் முக்கியமாகிறது. அதாவது இவர்கள் இயல்பு நிலை வாழ்க்கையை ஒரு தலைமுறை காலமாக இழந்து போயிருப்பவர்கள். இந்த இயல்பு நிலை இழப்பு என்பது ஏதோ புகைவண்டியைக் காணாததும், பட்டர், சீஸ் போன்றவற்றை இழந்ததும் அல்ல, இந்த இழப்பு, தமது சீவனோபாய உழைப்பின் இயல்பை இழந்தமை, பிள்ளை தாயை இழந்தமை, தாய் பிள்ளையை இழந்தமையாகும். (05.02.2002 தமிழோசையில் வந்த தகவல்)

இவர்கள் "யுத்த நிறுத்தம்"" என்பதைக் குறைந்த பட்சம் "இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புதல்"" என்று கருதுகிறார்கள். உண்மையில் சமாதானம் என்பது அதற்குப் பின்னர் தான் வரும்"", வரவேண்டும். சமாதானம் என்பது இயல்பு நிலை வாழ்க்கையை ஊர்ஜிதம் செய்வதற்கான அரசியல் நிலை ஒழுங்கு படுத்தலாகும்.

இது 2001 டிசம்பர் 05இன் பின்னர் சரியாக இரண்டு மாதங்கள் 57 நாட்கள் ஓடி முடித்துவிட்ட பின்னர், இப்பொழுது முக்கியமான வினா அடக்க முடியாமல் மேலே கிளம்புகிறது.

பிரகடனங்கள், சொற்பொழிவுகள், செய்தியறிக்கைகளுக்கு மேலே எவை எவை நடந்துள்ளன என்பது பற்றிப் பார்க்கும் பொழுது தான் வரலாறு திரும்பவும் திரும்பவும் ஒரே மாதிரியாகப் போகிறதோ என்ற பயம் ஏற்படுகிறது.

யுத்த நிறுத்தம் இரண்டு பக்கத்தினாலும் அறிவிக்கப்பட்ட பின்னர் நடத்தவை என்ன என்பதைப் பார்ப்போம்.

புலிகள் தம்மீதான தடை நீக்கப்பட வேண்டும் - அப்பொழுது தான் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடக்கும் என்று கூறினர்.

(இது எங்கள் மீது. அதாவது முந்திய பேச்சுவார்த்தை முயற்சிக் காலத்திலேயே வற்புறுத்தப்பட்டதே)

இந்தக் கோரிக்கையை மையப்புள்ளியாகக் கொண்டு, சிங்கள இனவாத எதிர்ப்புக்கள் மேற்கிளம்பத் தொடங்கியுள்ளன.

சமாதானம் வேண்டும், பேச்சுவார்த்தை வேண்டும் என்ற தேர்தல் தீர்ப்புக்கு எதிர்க்குரல் காட்ட முடியாதிருந்த சிங்கள நிலைப்பாட்டு அரசியல் சக்திகள், இப்பொழுது, புலித்தடையை பிரச்சினை ஆக்க முயல்கின்றனர்.

இதில் ஒரு சுவாரசியமான நிலை என்னவென்றால், சமாதானம், பேச்சுவார்த்தை பற்றிப் பேசிய சிங்களச் சக்திகள் (வாசுதேவ, விக்கிரமபாகு போன்றறோரைத் தவிர, மற்றவர்கள்) பேசாதிருக்கின்றமையாகும். உதாரணமாக லலித் கொத்தலாவையின் ஸ்ரீ லங்கா First என்ற இயக்கம். இப்பொழுது எதையுமே பேசாதிருக்கின்றது. மக்கள் முன்னணியிடம் வகிக்கும் பொதுவுடைமைக் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி என்பன ஆரம்பத்தில் யுத்த நிறுத்தத்தை வரவேற்றதன் பின்னர் ஒன்றையும் பேசாதிருக்கின்றன.

சிங்கள மக்களைப் பொறுத்த வரையில், யுத்த நிறுத்தமே இயல்புநிலை நீட்சி தான். யுத்தம் நிறுத்தப்பட்டதும் சவப்பெட்டிகளின் வருகை நின்று விட்டது. சிங்களப் பகுதிகளிலிருந்த பாதைத் தடைகள் குறைந்து விட்டன. சாதாரண சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் யுத்தத்தின் அலைகள் இப்பொழுது அவர்கள் வீட்டு வாசல்கள் வரை வருவது நின்று விட்டது. இதனால் அரசாங்கத்திற்குள்ள அரசியல் நெருக்குதலும் குறைந்து விட்டது.

ஆனால் அதற்கு மேல் போவது பற்றி என்ன நடக்கின்றது?

நோர்வேயின் "அனுசரணைக்""கான எதிர்ப்பு இப்பொழுது இல்லை. அது ஒன்று தான் பெரிய காரியம்.

மற்றும்படி பழைய போக்குகள் சில மீளவருதலைக் காணக்கூடியதாக உள்ளது.

சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் புலிகளின் நேர்மை பற்றிய சந்தேகம் தொடர்ந்து கிளப்பப்படுகின்றது. சிங்கள மக்கள் மனதில், யுத்த நிறுத்தத்திற்கு மேல்வர வேண்டிய நடவடிக்கைகளுக்கான மனத்தயார் நிலையை இச்செயல் பெரிதும் பாதிக்கின்றது.

அதற்கும் மேலாக தமிழ்ப் பகுதிகளில் இயல்பு நிலைக்கு மீளுவதற்கென மேற்கொள்ளப் பட வேண்டிய நடவடிக்கைகள் சொல்வீச்சுக்களுக்கு மேல் செல்லாதுள்ளன.

இவ்வாறு பார்க்கும் பொழுது தான் ஒரு விடயம் படிப்படியாக நமது பிரக்ஞைக்குள் வருகின்றது. அது இது தான். யுத்த நிறுத்தத்துக்கு மேலே மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைப் பற்றிப் படையினர் என்ன நினைக்கிறார்கள் என்பதே அது.

இயல்பு நிலை மீட்சி காரணமாக படையினர் பெற்றுள்ள "வலுநிலை""கள் பாதிக்கப்படும். எனவே ஒரு கட்டத்துக்கு மேலே படையினர் இந்த நடவடிக்கைகளை விரும்ப மாட்டார்கள் என்பது புலனாகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் புலித்தடை எதிர்ப்பு கோஷத்துக்கும் படையினரிடையே அதற்குள்ள செல்வாக்குக்கும் (குறிப்பாக அடிநிலைச் சிப்பாய்களின் செல்வாக்குக்கும்) தொடர்பு உண்டு என்ற பி.பி.சி. நிருபர் ஹேஷ்யமாக கூறியது இந்நிலையில் முக்கியமாகிறது.

யு.என்.பி.யின் கையில் சனாதிபதி பதவியிருந்த காலத்திற்கூட இத்தகைய வேளைகளில் நடந்த முயற்சிகளின் நேர்மை பற்றிப் பலத்த சந்தேகங்கள் இருந்தன என்பதை நினைவு மீட்பது தவறல்ல. ஜே.ஆர். ஜயவர்த்தனா இந்தியாவைப் பயன்படுத்த முயன்றதையும், பிரேமதாசா பேச்சுவார்த்தை நடப்பது போலே வெளியே காட்டிக் கொண்டு, உள்ளுக்குள் 'பொறுங்கள், பொறுங்கள்" என்ற காலங் கடத்தியதையும் நினைவு கூரவேண்டுவது அவசியமாகும் தானே.

போதாததற்கு இம்முறை சனாதிபதிப் பதவி இவர்கள் கையில் இல்லை. சனாதிபதி அவர்களோ, அடிக்கடி போர் நிறுத்தம் சமாதான வருகை என்பன எனது அதிகாரத்துக்கு உட்பட்டது என்கிறார்.

தமிழ் மக்கள் இந்த 57 / 58 நாட்கள் இழுபறியை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும். என்று அரசாங்கம் எண்ணுகிறது?.

இவ்விடயம் பற்றித் தமிழ் மக்களுக்கு நிலையை விளக்க வேண்டியது பிரதமரின் கடமையில்லையா?

தமிழ் மக்களின் நியாயபூர்வமான சந்தேகங்களைப் பற்றிக் கவலைப்படாதிருந்து விட்டு தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவது பற்றி எவ்வாறு சிந்திக்க முடியும்?

தமிழ் மக்களின் அரசியற் பலமே புலிகளின் பலம் என்பதை இன்னும் தான் உணர முடியவில்லையா?

இதற்கு மேல் இன்னொரு முக்கிய உண்மை உண்டு.

யுத்த நிறுத்தம் என்பது சமாதானத்தைப் பேசுவதற்கான முதற்படியே. யுத்த நிறுத்தத்தையே சமாதானமாக்குவது எப்படி என்பது தான் அரசியற் சவால்.


அந்தச் சவாலுக்குள்ளே தான் ஸ்ரீலங்காவின் எதிர்காலம் தங்கியுள்ளது. இந்தப் பத்தியில் முன்னர் குறிப்பிட்டது போன்று "இலங்கை""யை இல்லாமல் ஆக்கிய ஸ்ரீலங்காவில் தமிழ், முஸ்லிம் மக்கள் நம்பிக்கை வைக்க மாட்டார்கள்.

சமாதானம் என்பது, இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களுக்கான இடம், அவரவர் இன அடையாள நிலைகளில் ஊர்ஜிதப்படுத்தப்படுவது தான்.

நாங்கள் தமிழர்களாகவும் இலங்கையர்களாகவும் இருக்க வேண்டும் இருக்க விரும்புகிறோம்.

இது தான் சமாதானத்துக்கான வழி, பணி.

# யுத்த நிறுத்தமும் இயல்பு நிலை மீட்சியும் சமாதானமும்



**இலங்கையின் நீண்ட காலப் போர் காரணமாக, மக்கள் நிலையில் குறிப்பாக வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் நிலையில் ஒரு விடயம் முக்கியமாகிறது. அதாவது இவர்கள் இயல்பு நிலை வாழ்க்கையை ஒரு தலைமுறை காலமாக இழந்து போயிருப்பவர்கள். இந்த இயல்பு நிலை இழப்பு என்பது ஏதோ புகைவண்டியைக் காணாததும், பட்டர், சீஸ் போன்றவற்றை இழந்ததும் அல்ல, இந்த இழப்பு, தமது சீவனோபாய உழைப்பின் இயல்பை இழந்தமை, பிள்ளை தாயை இழந்தமை, தாய் பிள்ளையை இழந்தமையாகும்.**

## கறுப்புக் கொடி பற்றி...

யாழ்ப்பாணத்துக்கும், இல்லை வடபகுதிக்கும் இலங்கைத் தேசியக் கொடிக்கும் பொருத்தமில்லை.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெற்ற கொண்டாட்டம் கொழும்பில் சுதந்திர சதுக்க மண்டபத்தில் பிரிட்டிஷ் கோமகன் முன்னிலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தென்னிலங்கையிலும் கொண்டாட்டங்கள் விமர்சையாகக் கொண்டாடப்பட்டன.

வடக்கிலும் கிழக்கிலும் ஜனவரி 30 ஆம் திகதி மாலை புதுடில்லியில் சுட்டுக் கொல்லப்பட்ட மகாத்மா காந்திக்குத் துக்கம் ஒரு மாத காலம் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கையின் தேசியக் கொடியாக சிங்கக் கொடியைத் தமிழ் மக்கள் ஏற்கமறுத்ததால் யாழ் மாநகர சபைக் கட்டிடத்தின் மீது இந்திய தேசிய மூவர்ணக் கொடியை கமிஷனர் சண்முகம் ஏற்றிவைத்தார்.

தமிழ்க் காங்கிரசார் நந்திக் கொடிகளை அச்சடித்து விநியோகித்தனர்.

சிங்கக் கொடியை, தேசியக் கொடியைத் தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை நிரூபிக்க வவுனியா எம்.பி. செ.சுந்தரலிங்கம் தமது எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்து உப தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு நாடாளுமன்றம் வந்தார்.

நாடாளுமன்றத்தில் சுந்தரலிங்கம் மீண்டும் வந்ததை ஆளும் கட்சி எம்.பி. ஒருவர் பார்த்ததும், நாடாளுமன்றக் கட்டிடத்தின் மீது சிங்கக்கொடி இன்னும் பறந்து கொண்டிருக்கின்றது என்பதை சைகைமூலம் காட்ட, "அதை இறக்கத்தானே வந்திருக்கிறேன்" என்று சுந்தரலிங்கமும் சைகை மூலம் காண்பித்தார்.

இதன் பின் நியமிக்கப்பட்ட குழு தேசியக் கொடியில் பச்சை, சிவப்புக் கோடுகளை இணைத்துக் கொண்டது.

ஆனாலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் காரணமாக ஒவ்வொரு சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போதும் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாண நகர மண்டபத்தின் மீது கறுப்புக் கொடியே பறக்க விடப்பட்டது.

1956 ஆம் ஆண்டில் திருகோணமலை மணிக் கூட்டுக் கோபுரத்தில் கறுப்புக் கொடி ஏற்றிய நடராசன் ஆயுதப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## "போர் முரசு" பிரசுரம்

புதிய அரசில் அங்கம் வகிக்கும் மலையகத் தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் மீண்டும் ஒரு கூட்டு சதி மூலம் தோட்டத் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்க முனையலாம். மீண்டுமொரு சில ரூபாய்கள் அற்ப கூலி உயர்வோடு பல வருடங்களுக்கு கூலி உயர்வும், தொழிலாளர் உரிமைகளும் நசுக்கப்படலாம். ஆகவே இப்போதிருந்தே எச்சரிக்கையுடன் இருப்போம்.

2002 ஜனவரி மாதம் உள்ள நிலவரப்படி ஒரு தோட்டத் தொழிலாளிக்கான தினசரிக் கூலி ரூபா 267.95 ஆக இருக்க வேண்டும். இதன்படி மாதம் 25 நாட்களுக்கு வேலை செய்யும் தொழிலாளர் ஒருவர் மாதம் ரூபா 6698.25 கூலியாகப் பெற வேண்டும். மேலும் புதிய விலைவாசி உயர்வுகள், பணவீக்கம் என்பனவும் கவனத்திலெடுக்கப்பட்டு தினக்கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும். இது மட்டுமல்லாது தோட்ட கம்பனிகள் பெறும் தேயிலை விலை, இலாபம், தொழிலாளரின் மேலதிக கொழுந்து சேகரிப்பு, வேலை நேரம் என்பனவும் கவனத்திலெடுக்கப்பட்டு கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளருக்கு எதிரான தொழிற் சங்க முதலாளிகள் தோட்ட முதலாளிகளின் துரோக ஒப்பந்தத்தை கிழித்தெறியவும், நியாயமான கூலியை பெற்றுக் கொள்ளவும், தோட்ட கம்பனிகளின் கொட்டத்தை அடக்கவும் அணி திரள்வோம்! என்று இளம் பாட்டாளிகள் கழகம் "போர் முரசு" துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள் மீதான தடை: அரசியற் தந்திரம் மாத்திரமே!

-சுனந்த தேசப்பிரிய




பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்கவுரையின் பெரும்பகுதி யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியதாயிருந்தது. யுத்தத்தினால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார, சமூக அவலங்களை சுட்டிக்காட்டி நாடு எதிர்கொண்டிருக்கும் உக்கிர பொருளாதார நெருக்கடி பற்றிக் குறிப்பிட்ட அவர், இதுவே சமாதானத்திற்காகக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் எனவும் குறிப்பிட்டார். அதைக் கைவிட்டுவிட தாம் தயாராயில்லை என்றும், இச்சந்தர்ப்பத்துடன் விளையாட நம்மில் யாருக்கும் உரிமையில்லை என்பதையும் விளக்கினார். யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அழுத்தங்கொடுக்கும் இரு பிரதான காரணிகள் பற்றி பிரதமர் தமதுரையில் மீள மீள தெளிவுபடுத்தினார். முதலாவது காரணி நாட்டில் உருவாகிவரும் பொருளாதார நெருக்கடியாகும். நீடித்த யுத்தத்தை தொடர்ந்தபடி இலங்கையின் பொருளாதாரத்தை கொண்டு நடாத்த வேண்டுமானால் பொதுமக்கள் மீது மென்மேலும் கடுஞ்சுமைகளை ஏற்றிட நேரிடும். தேசிய ரீதியாக நாம் பொருளாதாரத்தில் வீழ்ச்சிநிலையை முகங் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இரண்டாவதாக அழுத்தங் கொடுக்கும் காரணி சர்வதேச அபிப்பிராயமாகும். இது அவர் கூடுதல் நேரமெடுத்து விளக்கமளித்த காரணியாகும். சர்வதேச அபிப்பிராயமானது இந்த யுத்தம் பேச்சுவார்த்தை மூலமாக சமாதான வழிமுறையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என நம்மை நிர்ப்பந்திப்பதாக அவர் வெளிப்படையாக அறிவித்தார். இலங்கையில் இன யுத்தமானது அதன் ஆரம்பம் முதலே சர்வதேச கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தது. 1983 இலிருந்தே தென்னாசியாவின் பலமிக்கதான இந்தியா இவ்யுத்தத்தின் பங்குதாரராக செயற்படுகிறது. உலகின் ஏனைய வல்லாதிக்க நாடுகளும் இந்தப் பிரச்சினையை தமது சர்வதேச கொள்கையில் முக்கிய அங்கமாக்கிக் கொண்டுள்ளன. 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது. இலங்கையுடன் சம்பந்தப்பட்ட சர்வதேச சமூகம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செயலுக்கு வருவதற்கான ஒத்துழைப்புகளை வழங்க முன்வந்தது. அதன் பின்னர் 2000 நவம்பர் 1ம் திகதி நோர்வே சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் தோன்றினார். நோர்வே மத்தியத்துவத்தின் பாத்திரத்தை ஆரம்பம் முதலே நோர்வேயின் தனிப்பட்ட பிரயத்தனமாக பார்க்காது அது சர்வதேச சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே தாம் விளங்கிக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியபடி சமாதானத்திற்கான சர்வதேச அழுத்தம் இலங்கை அரசிற்கு மாத்திரமானதல்ல. தனித்து தேசிய அமைப்பாக மாத்திரமல்லாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச அழுத்தம் கடுமையாயுள்ளது. சர்வதேச ரீதியாக நற்பெயரை சம்பாதிக்காது தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வது கடினம் என்பதை அவர்கள் அறிவார்கள். சர்வதேச ரீதியான அங்கீகாரத்தை வென்றுகொள்ள முடிந்தால் அதுவே தமது போராட்ட நோக்கத்தின் அரைவாசியை வென்று கொண்டதாக அமையும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். எனினும் த.வி.புலிகள் அமைப்பு சர்வதேச சமூகத்தின் மட்டுப்படுத்தல்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளாவதே கடந்தகாலமனைத்தும் நடந்து வந்துள்ளது. அந்நிலைமையை மாற்றியமைப்பதற்கு த.வி.புலிகள் முன்னாலுள்ள ஒரேயொரு உபாயம் பேச்சுவார்த்தை மூலமான சமாதான தீர்வொன்றுக்கு தாம் தயார் என்றும், அதற்காக யுத்த வழிமுறையைக் கைவிட தயார் என்றும் காட்டிக்கொள்வதாகும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் மாற்று அரசாங்கமாக பாராளுமன்ற அரசியலில் கருதப்படும் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சிக்கும் (அப்படியாயின் பொதுசன முன்னணிக்கும்) இன்று சர்வதேச ஒத்துழைப்பும் உதவிகளும் பாதுகாப்பும் இன்றி இந்நாட்டை பாதுகாக்கவோ முன்கொண்டு செல்லவோ முடியாது. அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்த்தியான சொற்பொழிவுகளை ஆற்றினாலும், நிலவும் உலக நிலைமைக்கு புறமுதுகு காட்டுவது அரசாங்கத்தை கொண்டு நடாத்தும் அரசியல் கட்சிகளுக்கு முடியாத காரியமாகும். ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்கவுரை மாத்திரமல்ல பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்பதற்கு முன்னர் லக்ஷமன் கதிர்காமர் ஆற்றிய பதிலுரையிலும் வெளிப்பட்டது என்னவென்றால், இவ்விரு பிரதான அரசியல் கட்சிகளுமே யுத்தத்தை நிறுத்தி சமாதானத் தீர்வொன்றை ஏற்படுத்துவது அவசியமென்பதை ஏற்றுக்கொண்டிருப்பதாகும். அது சர்வதேச அபிப்பிராயத்திற்கான பிரதிபலிப்பாயுமிருக்கலாம். உண்மையிலேயே, ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை பொறுப்பேற்க அழைப்பு விடுக்க வேண்டுமென ஜனாதிபதிக்குக் கூறியது லக்ஷமன் கதிர்காமர் தான். பொதுசன முன்னணிக்கும் சர்வதேச சமூகத்தக்குமிடையிலான பிரதான இணைப்புக் கண்ணியாக செயற்படுபவர் இவராவார்.

> “
>
> இதுவரையில் இலங்கை அரசாங்கமும் த.வி.புலிகள் அமைப்பும் கடினமான பல தடைகளையும் கடந்து யுத்த நிறுத்தமொன்றை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இதன் பொருட்டு த.வி.புலிகள் எடுத்துக் கொள்ளும் முயற்சி சமாதான அபிலாஷைகளை வலுப்படுத்தவதாயுள்ளது. த.வி.புலிகள் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்கள் ஊடகவியலாளர்களுக்கு திறந்துவிடப்பட்டமை சாதகமான முன்னேற்றமாகும். ஒரு சந்தர்ப்பத்தில் ஆசிய தொலைக்காட்சி குழுவினரை ஆனையிறவு வரை அழைத்துச் செல்ல த.வி.பு. ஏற்பாடு செய்தனர். அவ்விளம் ஊடகவியலாளர்கள் குழுவுக்கு த.வி.புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்ச்செல்வத்துடன் நீண்ட உரையாடல் நடாத்தவும் வாய்ப்புக் கிடைத்தது. அதேபோல் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான A-9 எனப்படும் நெடுஞ்சாலையை போக்குவரத்துக்காக திறந்துவிடுவதற்கு த.வி.புலிகள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் த.வி.புலிகள் நிலையான யுத்த நிறுத்தத்தை விரும்புகின்றனர் என்பதைக் காட்டுகிறது.
>
> ”





எப்படியாயினும் சர்வதேச அபிப்பிராயம் சார்ந்து உரிய கவனத்தை செலுத்தும் அதேநேரம், தேசிய ஒருமைப்பாட்டையும், இணக்கப்பாட்டையும் வளர்த்தெடுப்பதற்காக கூடுதல் கவனம் குவிக்கப்பட வேண்டியதும் முக்கியமாகும். ஒரு நாடெனும் வகையில் நாம் சர்வதேச அழுத்தங்களுக்கு இந்தளவுக்கு வளைந்து கொடுக்க நேர்ந்திருப்பதற்கான பிரதான காரணம் நமக்கிடையே இனப்பிரச்சினையை சமாதானமாக தீர்த்துக்கொள்வதில் நாம் தோற்றுப்போயிருப்பதாகும். பிரதமரின் கொள்கை விளக்கவுரையில் தூக்கலாகத் தெரிந்த குறைபாடு என்னவென்றால், இனப்பிரச்சினை தீர்வுபொருட்டு தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்புவதற்கு தலையீடு செய்யவேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிடாததாகும். ஐ.தே.முன்னணி அரசாங்கம் தான் ஆட்சிப்பொறுப்பை ஏற்று 50 நாட்களுக்குள் யுத்தத்தை நிறுத்துவதற்காக, மிக முக்கியமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது உண்மையாகும். இலங்கை அரசாங்கத்தின் சமாதானத்திற்கான அர்ப்பணிப்பை இந்நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் காட்டுவதற்கு இச்செயற்பாடுகள் சான்றாவது உண்மையே. எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்கவுரையில் அதிகாரப்பரவலாக்கம் பற்றி கூறப்பட்டிருந்தாலும் அதிகாரப்பரவலாக்கம் ஏன் அவசியம் என்பது குறித்து கூறப்படவில்லை. சமாதானமான அரசியல் தீர்வொன்றுக்கு அதிகாரப் பரவலாக்கம் அடிப்படையாய் இருப்பதைப் போல், அதிகாரப்பரவலாக்கம் ஏன் தேவை என்பது குறித்து இந்நாட்டு பொதுமக்கள் மத்தியில் பொது உடன்பாடு உருவாவதும் அவசியமாகும். அதாவது இனப் பிரச்சினையின் மூலகாரணிகளாகும் 1977 காலத்திலேயே ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்நாட்டின் தமிழ் மக்கள் எதிர்கொண்டுவரும் முதன்மைப் பிரச்சினைகள் அடையாளங் காணப்பட்டிருந்தன. 20 ஆண்டுகாலமாக நீளும் யுத்தத்திற்கான மூலகாரணம் இந்நாட்டின் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்படாததே எனக் கூறுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒருபோதும் தயங்கியதில்லை. அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யானை, புலி ஒப்பந்தத்தின் மீதேறி கடும் பிரயத்தனங்களை எடுத்துக் கொண்ட நிலைமைகளிலும் அவர் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று சொல்வதை நிறுத்தவில்லை. புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் யுத்தத்திற்கு தீர்வு காணப்படவேண்டும் என்பதைப் போல் யுத்தத்திற்கான காரணங்களும் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

சர்வதேச அபிப்பிராயத்தை பெறுவதை தொடக்கப் புள்ளியாகக் கொண்டு நமது சமாதான பிரயத்தனங்கள் அமையுமாயின், இரு தரப்புமே உண்மையான சமாதான முயற்சிகளில் இறங்கியிருப்பது தாம்தான் என்பதை நிரூபிப்பதற்காக அதிக சிரமமெடுத்துக்கொள்ள நேரிடும். மற்ற தரப்பு நேர்மையாக இல்லை எனும் அபிப்பிராயத்தை ஏற்படுத்திடுவதற்காக செயற்படுவதன் மூலம் அத்தகைய நிலைமை மேலும் வளர்கிறது. கடந்த காலத்தில் நடைபெற்ற அனைத்து சமாதான பேச்சுவார்த்தைகளின் போதும் மற்றவர்கள் மீது தவறை சுமத்துவதற்கு காரணங்கள் தேடுவதே இரு தரப்பினதும் குறியாயிருந்தது. சமாதான முயற்சியின் ஆரம்பமே மற்றவரை அம்பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்குமாயின் சாதகமான பெறுபேறுகளை எதிர்பார்ப்பது கடினம். இரு தரப்பினரதும் நேர்மையை உறுதிப்படுத்துவதற்கு அளவுகோலாயிருக்கும் ஏற்புடைய விடயங்களை சமாதான செயன்முறையில் இணைப்பதுவே நடைபெற வேண்டும்.

அரசாங்கத்திற்கும் த.வி.புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்படவுள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது சமாதான முயற்சியின் முதற்கட்டமாய் அமையப் போவது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். அதிகாரப்பரவலாக்கம் சம்பந்தமான சர்ச்சைக்குரிய விடயங்களை விவாதத்திற்கெடுப்பதற்கு இன்னும் காலமிருக்கிறது. இன்று தேவையானதெல்லாம் நிலையான யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்திக்கொள்வதாகும். அத்தகைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் இருதரப்பும் பரஸ்பரம் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். மிகவும் முக்கியமான விடயம் என்னவென்றால், இந்தப் பிரச்சினை யுத்தத்தினாலன்றி பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்க்கப்பட வேண்டும் எனும் மக்கள் ஆணைக்கு எழுத்துருவம் வழங்குவதும் அதை செயலுக்கு கொண்டு வருவதுமாகும். யுத்தநிறுத்த ஒப்பந்தம் அத்தகையதொன்றாய் அமைந்திட வேண்டும்.

இதுவரையில் இலங்கை அரசாங்கமும் த.வி.புலிகள் அமைப்பும் கடினமான பல தடைகளையும் கடந்து யுத்த நிறுத்தமொன்றை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இதன் பொருட்டு த.வி.புலிகள் எடுத்துக் கொள்ளும் முயற்சி சமாதான அபிலாஷைகளை வலுப்படுத்துவதாயுள்ளது. த.வி.புலிகள் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்கள் ஊடகவியலாளர்களுக்கு திறந்துவிடப்பட்டமை சாதகமான முன்னேற்றமாகும். ஒரு சந்தர்ப்பத்தில் ஆசிய தொலைக்காட்சி குழுவினரை ஆனையிறவு வரை அழைத்துச் செல்ல த.வி.புலிகள் ஏற்பாடு செய்தனர். அவ்விளம் ஊடகவியலாளர்கள் குழுவுக்கு த.வி.புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்ச்செல்வத்துடன் நீண்ட உரையாடல் நடாத்தவும் வாய்ப்புக் கிடைத்தது. அதேபோல் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான A-9 எனப்படும் நெடுஞ்சாலையை போக்குவரத்துக்காக திறந்துவிடுவதற்கு த.வி.புலிகள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் த.வி.புலிகள் நிலையான யுத்த நிறுத்தத்தை விரும்புகின்றனர் என்பதைக் காட்டுகிறது.

எனினும், யுத்த நிறுத்தத்திற்காக அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என நாம் நினைக்கக் கூடாது. தென்பகுதியில் சமாதானத்திற்கு விரோதமான யுத்தநாட்டமுடைய சக்திகள் எழுப்பும் கோஷங்களுடன் ஒப்பிடுகையில் அவற்றிற்கு நிகராயில்லாவிட்டாலும் கூட இலங்கை அரசாங்கத்தை நம்ப முடியாது எனும் கருத்து த.வி.புலிகள் இடத்தில் காணப்படுகிறது. அதற்கான பிரதான காரணம் த.வி.புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவதற்கு அரசு வெளிப்படுத்திவரும் தயக்கமும், தெற்கில் யுத்த ஆர்வ அரசியல் சக்திகள் ஓரணியில் திரண்டு கொண்டிருப்பதுமாகும். ஜே.வி.பீயினாலும், பொதுசன முன்னணியில் ஜே.வி.பி. ஆதரவாளர் மங்கள சமரவீர பிரிவினராலும் மேற்கொள்ளப்படும் சமாதான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எதிர்காலத்தில் தீவிரமடையும். சிலநேரம் வன்முறை வடிவை நோக்கி வளர்ச்சி பெறவும் இடமிருப்பதாக தமிழ் அரசியல் தரப்பு கருதுவது தெரிகிறது.

தமிழீழ விடுதலை புலிகள் மீதான தடை பற்றின விவாதங்களுக்குள் சிக்காது நிலையான யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றிற்கு

தொடர்ச்சி 11ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பயங்கரவாதம் எது? பயங்கரவாதிகள் யார்?

- பாலரட்ணம்

இதன் குற்றத்தை மறைப்பதற்காக பிறர் மீது அதே குற்றத்தைச் சுமத்தி அதை வலியுறுத்துவது மிகமோசமான குணம் மட்டுமல்ல படுபோக்கிரித் தனமுமாகும். இந்தச் செயலைத்தான் இப்பொழுது மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி. தீவிரமாகச் செய்து வருகிறது.

இலங்கையில் பின்பற்றப்படும் "பெரும்பான்மை ஜனநாயகத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மார்க்ஸிய சித்தாந்தத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டே ஜே.வி.பி. பொதுத் தேர்தலில் போட்டியிட்டது.

பெரும்பான்மை மக்கள், மார்க்ஸிய சித்தாந்தத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்ட இதர சில கட்சிகளை ஏற்றுக் கொண்ட அளவுக்குக் கூட ஜே.வி.பியை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

ஆட்சி அதிகாரத்தை வேகமாகக் கைப்பற்ற வேண்டுமென்ற அவாவினால் 1971ஆம் ஆண்டில் ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கியது.

இந்தப் 'பயங்கரவாத' ஆயுதக் கிளர்ச்சியை அடக்கி "ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக" ஆட்சியிலிருந்தவர்கள் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். இதனால் சிங்கள இளைஞர்கள் பலர் கொன்று குவிக்கப்பட்டனர். அழகி மன்னம்பெரி கதிர்காமத்தில் படுமோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டது அரச பயங்கரவாதத்துக்கு ஒரு உதாரணம்!

அடக்கி ஒடுக்கப்பட்ட ஜே.வி.பியின் "பயங்கரவாதம்" நீறு பூத்த நெருப்பாக இருந்தது. இது மீண்டும் 1989ஆம் ஆண்டில் தலையெடுத்துத் தாண்டவமாடியது.

இதன் உச்சக்கட்ட நடவடிக்கைகளில் ஒன்று தான் இந்த நாட்டிலுள்ள பௌத்தர்கள் மட்டுமல்லாது உலகிலுள்ள பௌத்தர்கள் அனைவரும் வணங்கும் கண்டி, தலதா மாளிகை மீது ஜே.வி.பியினர் நடத்திய தாக்குதல்.

ஆலயத்தினுள் பக்தர்கள் போல் மலர்த்தட்டு ஏந்திச் சென்ற குழுவினர் "தொழுகையுள்ளும் படையொடுங்கும்" என்பது போல் கைத்துப்பாக்கியை மலர்த்தட்டினுள் மறைத்து எடுத்துச் சென்றனர்.

பாதுகாப்புப் பணியிலீடுபட்டிருந்தவர்கள் இதைக் கண்டு பிடித்துத் தொடர்ந்து நடந்த மோதலில் சிலர் கொல்லப்பட்டனர். வணக்கத்துக்குரிய புனித ஸ்தலத்தில் இரத்தக்கறை படிந்தது. இலங்கையின் வரலாற்றில் இது அழியாத வடுவை ஏற்படுத்தியது!

கடந்த பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது ஜே.வி.பியினரின் இந்த தலதா மாளிகைத் தாக்குதலை மூடிமறைத்து, பின்னர் ஒரு கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தலதா மாளிகை தாக்குதலை ஜே.வி.பியினரே "புலிகளின் பயங்கரவாதம்" என்று பட்டியலிட்டுப் "பயங்கரவாதத்தை" திசை திருப்ப முயன்றனர்.





இச்சமயத்தில் தான் ஜே.வி.பியில் கொள்கைக்காகத் தம்மை அர்ப்பணித்து உழைத்த சிங்கள இளைஞர்களில் ஒருவரான 'அதிகாரி' என்ற இளைஞர் தலதா மாளிகையினுள் ஜே.வி.பியினர் நடத்த முயன்ற தாக்குதலின் உண்மையை எடுத்துக் கூறிருயிந்தவர். ஜே.வி.பி. தலைவர்கள் நடத்திய வங்கிக் கொள்ளை மற்றும் கொள்ளைகள், ஆயுதம் திரட்டியது, ஜே.வி.பி. தலைவர்கள் கொள்ளையடித்த பணத்தைச் சுருட்டியது, ஆடம்பர மாளிகைகளில் அவர்கள் வாழ்ந்த உல்லாச வாழ்க்கை பற்றியெல்லாம் இந்த அதிகாரி என்ற இளைஞன் எடுத்துக் கூறியிருந்தான். (சண்டே லீடர், டிசம்பர் 02, 2001)

தலதா மாளிகை மீது தாங்கள் தாக்குதல் நடத்த நடத்தவில்லையென்று லண்டனில் அஞ்ஞாதவாசமாக உல்லாச வாழ்க்கை வாழும் ஜே.வி.பியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான சோமவன்ச அமரசிங்க, இலங்கையில் கடந்த தேர்தலில் ஜே.வி.பிக்காகவும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்காகவும் பேசுகையில் மறுத்து வந்தார்.

விடுதலைப் புலிகள் தான் தலதா மாளிகை மீது முதலில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் என்று சோமவன்ச அமரசிங்கவின் கூற்றை தலதா மாளிகை தயவர்தன நிலமே ரஞ்சன் விஜயரத்தினா மறுத்து முதலில் தாக்குதல் நடத்தியது ஜே.வி.பியினரே என்பதை ஆதாரத்துடன் எடுத்துக் கூறியிருந்தார். பௌத்த மத பீடாதிபதிக்களான மகாநாயக தேரர்களும் சோமவன்சவின் பொய்யை எதிர்த்து அறிக்கை விடுத்தனர்.

எப்படியோ கடந்த பொதுத் தேர்தலில் மீண்டும் பொது ஜன முன்னணிக்கு முண்டு கொடுத்து ஆட்சியதிகாரத்தில் பங்குபோட்டுக் கொள்ளலாம் என்ற ஜே.வி.பியின் "ஜனநாயக"கனவு பலிக்கவில்லை!

எனவே இப்பொழுது ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசும் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் போருக்கு முடிவு கட்டி சமாதானத்தைக் கொண்டு வரும் முயற்சியிலீடுபட்டு வருவதை ஜே.வி.பியினர் கடுமையாக எதிர்த்து நாடு முழுவதும் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், ஆர்ப்பாட்டங்கள் தெருக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் என்பன மூலம் எதிர்த்து வருகின்றனர்.

"விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தக் கூடாது. போர் மூலமே அவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும். தமிழர்களுக்கெனத் தாயக பூமி எதுவும் இல்லை. நாட்டில் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் என அனைவரும் சம உரிமையுடன் வாழ வேண்டும். நாட்டைப் பிரிக்கக் கூடாது."

இவைதான் ஜே.வி.பியினரின் இன்றைய கோஷம்! பிரசாரம்!

சிங்களப் பேரினவாதிகளின் கோஷங்கள் தான் இவை. மார்க்ஸியவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் ஜே.வி.பியும் இதையே தான் இன்று தூக்கிப் பிடித்து நிற்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை இவர்கள் பயங்கரவாதிகள் என்கிறார்கள்.

சிங்கள இளைஞர்கள் படித்தும் வேலைவாய்ப்பின்றி அலைந்து திரிந்தும், உயர்கல்வி பெறுவதில் அவர்களுக்கிருந்த பொருளாதாரக் கஷ்டம், வாழ்க்கைச் செலவு உயர்வு, கட்சி அரசியல் போக்கினால் வசதி வாய்ப்பு உள்ளவர்களுக்கே வேலை வாய்ப்பும், பொருளாதாரத்தை அதிகரிக்கும் வாய்ப்பும் இருந்ததும் சிங்கள இளைஞர்கள் மத்தியில் மனக்கொதிப்பையும் குமுறலையும் ஏற்படுத்தி வந்தது.

சிங்கள இளைஞர்களின் வாழ்க்கை வசதியை மேம்படுத்துவதற்கு இரண்டு பிரதான முதலாளித்துவ அரசியல் கட்சிகளைத் தொடர்ந்தும் நம்பியிருப்பதில் பயனில்லை என்ற நிலைக்கு சிங்கள இளைஞர்கள் தள்ளப்பட்டனர்.

இந்நிலையில் தான் ஜனநாயக ரீதியில் இருபெரும் முதலாளித்துவக் கட்சிகளையும் ஆட்சி அதிகாரத்துக்கு வராமல் தடுக்க முடியாதென்பதை சிங்கள இளைஞர்கள் உணர்ந்தனர்.


இதனால் ஆயுதப் புரட்சி மூலமே அதிகாரத்தைக் கைப்பற்றுவது தான் ஒரேவழியென்று றோகணவிஜேவீர என்ற இளைஞனின் தலைமையிலான "ஜாதிக விமுக்திப் பெரமுன" என்ற இயக்கம் தீர்மானித்தது.

இந்த நிலையில் தான் 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிந்து டட்லி சேனநாயக்க பிரதமர் பதவியிலிருந்து வெளியேறி சிறிமாபண்டாரநாயக்க புதிய பிரதமராகப் பதவியேற்ற சமயத்தில் ஜே.வி.பி.இளைஞர்கள் சிறிமா ஆட்சிக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

"பயங்கரவாதிகள்" ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தைக் காப்பாற்ற உதவுங்கள் என்று சிறிமா உலக நாடுகளிடம் ஆபத்து உதவி கோரினார். உடனடியாகவே இந்தியா உதவிக்கு வந்தது. பயங்கரவாதிகளான ஜே.வி.பியினர் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

தொடரும்...

---



# கூட்டமைப்பை நிறுவன மயப்படுத்துவதற்கான முயற்சிகளும் கட்சிகளின் தனித்துவம் பற்றிய வாதங்களும்

-ஏ. யதீந்திரா

தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி உருவாகிய நாளிலிருந்து இன்றுவரை அது தொடர்பில் பல்வேறு எதிர்வாதங்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஒற்றுமையணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளை வெளியிடுவதிலும், ஒருவர் மீது ஒருவர் வசைபாடுவதிலுமே கருத்தூன்றி செயற்பட்டு வருகின்றனர். நடந்து முடிந்த 2001ம் ஆண்டு பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மக்கள் ஏன் தங்களை ஆதரித்தனர்? அதன் பின் இருந்த மறைமுக சக்தி எது? என்பவற்றை இவர்கள் முழுமையாக மறந்து விட்டதாகவே தெரிகின்றது. மக்கள் தங்கள் மீது கொண்டிருக்கும் அபிப்பிராயத்தின் காரணமாகவே தங்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருப்பதாக கற்பிதம் செய்கின்றார்கள் போலும். இதனடிப்படையிலேயே கூட்டமைப்பை நிறுவனமயப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, கட்சிகளின் தனித்துவம் என்ன? இவர்களுக்கு ஏதாவது தனித்துவம் இருக்கின்றதா? இக்கேள்விகளுக்கு விடை தேடுவதற்கு முன்னர் தமிழ் தேசிய அரசியலில் இக்கூட்டமைப்பின் முக்கியத்துவம் என்ன? கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் பாரியளவில் மக்கள் ஆதரவை பெற்றதற்கான காரணங்கள் என்ன? போன்ற கேள்விகளுக்கு விடை தேடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

1977ம் ஆண்டிற்கு பின்னர் தேர்தல்களிலும், சனநாயக வழி அரசியல் தலைமைகளிலும் நம்பிக்கையற்றும், வெறுப்புற்றும் இருந்த தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஓர் அரசியல் எழுச்சியை ஏற்படுத்தியதில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரவேசம் மிகுந்த முக்கியத்துவமுடையது என்பதை எவரும் மறுக்க முடியாது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பின் வெற்றி அரசியல் ரீதியாக மிகுந்த முக்கியத்துவமுடைய தென்றே நாம் கருதலாம். ஏனெனில் கடந்த காலங்களில் பேரினவாதிகளுடன் இணைந்து போராட்டத்தை விமர்சித்துக் கொண்டிருந்த அன்னியமான பிரிவினர் இன்று விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொண்டு அவர்களே தமிழ் மக்களின் ஏகத்தலைமைகள் என்று கூறியதோடு மட்டுமல்லாமல், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்காக பேரினவாத அரசுகளுடன் என்ன நிபந்தனைகளை முன்வைத்தார்களோ அதே நிபந்தனைகளை கூட்டமைப்பு தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனமாக வெளியிட்டது. இதனடிப்படையிலேயே தமிழ்மக்கள் கூட்டமைப்பின்பால் ஈர்க்கப்பட்டனர். ஆகவே இங்கு கூட்டமைப்பின் வெற்றியை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை முழுமையாக ஆதரிக்கின்றார்களா இல்லையா என்ற கணக்கெடுப்பின் வெற்றியாகவும் கருத இடமுண்டு. 2000ம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்களால் ஆதரிக்கப்பட்ட பலர் இம்முறை தூக்கிவீசப்பட்டதன் காரணமும் இவையே.

இங்கு விடுதலைப் புலிகள் அடைந்திருக்கும் வெகுசன அரசியல் அந்தஸ்து விடுதலைப் புலிகளை பயங்கரவாதத்தோடு தொடர்புபடுத்திய தீவிரபிரச்சாரங்களை கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது. விடுதலைப் புலிகள் ஓர் பயங்கரவாத அமைப்பாக இருந்தால் ஏன் பலலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அவர்களை விரும்ப வேண்டும் என்று கேள்வி இனவாத சக்திகளை சிக்கலாக்குகின்றது.

இவ்வாறான பின்னணியில் சிலர் தமிழ் தேசிய கூட்டமைப்பை நிறுவனமயப்படுத்தி ஓர் தனித்துவமான சனநாயக சக்தியாக உருவாக்க வேண்டுமென்று சில தன்னார்வக் குழுக்கள் முயன்று வருகின்றன. உண்மையில் நாம் இந்த முயற்சியை வரலாற்று அனுபவத்தின் வெளிப்பாடாகவே புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் 1976 லும் இதேபோன்றதொரு கூட்டு உருவாக்கப்பட்டது. அப்போதிருந்த தமிழரசுக்கட்சி. இலங்கை தமிழ் காங்கிரஸ் (A.C.T.C.) இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (A.C.T.C.) ஆகிய மூன்றின் இரண்டு வீதம் தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமானது (T.U.L.F) தமிழீழ பிரகடனமும் முன்வைக்கப்பட்டது. ஆனால் 1977 தேர்தலில் வெற்றியீட்டி பாராளுமன்றத்திற்கு சென்ற பின்னர் பழைய குருடி கதவை திறடி என்பது போல மூன்று கட்சிகளும் தனித்தனியாக செயற்பட ஆரம்பித்தன. ஆகவே இவ்வாறானதொரு நிலைமை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் ஏற்பட்டுவிடக் கூடாது. மீண்டும் தமிழ் மக்கள் அரசியல் சாக்கடைக்குள் வீழ்ந்துவிடக் கூடாதென்ற எச்சரிக்கையுணர்வின் உந்துதலே தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி, தனிக் கட்சியாக பதிவு செய்ய வேண்டுமென்ற வாதங்களும், முயற்சிகளும்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின்போது ஆயுத வழியிலிருந்து சனநாயக வழிக்கு திரும்பிய இரு கட்சிகளும் பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்த போதும் தங்களை மிதவாத தலைமைகள் என்று கூறிவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஆகிய இரு கட்சிகளும் இம்முயற்சியால் தங்கள் கட்சிகளின் தனித்துவம் பாதிக்கப்படுமென்று கூறி நழுவி வருவதாகக் கூறப்படுகின்றது. இவ்விடயத்தில் முன் எழும் கேள்வி இவர்களுடைய தனித்துவம் என்ன? கடந்த காலங்களிலேனும் இவர்கள் ஏதாவது தனித்துவத்துடன் இருந்திருக்கின்றார்களா? தமிழர் விடுதலைக் கூட்டணியை பொறுத்த வரையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகளை தனிநாடு, மாகாணசபை, மாவட்ட சபை என இரண்டு வரிசையில் தேடிவந்த இவர்கள் தற்போது மக்கள் தங்களை தூக்கி வீசத் தயாராகிவிட்டார்கள் என்ற உண்மையை உணர்ந்து (திருக்கோணமலை அனுபவத்துடன்) தமிழ் தேசியவாதத்திற்கு தாவியிருக்கின்றனர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸைப் பொறுத்தவரையில் சைவவோளான அரசியல் நடாத்திய ஜி.ஜி.பொன்னம்பலத்தின் மறைவுக்கு பின்னர் குற்றுயிராகி சுருண்டு கிடந்த கட்சி குமார் பொன்னம்பலமென்ற தனிநபரின் செயற்பாட்டால் (தமிழ் தேசியவாதத்திற்கான பாய்ச்சல்) இன்று புத்துயிர் பெற்று பாராளுமன்றம் நுழைந்திருக்கின்றது. இவ்விரு கட்சிகளுமே இன்று தனித்துவம் பற்றி பேசுகின்றன. உண்மையில் கூட்டமைப்பில் உள்ள எந்தக் கட்சிக்கும் தனித்துவம் பற்றி பேசுவதற்கான அருகதை கிடையாது. விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள். பேச்சுவார்த்தையாயின் விடுதலைப்புலிகளோடு மட்டுமே பேசவேண்டும் என்று உரத்து குரல் எழுப்பி தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் இவர்களுக்கு தனித்துவம் பற்றி பேச என்ன தகுதியிருக்கின்றது. இந்த சிறு உண்மையைக்கூட இவர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களை மறந்து

தொடர்ச்சி 11ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளின் தலைவர்களை எப்படி கொல்ல முடிந்தது?

-என்.சரவணன்-

"வரலாற்று ரீதியான உரிமைபடைத்த சிங்களவர்களுக்கே தீர்மானிக்கின்ற உரிமை இருக்கிறது என்பதை ஏனைய இனத்தவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்...."

கொழும்பு நகரமெங்கும் "சிங்க சேனா பலகாய" (சிங்கள சேனைப்படை) எனும் பெயரில் சிங்கத்தின் படத்துடனான இந்த போஸ்டர் மூன்று நாட்களுக்கு முன் ஒட்டப்பட்டிருந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன் சிங்களத்தில் "தமிழர்களின் சுதந்திரத்தை வழங்காத வரை சிங்களவர்களும் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது..."

"..தமிழர்களுக்கென்று அபிலாசைகள் உண்டு அதனை ஏற்றுக்கொள்வது ஏனைய இனங்களினதும் கடமையாகும்."

என்கிற சுவரொட்டிகள் சிங்களத்தில் சில இடதுசாரி குழுக்களால் ஒட்டப்பட்டிருந்ததற்கு பதிலாகவே மேற்படி சிங்க சேனைப் படையின் போஸ்டரும் ஒட்டப்பட்டிருந்தது. இதனை ஆராய்ந்ததில் இது சிஹல உறுமயவின் புதிய முன்னணி அமைப்பு என்கிற தகவல் கிடைத்தது. சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும், புலிகளின் மீதான தடையை நீக்குவதற்கு எதிராகவுமே இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் சமாதானத்துக்கு ஆதரவான கோசங்களை-யுடைய சுவரொட்டிகளுக்கு பதிலளிக்கின்ற நோக்கில் இந்த சுவரொட்டி வேலைத்திட்டமும் அந்த அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இறுதியாக நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் சிஹல உறுமயவின் அத்தியாயம் முடிந்து விட்டதாக பல கதையாடல்கள் சிங்கள புத்திஜீவிகள் மற்றும் சமாதான விரும்பிகள் மத்தியில் நிலவிவருவதை அவதானிக்க முடிகிறது. இது ஒரு மாயையே.

இது எப்படி இருக்கிறது என்றால் 1994 பொதுத் தேர்தல் முடிவின் பின் சிங்கள இனவாதம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது, சமாதானம் வென்று விட்டது. சிங்கள இனவாதம் துடைத்தெறியப்பட்டாகிவிட்டது என்று அன்றைய "புலமைத்துவ" மட்டத்தில் இடம்பெற்ற கதையாடலை ஒத்ததே.

ஆனால் நடந்தது என்ன? சிங்கள இனவாதத்தை எதிர்ப்பதாக பாசாங்கு காட்டிக் கொண்டு பதவியிலமர்ந்த பொ.ஐ.மு ஆரம்பத்தில் சிங்கள இனவாத சக்திகளை எதிர்ப்பதாகக் காட்டிக்கொண்டது. பின் ஆட்சியதிகாரத்தை பிரயோகித்து அதே இன அடக்குமுறையை அதன் தலைமையிலேயே கொண்டு நடத்தியது. சிங்கள இனவாத சக்திகள் அரசுடன் போட்டி போட்டுக்கொண்டு சிங்கள பாசிச சக்தியாக தன்னை வடிவமைத்துக் கொண்டது. அரசு அதன் வலையில் படிப்படியாக விழுந்தது. அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடங்கி சமவாய்ப்புச் சட்டம் வரை பல சட்ட ரீதியான பூசிமெழுகல்களையும் கூட பாசிச சக்திகளுக்கு பணிந்து விட்டுக்கொடுத்தது. கைவிட்டது.

இலங்கையின் வரலாற்றில் எந்தக் காலமுமில்லாத அளவுக்கு பாசிச சக்திகள் தலை தூக்கியது பொ.ஐ.மு ஆட்சியிலேயே. இந்த பாசிச சக்திகளுக்கெல்லாம் தலைமை தாங்குகின்ற பாத்திரத்தை சிஹல உறுமய ஆற்றியது. அதன் வேலைத்திட்டங்கள் அனைவரையும் மலைக்கச் செய்யும் அளவுக்கு அமைந்திருந்தது. குறிப்பாக சிங்கள சிவில் சமூகத்தில் சிங்கள பௌத்த பாசிச கருத்தாக்கங்களை உற்பத்தி செய்து அதனை அப்படியே பரப்பி, விதைக்கின்ற பாத்திரத்தை அது ஆற்றியது. போரின் வலியை சிங்கள மக்களால் உணரவிடாதபடி அதற்கு மேலும் சிங்கள பௌத்த தூய்மை முதன்மையானது என்கின்ற சித்தாந்தத்தை பலமாகப் பரப்பி வந்தது. போரின் வலி மற்றும் போரின் அவசியம் என்பனவற்றுக்கு இடையில் அரசும் இந்த பாசிச சக்திகளும் தத்தமது பாத்திரத்தை ஆற்றின.

சிங்கள வீரவிதான உறுமயவின் வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக அதன் நேரடி அரசியல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி சிஹல உறுமய கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இனி தொலைந்தது என்று பலர் மத்தியிலும் அபிப்பிராயம் நிலவினாலும் கூட அதன் தொடர்ச்சியான உள்ளடக்கத்தை அவதானிக்கும் எவருக்கும் அதனைப் புரிந்து கொள்வதில் சிரமமிருக்கவில்லை.


பாராளுமன்ற அரசியல் தமது அடைவுக்குகான வடிவங்களில் ஒன்றே ஒழிய முழு வேலைத்திட்டமும் அதுவல்ல. அது அங்கம் மாத்திரமே என்று தெட்டத்தெளிவாக கூறிவந்தது.

பாராளுமன்ற அரசியல் வேலைமுறையில் அதற்கு இணையாக கோசங்களை முன்வைக்கின்ற "தகுதி", ஜே.வி.பி.க்கு மட்டுமே இருந்தது. 1999 தேர்தலில் ஒரே ஒரு உறுப்பினர் பதவியை அது பெற்றுக்கொண்டது. 2000 டிசம்பர் தேர்தலில் ஒரு பிரதிநிதித்துவத்தையும் அது பெறவில்லை என்கிற ஒரே காரணத்தைக் காட்டி, ஆக, "சிங்கள இனவாதத்துக்கு மரண அடி" என்கிற 94ஆண்டின் கண்மூடித்தனமான கருத்தை மீளவும் தூசு தட்டி முன்வைக்கின்றனர்.

இந்த இடைக் காலத்தில் ஜே.வி.பி. தன்னை பாராளுமன்ற அரசியலுக்கு இலகுவாகப் பலியான ஒரு கட்சியாக தன்னை வடிவமைத்துக் கொண்டிருந்தது. சிஹல உறுமயவின் அதே கோசங்களை தான் முன்வைத்தது. சிஹல உறுமயவுக்கு போட்டியாகவும் சிங்கள மக்களின் காவலனாகவும் தன்னை அப்படியே வெளிக் காட்டியது ஜே.வி.பி. பாராளுன்ற அரசியலில் ஜே.வி.பி.யுடன் போட்டியிட முடியாத நிலைக்கு சிஹல உறுமய தள்ளப்பட்டது. ஆனாலும் மூலோபாய இலக்குகளுக்கு பாராளுமன்ற அரசியலின் பாத்திரத்தின் அவசியத்தை உணர்ந்திருந்த சிஹல உறுமய தனது முயற்சியை கைவிடவில்லை. முடிவில் ஒரு பிரதிநிதித்துவத்தையும் பெற முடியாவிட்டாலும் அதன் முன்னைய மொத்த வாக்குகளை விட அதிக அளவு பெற்றிருப்பதை அவதானிக்க முடியும்.

சிஹல உறுமயவின் தாய் அமைப்பான சிங்கள வீரவிதான தான் அதன் அடிப்படை மைய அமைப்பு. அதன் முன்னணி அமைப்புகளாக பல அமைப்புகளை இது வரை கட்டி வந்திருக்கிறது. சிஹல உறுமயவின் ஆரம்பம் பல இனவாத அமைப்புகளினதும், சக்திகள், தனிநபர்களது சேர்க்கையாக இருந்தாலும் பின்னர் அதன் கிளைகளாக பலவேலைத் திட்டங்களுக்கென அமைப்புகளை உருவாக்கிக் கொண்டிருந்தது. சிங்கள சமூகத்தின் உட்கட்டுமானங்களை பலப்படுத்துவது உட்பட அதன் அரசியல் தலையீட்டுக்கான முன்னணிகள் பலவும் அமைக்கப்பட்டன. பயங்கரவாத எதிர்ப்பியக்கம், அரசியலமைப்பு எதிர்ப்பியக்கம், போன்றனவும் இதில் அடங்கும்.

சமீபத்தில் ஜே.வி.பி.யின் முன்னணி அமைப்புகளில் ஒன்றான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முயற்சியின் மூலம் "தேசப்பிரேமி வியாபாரய" (தேசபக்த இயக்கம்) என்கிற பெயரில் ஒன்றை உருவாக்குகின்ற முயற்சியில் இறங்கியிருக்கிறது. இதன் அடிப்படை நோக்கம் புலிகளுக்கு எதிரான தடையை நீக்க விடாமல் தடுப்பது, ஒற்றையாட்சியை பாதுகாப்பது சமாதான பேச்சுவார்த்தையை எதிர்ப்பது என்பனவே. 1987களில் ஜே.வி.பி. தலைமறைவாக இருந்து அடக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் பல மிரட்டல்கள், படுகொலைகளை புரிந்ததும் இந்த "தேசப்பிரேமி வியாபாரய" எனும் பெயரிலேயே என்பது கவனிக்கதக்கது. 13வது திருத்தச்சட்டத்துக்கு எதிராகவும், மாகாண சபைகள் முறைமைக்கு எதிராகவும் ஜே.வி.பி. இந்த பெயரிலான அமைப்பைக் கொண்டே நடவடிக்கை மேற்கொண்டது. மாகாண சபைக்கு போட்டியிட்ட மற்றும் அதற்கான தேர்தலில் வாக்களித்தவர்களையும் படுகொலை செய்தது தேசப்பிரேமி வியாபாரய எனும் பெயரிலேயே. சமீபத்தில் இலங்கை வந்து சென்ற ஜே.வி.பி.யின் தலைவர் சோமவங்ச அமரசிங்க ஒரு கூட்டத்தில் உரையாற்றியபோது முதற் தடவையாக அந்த அமைப்புக்கு உரிமை கோரியிருந்தார். அப்பெயரில் செய்த படுகொலைகள் குறித்தும் "வாக்குமூலம் கொடுத்தார்".



> "வீரபுரன் அப்பு" ஆங்கிலேயர்களுக்கு காட்டிக் கொடுக்கப்பட்டதன் பின்னர் சிங்களவர் செய்த பெரிய காட்டிக் கொடுப்பு மில்லேனியம் சிற்றி விடயத்தில் மகாசோன் (பெரும்பிசாசு)படையணியை காட்டிக்கொடுத்தது. இந்த மகாசோன் படையணி இருந்ததால் தான் புலிகளின் பல தலைவர்களை வேட்டையாட முடிந்தது. சங்கரைக் கொல்ல முடிந்தது. பால்ராஜ், சூசை, தமிழ்செல்வம், கருணா, சுவர்ணம், கங்கை அமரன் போன்றோரை கிலிகொள்ள வைத்திருப்பது இந்த படையணியே. இதனை சதிகார அமைப்பாக காட்டி படைவீரர்களுக்கெதிரான நடவடிக்கை எடுத்திருப்பது அரசாங்கத்தின் மிக மோசமான காட்டிக்கொடுப்பு என்கிறார் சம்பிக்க ரணவக்க.

இப்போது அதே பெயரில் ஆரம்பிக்கப்பட்டுவரும் அமைப்புக்கு மகா சங்கத்தினரின் ஆசி கிடைத்திருப்பது மட்டுமல்லாமல் ஏனைய அமைப்புக்களை ஒன்று திரட்டுவதில் மகா சங்கத்தினர் பிரதான பாத்திரத்தை ஆற்றி வருகின்றனர். பிரதான கட்சிகளுடனும் ஏனைய பல கட்சிகளுடனும் இதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதாக தகவல்கள் கிடைத்தபடி இருக்கின்றன. இது வரை தினேஸ் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியுடனான பேச்சுவார்த்தை முடிவடைந்து அதன் முழு சம்மதமும் கிடைத்திருக்கிறது. நளின் டி சில்வாவின் சிந்தக பர்ஷதயவும் இதனுடன் இணைந்திருக்கிறது.

ஜே.வி.பியின் இந்த முயற்சியுடன் சிஹல உறுமய இணையவில்லை. ஜே.வி.பி. தம்மை உள்ளிழுத்து விழுங்கி ஏப்பம் விட்டுவிடும் என்கிற பயமே இதற்கு காரணம். அது போல ஜே.வி.பி.யும் அதனை சேர்த்துக் கொள்ளாததற்கு காரணம் சிஹல உறுமயவுடன் நேரடியாக கூட்டுச் சேர்வதற்கூடாக நேரடியாக இனவாத முத்திரை குத்தப்பட்டுவிடும் என்கிற தயக்கமும், அதிகளவு தலையீட்டை தற்போது தம்முடன் கூட்டுச்சேர்ந்திருக்கின்ற அமைப்புகளுக்கூடாக சிஹல உறுமய பிரயோகிக்ககூடும் என்கிற பயமே.

பெப்ரவரி 28ஆம் திகதி சிஹல உறுமயவின் மத்தியகுழு நாரஹேன்பிட்டியவிலுள்ள அதன் தலைமையகத்தில் கூடியபோது அதில் கலந்து கொண்ட அதுரலியே ரத்தினஹிமி "அலரி மாளிகைக்கு ஊர்வலமாகப்போய் புலிகளைத் தடைசெய்யக்கோரி நடத்திய போராட்டங்களும், பிரச்சாரமுமே 1998இல் புலிகளை அரசாங்கம் தடை செய்யும் நிலைக்குத் தள்ளியது. இன்று நமது முயற்சிகள் பலனற்ற நிலைக்குத் தளள்ளப்பட்டுவிடக் கூடாது. தடையை நீக்க இடமளிக்கவிடவே கூடாது." என்றிருக்கிறார். இதற்காக நாடுமுழுவதும் கருத்தரங்குகள், போஸ்டர் ஒட்டும் இயக்கங்கள் ஏனைய பிரச்சாரங்களையும் செய்வதற்கான தீர்மானம் அங்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

புலி கண்காணிப்புக்கான மத்திய நிலையம் என்கிற பெயரில்அமைப்பொன்றினை சிஹல உறுமய நடத்தி வருகிறது. புலிகளின் செயற்பாடுகள் மற்றும் செய்திகள், அதன் கருத்துக்கள் என்பனவற்றை தொகுக்கின்ற, கண்காணிக்கின்ற அமைப்பாக இது இயங்கி வருகிறது. இதனை விட போர் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களுக்காகவென ரகசிய தகவல் சேகரிப்புக்காக "தேசிய விசாரணை வட்டம்" (ஜாதிக்க விமசீம் கவய) எனும் அமைப்பொன்றும் சம்பிக்க ரணவக்கவால் ஆரம்பிக்கப்பட்டு அது இயங்கி வருகிறது.

இவை சிங்கள சிவில் சமூகத்தில் உள் நுழைந்து பணிபுரியும் சிவில் அமைப்பாக இயங்கி வருகிறது. அரசின் உளவுச் சேவையும் இதுவும் பரஸ்பர ஒத்தாசைகளுடன் 1998 தொடக்கம் இயங்கிவருவதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

சமீபத்தில் மில்லேனியம் சிற்றி விவகாரத்தைப் பற்றி சம்பிக்க ரணவக்க மேற்படி கூட்டத்தில் பேசியிருந்ததைப் போலவே "லக்பிம" வாரஇதழில் சம்பிக்கவால் எழுதப்பட்டுவரும் பத்தியிலும் எழுதியிருக்கிறார். அதாவது "வீரபுரன் அப்பு" ஆங்கிலேயர்களுக்கு காட்டிக்கொடுக்கப்பட்டதன் பின்னர் சிங்களவர் செய்த பெரிய காட்டிக்கொடுப்பு மில்லேனியம் சிற்றி விடயத்தில் மகாசோன் (பெரும்பிசாசு) படையணியை காட்டிக் கொடுத்தது. இந்த மகாசோன் படையணி இருந்ததால் தான் புலிகளின் பல தலைவர்களை வேட்டையாட முடிந்தது. சங்கரைக் கொல்ல முடிந்தது. பால்ராஜ், சூசை, தமிழ்செல்வம், கருணா, சுவர்ணம், கங்கை அமரன் போன்றோரை கிலிகொள்ள வைத்திருப்பது இந்த படையணியே. இதனை சதிகார அமைப்பாக காட்டி படைவீரர்களுக்கெதிரான நடவடிக்கை எடுத்திருப்பது அரசாங்கத்தின் மிக மோசமான காட்டிக்கொடுப்பு என்கிறார் சம்பிக்க ரணவக்க.

எப்போதும் அடக்குமுறைகளைப் பற்றிய பார்வையில் நாம் விடும் மிகப்பெரும் தவறு அது எப்போதும் அதே வடிவத்தில் அதே பண்பில், அதே அளவில் இருக்கும் என்கிற எதிர்பார்ப்பு தான். தேசியம், பெண்ணியம், சாதியம் வர்க்கம் என எந்த விதமான மேலாதிக்கம் குறித்தும் நமது பார்வை இந்த வடிவத்தில் இருப்பதானது குறிப்பான பல விடைகளை அறிவதில் கோட்டை விட்டுகிறோம்.

பாசிசத்தின் நாளாந்த இயக்கம் மற்றும் அதன் வடிவங்களை அந்தந்த காலத்து அதன் தந்திரோபாயங்களோடு இணைத்தே பார்க்க வேண்டும். அதன் பின்வாங்கலை எப்போதும் அதன் முடிவாகக் கொள்ளக்கூடாது. அது வேறு வடிவங்களோடு வேறுவித தந்திரோபாயங்களோடும் நம்முன் வந்துகொண்டே இருக்கிறது என்பதில் எச்சரிக்கை கொள்ள வேண்டும். ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிகரி 2
NIHARI

நேர்கண்டவர் :
டேவிட் பர்சாமியன்
தமிழில்: ரவிக்குமார்

1935 இல் ஜெரூசலத்தில் பிறந்த எட்வர்ட் செய்த் நமது சமகால சிந்தனையாளர்களில் முக்கியமானவர்களுள் ஒரு-வராகக் கருதப்படுவர். தனது "ஓரியன்டலிசம்" நூலின் மூலம் உலகப் புகழ்பெற்ற அவர், ஏகாதிபத்தியத்தின் கலாசார செயல்பாடுகளை வெளிப்-படுத்திக் காட்டுவதில் முன்ன-ணியில் இருப்பவர்.

1963முதல் நியூயோர்க்கில் வாழ்ந்து வரும் செய்த், செப்டம-பர் 11 தாக்குதலுக்குப் பிறகு அது பற்றி முக்கியமான பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

பாலஸ்தீன மக்களின் முக்கியமான குரல்களில் ஒன்றாகக் கருதப்படும் செய்த், உடனான நேர்காணல் இது.



*காசா பகுதியில் மிகவும் ஒடுக்குமுறையான சூழலில் வாழும் இளைஞன் ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தச் சூழல் இஸ்ரேலினால் திணிக்கப்பட்டது. அவன் டைனமைட்டை உடம்பைச் சுற்றி கட்டிக் கொண்டு இஸ்ரேலியர்களின் கும்பல் மீது பாய்கிறான். நான் அதை ஆதரிக்கவும் மாட்டேன். பாராட்டவும் மாட்டேன். ஆனால், அதைப் புரிந்து கொள்ள முடியும். தனது சக மனிதர்கள், பலஸ்தீனிய மக்கள், தனது பெற்றோர்கள், சகோதரிகள், சகோதரர்கள் படுகாயப்படுத்தப்படுவதை, கொல்லப்படுவதை, வாழ்விலிருந்து தூக்கியெறியப்பட்டு அவஸ்த்தைக்குள்ளாக்கப்படுவதைப் பார்க்கிற அவநம்பிக்கை கொண்ட ஒரு மனித ஜீவியின் விருப்பம் அது. அவன் திருப்பித் தாக்கும் விதமாக எதையாவது செய்ய நினைக்கிறான். அநீதியாக நிர்ப்பந்திக்கப்பட்ட நிலைமைகளிலிருந்து விடுபட வேறுவழியின்றி தவிக்கும் ஒருவ னின் செயல்பாடாக அதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். அதை நான் ஒத்துக் கொள்ளவில்லை, ஆனால், அதை நான் புரிந்து கொள்கிறேன்.*

# 'பயங்கரவாதம்'

# அமெரிக்க எதிர்ப்பின் மறுபெயராகி விட்டது

***செப்டம்பர் 11ஆம் திகதி நடந்த நிகழ்வுகள், அமெரிக்கர்கள் பலரையும் திக்குத் தெரியாமல் குழம்பிப் போகச் செய்துள்ளன. உங்களது எதிர்வினை என்ன?***

நியூயோர்க்கில் வாழ்கிறவன் என்ற விதத்தில் அந்த நிகழ்வுகள் என்னை அதிர வைத்தன. பயங்கொள்ளச் செய்தன. குறிப்பாக அந்தச் சம்பவங்-களின் பரிமாண அடிப்படையில், அப்பாவி மக்களுக்கு இன்னல் விளைவிக்க வேண்டும் என்ற தணியாத வேட்கையை அது காட்டு-கிறது. அது, குறியீடுகளை நோக்கி ஏவப்பட்டுள்ளது. உலக வர்த்தக மையம் - அமெரிக்க முதலாளித்-துவத்தின் இதயம். பென்டகன் - அமெரிக்க இராணுவ தலைமையகம்.

ஆனால், அது விவாதிக்கப்படும் நோக்கத்தோடு செய்யப்படவில்லை, அது எந்தவொரு பேச்சுவார்த்தையின் பகுதியாகவும் இல்லை. அது எந்த செய்தியையும் சொல்லும் நோக்கம் கொண்டதல்ல. அது அதற்கானது. அந்த வகையில் வழக்கத்துக்கு மாறானது. அது அரசியல் தளத்தைத் தாண்டி, இயல் கடந்த நிலைக்குச் சென்று விட்டது.

உரையாடலிலோ, அரசியல் அமைப்பிலோ, இணக்கத்திலோ ஆர்வமில்லாத - அவற்றை மறுக்கிற ஒருவிதமான வெறிபிடித்த மனப்-பாங்கின் வெளிப்பாடு. அழிக்க வேண்டும் என்பது தவிர, வேறெந்த நோக்கமும் இல்லாத குரூரமான அழிவு அது. அந்தத் தாக்குதல்-களுக்கு இதுவரை எவரும் பொறுப்-பேற்கவில்லை என்பதை கவனியுங்-கள். கோரிக்கைகள் முன்வைக்கப்-படவில்லை. அறிக்கைகள் வெளி-யிடப்படவில்லை. அது, மவுனப் பயங்கரம்.

அது எதன் பகுதியும் அல்ல, அது இன்னொரு தளத்துக்குத் தாவிச் சென்று விட்டது பைத்தியக்காரத்-தனமான எல்லாவற்றையும் பூடகப்-படுத்துகிற, பொதுமைப்படுத்துகிற, சூக்குமப்படுத்துகிற தளத்துக்கு தாவிவிட்டது. தங்கள் நோக்கங்-களுக்காக இஸ்லாத்தைக் கடத்திச் சென்று விட்டவர்களால் ஆனது அந்தத் தளம். ஒரு மாதிரியான இயல் கடந்த நிலையிலான எதிர்வினையைச் செய்வதன் மூலம், அந்தப் பொறிக்-குள் மாட்டிக் கொண்டுவிடக் கூடாது என்பது முக்கியம்.

***அமெரிக்கா என்ன செய்ய வேண்டும்?***

அந்தப் பயங்கரமான நிகழ்வுக்கு நியாயமான எதிர்வினை - உலக மக்களிடம் செல்வது, ஐ.நா.சபைக்குச் செல்வது தான், சர்வதேச சட்ட-விதிகளை சீரமைத்திருக்க வேண்டும். ஆனால், அமெரிக்கா ஒரு போதும் அப்படிச் செய்வதில்லை. அதற்கான காலமும் கடந்து விட்டது.

அமெரிக்கா எல்லாவற்றையும் தனியாகவே செய்ய விரும்புகிறது. நாடுகளை முடித்து விடுவோம், பயங்கரவாதத்தை ஒழித்து விடுவோம் என்று நாம் சொன்னால், அதற்கு நீண்டகால யுத்தம் ஒன்றை நடத்த வேண்டும். பல ஆண்டுகள் பல்வேறு உபகரணங்கள் அதற்குத் தேவை. அது மிகவும் சிக்கலான போராக இருக்கும். ஆனால், பெரும்பாலான அமெரிக்கர்கள் அதற்குத் தயாராக இல்லை என நான் நினைக்கிறேன். தெளிவான இலக்கு ஒன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

ஒசாமா பின்லேடனின் அமைப்பு அவரிடமிருந்து கழன்று ஏறத்தாழ சுயேச்சையான அமைப்புப் போல் செயல்படுகிறது. இதில் நமக்குத் தெரியாத பலர் தோன்றலாம். மறுபடி எழலாம். அதற்காகத்தான் நன்கு தெளிவான, குறிப்பான, குறுகிய காலத்தில் முடிகிற, பொறுமையோடு கையாளப்படுகிற ஒரு திட்டம் தேவை என்கிறோம். அதற்கு, தீவிரவாதிகள் எங்கு இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவது மட்டும் போதாது. தீவிரவாதத்தின் மூலகாரணங்களைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

***அந்தக் காரணங்கள் எவை?***

இஸ்லாமிய உலகில் - எண்ணெய் உற்பத்தி செய்யும் உலகில், அரபு உலகில், மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்காவின் பொரு-ளாதார நலன்களுக்கும், இராணுவ நலன்களுக்கும் முக்கியமான இந்தப் பகுதிகளில் - வெகுகாலமாக நடந்-தேறிவரும் அமெரிக்கத் தலையீட்டின் இயங்கியல் வெளிப்பாடு அது.

இடையறாது நிகழ்ந்துவரும் இந்த பரஸ்பர செயல்பாடுகளில் - அமெரிக்கா மிக முக்கியமான பங்கினையாற்றி வருகிறது. அது. அமெரிக்கர்களில் பெரும்பா-லோருக்குத் தெரியாது அல்லது, அவர்களிடமிருந்து அது மறைக்கப்-பட்டுள்ளது.

இந்த இஸ்லாமிய உலகில் அமெரிக்கா இருவேறு விதங்களில் பார்க்கப்படுகிறது. அமெரிக்கா எவ்வளவு அசாதாரணமான நாடு என வியப்புடன் பார்க்கும் பார்வை ஒன்று. எனக்குத் தெரிந்த ஒவ்வொரு அராபியனும், முஸ்லிமும் அமெரிக்கா மீது ஆர்வத்தோடு தான் இருக்கிறான். பலர் தமது பிள்ளைகளை இங்கு படிப்பதற்காக அனுப்புகின்றனர். விடுமுறைகளைக் கழிக்க பலர் இங்கு வருகிறார்கள். அவர்களில் பலர் இங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர், அல்லது இங்கே வந்து பயிற்சி பெறுகிறார்கள்.

மற்றொரு பார்வை இருக்கிறது, அது அமெரிக்கா பற்றிய முறைமை-யான பார்வை, இராணுவங்களைக் கொண்ட அமெரிக்கா, இராணுவத் தலையீடுகளைச் செய்கிற அமெரிக்கா, 1953இல் ஈரானில் இருந்த மொஸ்-சாதே தேசிய அரசைக் கவிழ்த்த அமெரிக்கா, ஈராக் மக்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்து நாசம் செய்யும் அமெரிக்கா, பலஸ்தீனியர்களுக்கு எதிராக இஸ்ரேலை ஆதரிக்கும் அமெரிக்கா - அது பற்றிய பார்வை அது.

அந்த நாடுகளில் நீங்கள் வாழ்வீர்களேயானால் - அங்குள்ள மக்களின் விருப்பங்களுக்கும், ஆசைகளுக்கும், இச்சைகளுக்கும், எதிராக விடாப்பிடியாக அமெரிக்-காவின் இந்த நடவடிக்கைகள் அமைந்திருப்பதை உணர முடியும்.

அமெரிக்கா தனது கொள்கை-களாகக் கூறிக்கொள்கிற சனநாயம், சுயநிர்ணயஉரிமை, பேச்சுரிமை, கூடுவதற்கான உரிமை, சர்வதேச சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்-படையில் அதன் நடவடிக்கைகள் இல்லை எனவும், அதன் சுயநலத்-தின் அடிப்படையில் தான் அமெரிக்கா செயல்படுகிறது எனவும் அரபு மக்கள் எண்ணுகின்றனர்.

காசாவையும் மேற்குக் கரைப் பகுதியையும் கடந்த முப்பத்தி நான்கு ஆண்டுகளாக இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதை எந்த வித்திலும் நியாயப்படுத்த முடியாது. பலஸ்தீனப் பிரதேசங்களில், இஸ்ரேல் ஏற்படுத்தியுள்ள சுமார் நூற்று நாற்பது குடியேற்றப் பகுதிகளையும், அங்கு ஏறத்தாழ நான்கு இலட்சம் இஸ்ரேலியர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதையும் எதைக் கொண்டும் நியாயப்படுத்திவிட முடியாது.

இந்தக் காரியங்களெல்லாம் அமெரிக்காவின் பண உதவியோடும் ஆதரவோடும் தான் செயல்படுத்-தப்பட்டன. சர்வதேச சட்டங்-களுக்குக் கட்டுப்பட்டு நடக்கிற ஐ.நா.சபையின் தீர்மானங்களை மதித்து நடக்கிற செயல்களாக இவற்றை எப்படிச் சொல்ல முடியும்? இவற்றின் விளைவு, அமெரிக்கா குறித்த கிறுக்குத்தனமான ஒரு சித்திரிப்பு.

உண்மையில் மிகவும் துயரமான ஒரு பகுதிக்கு இப்போது நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். அரபு நாடுகளின் ஆட்சியாளர்கள், அடிப்படையில் மக்கள் ஆதரவு இல்லாதவர்கள். அந்நாட்டு மக்களின் விருப்பங்-களுக்கு எதிராக - அந்த ஆட்சி-யாளர்களை அமெரிக்கா ஆதரித்து வருகிறது.

வன்முறையும் அரசியலும் கலந்த, மக்கள் ஆதரவில்லாத இந்தச் சூழ்நிலையில் மக்களைக் கவர்ந்-துள்ள தலைவர்களுக்கு குறிப்பாக மதத்தின் பெயரால் பேசுகிறவர்-களுக்கு - அதுவும் இங்கே இஸ்லாமியரின் பெயரால் பேசுபவர்களுக்கு, அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போர் பற்றியும் ஏதோ ஒரு வகையில் அமெரிக்-காவை வீழ்த்த வேண்டும் என்பது பற்றியும் பேசுவது எளிதாகி விட்டது.

வேடிக்கை என்னவென்றால், அப்படிப் பேசுகிற பலர் - ஒசாமா பின் லேடன், முஜாகிதீன்கள் போன்றவர்களெல்லாம் - எண்பது-களின் துவக்கத்தில் ஆப்கானிலிருந்து சோவியத் யூனியனை வெளியேற்றம் பொருட்டு அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்பட்டவர்கள் தான். கடவுளற்ற கம்யூனிசத்துக்கு எதிராக இஸ்லாமை மோதவைப்பது - சோவியத் யூனியனுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் என கருதப்பட்டது. அது நடக்கவும் செய்தது. 1985இல் முஜாகிதீன்களின் குழு ஒன்று வாஷிங்டனுக்கு வந்த போது அவர்களை 'சுதந்திரப் போராளிகள்" என அப்போது அதிபராயிருந்த ரீகன் பாராட்டி வாழ்த்தினார்.

அவர்கள் முறையான அர்த்தத்தில் இமாம்களோ, ஷேக்குகளோ அல்ல. அவர்கள் இஸ்லாத்துக்காகப் போராடும் வீரர்களாக தங்களைத் தாங்களே அறிவித்துக் கொண்டவர்கள். ஒசாமா பின்லேடன், சவூதி அரேபியா-வைச் சேர்ந்தவர். அவர் தன்னை ஒரு தேசபக்தனாக உணர்வதற்கான காரணம், அங்கே அமெரிக்கப் படைகள் இருப்பது தான்.

சவூதி அரேபியா ஒரு புனிதமான தேசம். ஏனென்றால், அது இறைதூதர் முகமதுவின் தேசம். வெற்றிப் பெருமிதமும் கூட ஒரு காரணம். நாம் சோவியத் யூனியனை தோற்கடித்-தோம். அமெரிக்காவையும் தோற்-கடிக்க முடியும் என்கிற எண்ணம். இத்தகைய மூர்க்கத்தனத்திலிருந்து சீக்குப் பிடித்த மதவுணர்விலிருந்து மற்றவர்களைத் துன்புறுத்தும், மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கும் வெறி கிளம்புகிறது.

அப்பாவிகளைப் பற்றி, எதிலும் சம்பந்தப்படாதவர்களைப் பற்றி ஒருவித மரியாதையுமற்ற வெளி - அது தான் நியூயோர்க்கில் நடந்தது. இப்போது, இப்படி அதைப்புரிந்து கொள்வது என்பது அதை மன்னித்து விடுவதாகாது. என்னை அச்சுறுத்துகிற விஷயம் என்னவென்றால், நாம் இப்போது ஒருகால கட்டத்துக்குள் நுழைந்திருக்கிறோம், இப்படியான விஷயங்களை வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவித அனுதாபமும் இல்லாமல் அணுக வேண்டும் என்று கூறினால், உங்களை தேசபக்தியில்லாதவராகக் கருதுகிற காலகட்டம் இது. நீங்கள் விலக்கி வைக்கப்படுவீர்கள். இது மிகவும் ஆபத்தானவை. நாம் வாழுகிற உலகைச் சரியாகப் புரிந்து கொள்வதும், நாமும் ஒரு பகுதியாக இருக்கிற அதே சமயம் - நம்மால் உருவாக்கப்-படுகிற வரலாற்றை விளங்கிக் கொள்-வதும் நம்முடைய கடமையாகும்.

***'அநாகரீகமானவர்கள் எல்லோரையும் அழித்து விடுங்கள்" எனக் கூறும்போது சில அரசியல்வாதிகள் 'ஹார்ட் ஆப் டார்னஸ்" நாவலில் வரும் 'கர்ட்ஸ்" என்ற பாத்திரத்தை நினைவுபடுத்துகிறார்களில்லையா?***

ஆரம்பத்தில் சில நாட்கள் வரை ஒருவிதமான சித்திரிப்பு தான் முன்-வைக்கப்பட்டது. ஒரே விதமான விமர்சனங்கள் திரும்பத் திரும்ப செய்யப்பட்டன. மாறுபட்ட கருத்துக்-களை, பார்வைகளை, வியாக்கியானங்-களை முன்வைக்க சொற்பமான இடமே தரப்பட்டது. பயங்கரவாதம் என்ற சொல்லையே எடுத்துக் கொள்-வோம். அது இப்போது அமெரிக்க எதிர்ப்பு என்பதன் மறு பெயராகி விட்டது. அதுவே அமெரிக்கா பற்றிய விமர்சனத்தின் மறுபெயராகி விட்டது. இத்துடன் கூடவே தேசப்பற்று இல்லாமலிருப்பதன் மறுபெயராகவும் அது ஆகிவிட்டது. அது ஏற்கவே முடியாத ஒரு ஒப்பீடு.

பயங்கரவாதம் என்பது பற்றிய விளக்கம் மிகவும் துல்லியமாக இருக்க வேண்டும். அப்போது தான் இஸ்ரேலின் இராணுவ ஆக்கிரமிப்டை எதிர்த்துப் போராடும் பலஸ்தீனியர் களின் செயலை, உலக வர்த்தக மையத்தில் நடந்த தாக்குதலிலிருந்து நாம் வேறுபடுத்திப் பார்க்க முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு புத்தகம் தேவை!

-நூறுல் ஹக்

பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையில் காணப்படவும், பேணப்படவும் வேண்டிய பண்புகள் பற்றியும், உளவியல் ரீதியான ஆய்வின் அடிப்படையிலும் நமது நாட்டிலிருந்து போதிய நூல்கள் வெளிவரவில்லை.

பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்குமிடையில் பேணப்பட வேண்டிய பக்குவங்களையும், நிலவ வேண்டிய உறவுகளையும் சித்திரிக்கும் தமிழ் மொழியிலான நூல் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஓரிரண்டு வெளிவந்திருந்தாலும் அவை ஒரு பரிபூரணமான விளக்கங்களை ஊட்டுவனவாக அமைந்திருக்கவில்லை.

இத்தகைய குறைகளை அகற்றுவதிலும், போதிய தகவல்களையும் நேரிய வழிகாட்டல்களையும் வழங்கும் வகையிலும் தமிழுக்கு கிடைத்திருக்கும் அரியதொரு நூல் தான் "குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே" என்பதாகும்.

ஊன்றி வாசிப்பதை அழுத்தப்படுத்தும் வகையிலான மொழிநடையில் விக்னேஸ்வரன் தமிழ்படுத்தி இருக்கும் இந்நூலின் உள்ளடக்கங்கள் பின்வரும் தலைப்புக்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

"குழந்தைகளுடன் உரையாடுதல், பாராட்டுதலும் விமர்சித்தலும் : புதிய வழி முறைகள், சுய தோல்வியைத் தரக்கூடிய மாதிரிகளைத் தவிர்த்தல், பொறுப்புணர்வும் சுதந்திரமும், கட்டுப்பாட்டொழுங்கு : அனுமதிக்கக்கூடிய அளவும் அதன் எல்லையும், குழந்தையின் வாழ்வில் ஒரு நாள், பொறாமை, குழந்தைகளின் பரப்புக்கான சில ஏதுக்கள், பாலியற்கல்வி, பாலியற் பாத்திரமும் சமூகச் செயற்பாடும், நிபுணத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள், நிபுணத்துவ உதவி தேவைப்படும் பெற்றோர்"

மேற்படிய பன்னிரெண்டு அத்தியாயங்களின் தலைப்புக்களே இந்நூலின் அவசியத்தையும், அது கொண்டிருக்கும் காத்திரமான சீர்திருத்தப் பார்வைகளையும், அது எத்தகைய தாக்கங்களை பாதிப்புக்களை ஏற்படுத்தவல்லன என்பதையும் துல்லியமாகப் புலப்படுத்தி வைக்கின்றது.

குழந்தைச் செல்வம் பெறுவதற்கரிதான பாக்கியம் என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது. அதற்காக வேண்டி குழந்தைகளைப் பெற்றெடுத்தால் மட்டும் போதுமான தொழிற்பாடென்று எண்ணி வாழ்தலும் துணிதலும் ஓர் ஆரோக்கியமான பாரம்பரியம் அல்ல.

குழந்தைகளின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் பாரிய பங்கினை பெற்றோர்களும், அயலவர்களும், வளரும் சூழலும் நிர்ணயிக்கின்றன. அந்த வகையில் முதற்தர வழிகாட்டிகளாக பெற்றோர்கள் திகழ்கின்றனர். ஆயின், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே முறையான உறவு நிலவுவது இன்றியமையாததாகும்.

ஆரம்பப் பதிவுகள் தழும்பானவை. அவை சரியாகவும், உறுதியாகவும் பதியப்பட வைப்பதில் பெற்றோர்கள் போதிய கவனங்களைக் கொண்டிருக்க வேண்டும் அப்போது தான் பேர் சொல்லும் பிள்ளைகளாகவும், நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டியங்கும் நற்குணமுடையோர்களாகவும் குழந்தைகள் வளர்ந்து, வளமுடையோர்களாகவும் திகழ வழி வகுக்கும்.

மூல நூலாசிரியர் பதினைந்து ஆண்டுகள் பெற்றோர்களுடனும், சிறுவர்களுடனும் தனி நபராகவும், குழுக்களாகவும், வழிகாட்டியாகவும், [illegible]வியலாளராகவும் [illegible]ணைந்து பழகிய அனுபவத்தின் அடிப்படையிலும் நின்று இந்நூலாக்கத்தை மேற்கொண்டிருக்கிறார். எனில், ஆழமான கருத்துக்களும், பயனுள்ள போதனைகளைக் கொண்ட வழிகாட்டல்களும் இந்நூலில் நிறைந்து இருப்பதற்கு அநேக சாத்தியங்களைக் கொண்டிருக்கின்றன.

அனுபவத்தைப் போன்ற நல்ல ஆசான் வேறொன்றுமில்லை என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இவ்வாறான முறையான தேடலிலிருந்து ஆக்கப்பட்ட இந்நூல் "பெற்றோர்களுக்கு குழந்தைகள் தொடர்பான தமது இலட்சியங்கள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வைப்பதிலும், அந்த இலட்சிங்களை அடைய வேண்டிய ஆலோசனைகளைப் பரிந்துரை செய்வதிலும் "பாரிய வெற்றிகளைக் கொண்டிருக்கின்றன.

பண்பட்ட பண்பாடும், சீரிய கலாசாரமும்,, ஒழுக்கம் நிறைந்தோங்கும் சூழலில் வளரும் பிள்ளைகள் மிக எளிதாகவே நற்பிரஜைகளாக வளர்வதற்கும், உயர்வுகள் பெறுவதற்கும் தகுந்த ஊடகமாக அமைகின்றன. அத்தகைய சூழலினை பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்-




பதில் பெற்றோர்கள் பின்னிற்காத பண்பு அத்தியாவசியமாகின்றது.

அதுமட்டுமன்றி, பெற்றோர்களின் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் மத்தியில் பெற்றெடுக்கப்படுகின்ற தமது பிள்ளைகளின் வளர்ப்பில் பெற்றோர்களின் வாழ்வு முறைமைகளும், குண இயல்புகளும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற ஒன்றாக இருப்பதையும் பெற்றோர்கள் தமது கவனங்களிலிருத்திக் கொள்ளல் ஏதுவான மாற்று நடவடிக்கைகளுக்கு வழிகோரக் கூடியதாகும்.

பிள்ளைகளின் முன்னால் பெற்றோர்கள் தமது உறவுமுறைமைகளும், அணுகுமுறைமைகளும் உரையாடல்களும், பழக்க வழக்கங்களும் சீர்கொண்டதாக மேற்கொள்ளும் அவதானங்கள் வேண்டற்பாலான நடவடிக்கைகளாகும். அதேநேரம் பிள்ளைகளின் முன்னால் தவிர்க்கப்பட வேண்டிய செயற்பாடுகளையும் இனங்கண்டு அதனைப் பேணுவதும் நல்ல குழந்தைகளை உருவாக்குவதன் பின்புலங்களைச் சார்ந்தவைகளாகும்.

குழந்தைகளின் குறும்புத்தனங்களையும், பிடிவாதக் குணங்களையும் அன்பான முறையில் சரி செய்வதிலும் கரிசனை கொள்ளல் வேண்டும். மாறாக அதட்டல், மிரட்டல், அடித்தல் போன்ற பாங்கினை கைக்கொள்ளல் இன்னுமின்னும் முரண்பாட்டிலும், பிடிவாதத்திலும் அணுங்குப்பிடியாக மாறும் அபாயம் நிறைந்தவையாகும்.

குழந்தை வளர்ப்பில் "தண்டனை" வழங்கும் முறைமை - கோட்பாடு என்பது அர்த்தமற்ற ஒன்றாகவும், மாபெரிய உளவியல் பாதிப்பை நல்கக் கூடியது எனவும் கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பாரம்பரியத்தைக் கைக்கொள்வதிலிருந்து பெற்றோர்கள் விலகிவாழ வேண்டிய கட்டாயத்தை நவீன யுகம் கற்றுத் தந்துள்ளது.

சிறந்த செல்வங்களைத் தமது பிள்ளைகளை எவ்வாறு வளர்த்தெடுப்பது என்பதை இந்நூல் பரீட்சார்த்தமாகப் பேசுவதுடனன், பிள்ளை வளர்ப்பில் காணப்படும் நெளிவு, சுளிவுகளை அக்குவேறு, ஆணிவேறாகப் புடம் போட்டுக் காட்டுகின்றது. அதன் வழிகளில் நெறிப்படுத்தப்படுகின்ற போது சிறந்த குழந்தைகளை சமூகத்திற்கு வழங்கிய பெற்றோர்களாக மற்றவர்களினால் மதிக்கப்படுவதும் நேருகின்றது. இத்தகைய பெறுபேற்றை பெற்றோர்கள் தமதாக்கிக் கொள்வதற்கு உகந்ததொரு உரைகல்லாகவும் இந்நூல் பணியாற்றுகின்றது.

இந்நூலின் பதிப்புரையில் பதிப்பாளர் எம்.பௌசர் சுட்டிக்காட்டும் பின்வரும் வரிகள் சீர்தூக்கிப் பார்க்கப்படுவதோடு, அதன் வழியில் மாற்றங்களை நோக்கிப் பயணிப்பதுமே இந்நூலின் வாசிப்பு ஏற்படுத்தும் தாக்கமென்றும் நம்பலாம்.

"குழந்தை வளர்ப்பை பேணுகையை ஒரு கல்வியியல், உளவியல் அனுபவமாகத்தராத, மிக அக்கறையுடன் பார்க்கப்பட வேண்டிய விடயமாகக் கருதாத, நமது தமிழ்ச் சூழலின் பாரம்பரியமான குழந்தை வளர்ப்பு அணுகுமுறைகளும், பெற்றோர்களின் சமூக நிலை அதிகாரங்களும் தொடர்ந்தும் பல சந்ததிகளுக்கும் கைமாறிக் கொண்டே வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே பெற்றோர்கள் தங்கள் பீடங்களில் வீற்றிருக்கின்றனர். இந்த வேர் கொண்ட பீடங்களைத் தகத்து - குழந்தைகளும், பெற்றோர்களும் அகத்தாலும், புறத்தாலும் மிக நெருங்கி வர வேண்டிய தேவையை நாம் உணர்கிறோம். இது நமது வாழ்வின் மிக அடிப்படையான விடயமும் கூட." (பக்கம் iv)

இந்நூலிற்கான முன்னுரையை கனடா யோர்க் பல்கலைக்கழக சமூகவியல் துறை பேராசிரியர் சேரன் வழங்கி இருக்கின்றார். அதனூடாக அரிய பல கருத்துக்களையும் வெளிப்படுத்தி இருக்கின்றார். இந்நூலின் அட்டைப்படத்தை எம்.கே.எம்.ஷகீப் தேர்ந்தெடுத்து மெருகூட்டியிருக்கின்றார்.

இலங்கையில் அதிக நூற்களைப் பதிப்பித்த பெருமையை பல பதிப்பகங்கள் பெற்றிருக்கின்றன. ஆனால், குறுகிய காலத்துள்ளும், வித்தியாசமான துறைகளில் கவனஞ்செலுத்தி, மாறுபட்ட கருத்துக்களை முன்வைக்கும் வகையில் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகங்கள் மிகக் குறைவே.

இத்தகைய சூழலிலும், நூல் பதிப்பித்தலில் காணப்படும் தடைகளையும் தாங்கி "மூன்றாவது மனிதன் பதிப்பகம்" பதினொரு நூல்களை வித்தியாசமான கருத்தேடல்களில் கவனஞ்செலுத்தி வெளிக்கொணர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பதிப்பக வெளியீடாக இந்நூல் வெளிவந்திருப்பதும் இந்நூலிற்கான சிறப்புக்களில் வலுசேர்க்கக்கூடியதே.

ஒவ்வொரு பெற்றோர்களும், ஒவ்வொரு வீடுகளிலும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு நூலாகவும், வாசிப்பதன் மூலம் பயனுள்ள கருத்துக்களையும், வழிமுறைகளையும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்ற ஒரு நூலாகவும் இது இருப்பு கொண்டிருப்பது இந் நூலிற்கான இன்னொரு வெற்றியும், சிறப்புமாகும்.

குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே
மூலநூலாசிரியர் :
டொக்டர் ஹேய்ம் ஜி இனோட்
தமிழில் :
எஸ்.கே.விக்னேஸ்வரன்
வெளியீடு :
மூன்றாவது மனிதன் பதிப்பகம்,
37/14 வொக்ஷல் தெரு,
கொழும்பு - 02
விலை : 200/=

# 'பயங்கரவாதம்'...

## Iம் பக்கத் தொடர்ச்சி

***நீங்கள் சுட்டிக்காட்ட விரும்பும் வேறுபாடு என்ன?***

காசா பகுதியில் மிகவும் ஒடுக்கு முறையான சூழலில் வாழும் இளைஞன் ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தச் சூழல் இஸ்ரேலில் திணிக்கப்பட்டது. அவன் டைனமைட்டை உடம்பைச் சுற்றி கட்டிக் கொண்டு இஸ்ரேலியர்களின் கும்பல் மீது பாய்கிறான். நான் அதை ஆதரிக்கவும் மாட்டேன். பாராட்டவும் மாட்டேன். ஆனால், அதைப் புரிந்து கொள்ள முடியும்.

தனது சக மனிதர்கள், பலஸ்தீனிய மக்கள், தனது பெற்றோர்கள், சகோதரிகள், சகோதரர்கள் படுகாயப்படுத்தப்படுவதை, கொல்லப்படுவதை, வாழ்விலிருந்து தூக்கியெறியப்பட்டு அவஸ்த்தைக்குள்ளாக்கப்படுவதைப் பார்க்கிற அவநம்பிக்கை கொண்ட ஒரு மனித ஜீவியின் விருப்பம் அது. அவன் திருப்பித் தாக்கும் விதமாக எதையாவது செய்ய நினைக்கிறான்.

அநீதியாக நிர்ப்பந்திக்கப்பட்ட நிலைமைகளிலிருந்து விடுபட வேறுவழியின்றி தவிக்கும் ஒருவனின் செயல்பாடாக அதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். அதை நான் ஒத்துக் கொள்ளவில்லை, ஆனால், அதை நான் புரிந்து கொள்கிறேன். உலக வர்த்தக மையத்தை, பென்டகனைத் தாக்கியவர்கள் இதிலிருந்து வேறுபட்டவர்கள்.

ஏனென்றால், அவர்கள் ஏழை அகதிகளல்ல, வேறுவழி இல்லாதவர்களும் அல்ல. அவர்களெல்லாம் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுமளவுக்குப் படித்தவர்கள், விமானப் பள்ளியில் சேருகிற அளவுக்கு அமெரிக்காவுக்கு வந்து ப்ளோரிடாவில் வாழ்கிற அளவுக்கு வசதி படைத்தவர்கள்.

***உங்களுடைய 'கவரிங் இஸ்லாம்" என்ற நூலின் சமீபத்திய பதிப்புக்கு நீங்கள் எழுதியுள்ள முன்னுரையில் இஸ்லாத்தைப் பற்றி மோசமான விதத்தில் பொதுப்படையாகப் பேசுவது தான் மேற்கத்திய உலகில் பிறநாட்டு கலாசாரங்களை அணுகுவதற்கு ஏற்கப்பட்ட கடைசிவழி முறையாக உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஏன் அப்படி?***

இஸ்லாமை ஒரு அச்சுறுத்தலாக - வெறிபிடித்த, வன்முறையான, பேராசை கொண்ட, பகுத்தறிவற்ற - புறம்பான ஒன்றாகப் பார்க்கும் பார்வை, காலனிய காலத்தில் ஆரம்பித்தது. அந்த அணுகுமுறையைத் தான் நான் 'ஓரியன்டலிசம்" எனக் குறிப்பிடுகிறேன். தம்மைத் தவிர்த்த மற்றவர்களைப் பற்றி ஆய்வு செய்வதென்பது, மேற்கத்திய குறிப்பாக ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை - இஸ்லாமிய உலகை மேலாதிக்கம் செய்தல், கட்டுப்படுத்தல் என்பதோடு பெருமளவுக்குத் தொடர்பு கொண்டுள்ளது.

ஏன் அப்படிப் பார்க்கப்பட்டதென்றால், அது மிக மிக ஆழமாக மத ரீதியான அடிப்படைகளைக் கொண்டிருந்தது. கிறிஸ்துவத்துக்கு ஒரு போட்டியாக இஸ்லாமைக் காண்கிற பார்வை அது. இங்கு அமெரிக்காவில் பல்கலைக்கழகங்களில், பள்ளிகளில் வைக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களைப் பாருங்கள். இஸ்லாமிய உலகோடு இந்த நாட்டுக்கு இருக்கும் நீண்டதொரு அறிமுகத்தைக் கணக்கில் கொண்டால், இந்தப் பாடத்திட்டங்கள் இஸ்லாமைப் பற்றிய தகவல்களைக் குறைந்த அளவில் கூட தெரிவிக்கக் கூடியவையாக இல்லை என்பதைப் பார்க்கலாம்.

வெகுசன ஊடகங்களைப் பாருங்கள், அராபியர்களைப் பற்றிய ஸ்ரீரியோ டைப்பான சித்திரிப்புகள். 'ஷேக்" கதையில் வந்த ருடோல்ப் வாலென்டினோ பாத்திரம் அப்படியே உருமாறி, நாடுகளின் எல்லைகளைக் கடந்த ஒரு மிகப்பெரும் வில்லனாக டி.வி.தொடர்களில், திரைப்படங்களில் சித்தரிக்கப்படுவதைப் பாருங்கள்.

இஸ்லாத்தைப் பற்றி பயங்கரமான பொதுப்படையான சித்திரிப்புகளை உருவாக்கிக் கொள்வது மிகவும் எளிது. அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது அதிகமாக ஒன்றுமில்லை. 'தி நியூ ஏஜ்" பத்திரிகையின் ஏதாவதொரு இதழை வாசித்தால் போதும் இஸ்லாம் எவ்வளவு கொடூரமானது, அரபியர்களின் கலாசாரம் எத்தனை பிற்போக்கானது, இன்னும் என்னென்ன உண்டோ அவ்வளவு கருத்துக்களும் உங்களுக்கு உண்டாகிவிடும். இஸ்லாமைத் தவிர அமெரிக்காவில் வேறெந்த மதத்தைப் பற்றியும் இவ்வளவு மோசமான சித்திரிப்புகள் வருவது இல்லை.

***'லண்டன் ஒப்சேர்வர்" பத்திரிகையில் நீங்கள் சமீபத்தில் எழுதிய கட்டுரையொன்றில். போரில் ஈடுபடுவதற்கான அமெரிக்காவின் வெறியை மோபிடிக்கை விரட்டிச்சென்ற கேப்டன் அஹாப் பத்திரத்துடன் ஒப்பிட்டிருந்தீர்கள். உங்கள் மனதில் ஏன் அப்படித் தோன்றியது?***

கேப்டன் அஹாப் என்ற பாத்திரம், தனது காலை கடித்துக்குதறி தனக்கு தீங்கு விளைவித்த வெள்ளைத் திமிங்கிலத்தை வேட்டையாடத் துரத்தும் ஒரு பாத்திரம். உலகின் எல்லைவரை அந்தத் திமிங்கிலத்தை அவன் விரட்டிச் செல்கிறான். எது நடப்பது பற்றியும் கவலைப்படாமல் செல்கிறான்.

அந்த நாவலின் கடைசிக் காட்சியில், கேப்டன் அஹாப் கடலுக்குள் அந்த வெள்ளைத் திமிங்கிலத்தோடு - தான் கொண்டு வந்த கயிற்றிலேயே சேர்ந்து சுற்றிக் கொண்டு மீள முடியாமல் சிக்கிக் கொள்கிறான். அது ஏறத்தாழ ஒரு தற்கொலை போல் ஆகிவிடுகிறது. இப்போது, இந்தப் பிரச்சினையின் ஆரம்ப கட்டங்களில் ஜார்ஜ் புஷ் பேசியவற்றைப் பாருங்கள்.

'உயிரோடோ அல்லது பிணமாகவோ பிடிக்க வேண்டும்" 'புனிதப் போர்" மற்றும் இன்னபிற வார்த்தைகளைப் பாருங்கள் அவை சர்வதேச விதிகளின் அடிப்படையில் குற்றவாளிகளை நீதியின் முன் கொண்டு வந்து நிறுத்தும் நோக்கம் கொண்டவையாக இல்லை. மாறாக, வன்முறையானதாக அட்டூழியம் செய்யும் நோக்கம் கொண்டதாக - உலகின் முடிவை சொல்வதாக அவை இருந்தன. அது விஷயத்தை மிக மிக மோசமாகச் சீரழித்து விட்டது.

ஏனென்றால், எல்லாவற்றுக்கும் எப்போதும் பின்விளைவுகள் உண்டு. ஒசாமா பின்லேடனை மோபிடிக்காக, உலகின் அத்தனை கேடுகளுக்குமான குறியீடாகப் பார்த்து ஒருவித அமானுஷ்யத்தன்மையைக் கொடுப்பதென்பது, அவரது ஆட்டத்துக்குள் நாம் சிக்கிக் கொள்வதாகவே இருக்கும்.

அந்த மனிதனை நாம் மதச் சார்பற்றவராக மாற்றியாக வேண்டும். யதார்த்தம் என்கிற தளத்துக்குள் - அவரை இறக்கியாக வேண்டும் ஒரு குற்றவாளியாக, மதவெறி பிடித்தவராக, சட்ட விரோதமாக அப்பாவிகள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுபவராக அவரைக் கூறுங்கள். அதற்குண்டான தண்டனையை அவருக்கு வழங்குங்கள். அதைவிட்டு விட்டு, உலகத்தை அவருடைய தளத்துக்குக் கீழிறக்காதீர்கள். அது நம்மையும் அங்கு கொண்டு போய் நிறுத்திவிடும்.

*இது ஆங்கிலத்தில் ப்ரோக்கிரசிவ் என்ற சஞ்சிகையில் வெளியானது.*

*நன்றி : தலித்முரசு*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ ஒறுப்புச்சட்டத்தில் பெண்களின் நிலை தொடர்பான விமர்சனத்திற்குரிய சில அபிப்பிராயக் குறிப்புகள்!

க.இளம்பிறை
சட்டவாளர் , விசுவமடு

இலங்கை அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும் எனும் என்.சரவணன் அவர்களின் எழுத்துருவாக்கத்தில் உருவான நூலை 2001 - ஜனவரியே பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்நூலில் தமிழீழ ஒறுப்புச்சட்டம் தொடர்பாக எழுதப்பட்ட விமர்சனத்தை வன்னி பெருநிலப்பரப்பில் உள்ள தனிப்பட்ட சட்டவாளர்களில் நானும் ஒருவன் எனும் வகையில் என்னால் ஜீரணிக்க முடியவில்லை. ஏன்னெனில் குறித்த சட்டப் பிரிவுகளின் உண்மையான பொருள் கோடலை நூல் ஆசிரியர் பார்க்கத் தவறியதன் விளைவால் அச்சட்டம், பெண்கள் தொடர்பாக பழைய சித்தாந்தங்களைத் தூக்கி எறிய முடியாமல் அதனை அடியொற்றி ஆக்கப்பட்டுள்ளதென்ற கருத்தும் பெண்ணுரிமை தொடர்பில் அசட்டையாக இருந்துள்ளதென்ற கருத்தும் ஆணித்தரமாக நூல் ஆசிரியரால் உட்புகுத்தப்பட்டுள்ளது. இக் கருத்துக்களில் உண்மை உண்டா? இல்லையா? என்பதை வெளியரங்கப் படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கம்.

அந்நூலில் கூறப்பட்ட கருவுற்ற பெண்களுக்கு வழங்கக்கூடிய ஒறுப்புக்களும், அதனோடு சார்ந்த அம்சங்களும் புதிய குற்றமாக பாலியல் தொந்தரவு தொடர்பாக எழுதப்பட்டனவும் உளமார வரவேற்கப்பட வேண்டியவை என்பதுடன் ஏனைய விடயங்களை, பின்வரும் அம்சங்கள் ஊடாக ஆய்வு செய்வதும் பொருத்தமானதாகும்.

**சட்டவாக்கம்**

தமிழீழ தேசிய சட்டவரைபானது பண்பாட்டு விழுமியங்களை கவனத்தில் கொண்டு வர்க்க வேறுபாடுகள் சுரண்டல்கள் அற்ற, உண்மையானதும் தர்மமானதும், ஆண், பெண் சமத்துவமான புரட்சிகரமான புதிய சமுதாயமொன்றை தேசிய விடுதலைப் போராட்டத்தின் பால் கட்டியெழுப்பும் பாங்கிற்கு உறுதுணையாகவே ஆக்கப்படுகின்றது என நான் நம்புகின்றேன்.

எமது சமுதாயம் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பெண்களை சமூக முன்னிலையிலிருந்து ஒதுக்கி அவர்களின் சுதந்திரமான வளர்ச்சிக்கு பல்வேறுபட்ட தடைகளை பல வடிவங்களில் கையாண்டு வந்துள்ளது. இவ்வடிவங்களில் மூடநம்பிக்கைகளும் மதம் சார்ந்தவைகளும், முதன்மையானவையாக காணப்படுகின்றன. சமுதாயத்தில் இவை ஆழமாகப் புதைக்கப்பட்டு விட்டன. எமது சமுதாயத்தோடு புரையோடியுள்ள பெண் ஒடுக்குமுறை கால நீரோட்டத்துக்கு ஏற்பவே படிப்படியாக உடைக்கப்படக்கூடியதாக அமையும். இந்த வகையிலேயே பெண்களின் உரிமைகளை தமிழீழ ஒறுப்புச் சட்டமும் ஏனைய தமிழீழ சட்டங்களும் ஒழுங்குபடுத்தியுள்ளதாக நான் கருதுகிறேன்.

ஆரம்பத்தில் எமது பெண்கள் கணவன் இன்றி தனித்து வழக்கு தொடரவோ, தொடுக்கப்படவோ, ஒப்பந்தம் செய்யவோ, தன் தனிப்பட்ட சொத்துக்களை தானே கையாளவோ நிலைமையிருந்ததில்லை. ஆனால் 1993ம் ஆண்டின் 3ம் இலக்க தமிழீழ தேசவழமைச் சட்டமானது பெண் தனித்து வழக்கு தொடரவும் தொடுக்கப்படவும், தனது சொத்துக்களை தானே கையாளவும், சுதந்திரம் அளித்துள்ளது. தமிழீழ ஒறுப்புச்சட்டத்தை பார்த்தால் கூட 15வயதும் அதற்கு உட்பட்ட பெண்களின் இசைவைப் பெற்றும், பெறாமலும் அவருடன் உடல் உறவு கொண்டால் பாலியல் வல்லுறவு குற்றம் என வரையறுத்துள்ளது. இத்தகைய வயதெல்லை இந்திய இலங்கை சட்டத்தில் 12 வயதாகவே கணிக்கப்பட்டுள்ளது என்பதுடன் 15 தொடக்கம் 18 வயதான பெண்ணுடன் உடல் உறவு வைத்துக் கொள்பவர்கள் இளம் பிள்ளைகளுடன் உடல் உறவு எனும் குற்றப்பிரிவின் மூலம் தமிழீழத்தில் பெண்களின் அறியாப்பருவம் காக்கப்படுகின்றது. இந்திய, இலங்கைச் சட்டத்தில் இத்தகைய வயதெல்லை 12 வயது தொடக்கம், 14 வயது வரையானது என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறே ஆட்கவருதல் பிரிவும் ஏனைய நாட்டு சட்டங்களை விட பெண்களின் வயதை அதிகரித்தே கணித்துள்ளது.

உ-ம் : இலங்கைச் சட்டம் ஆட்கவருதல் குற்றத்திற்கு பெண்பிள்ளையின் வயது 16க்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் எனக் கூறுகின்றது. குறித்த பிரிவு தொடர்பில் தமிழீழ ஒறுப்புச் சட்டமானது பெண் 18 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் என வரையறுத்துள்ளது. எமது சமுதாயக் கட்டமைப்பையும் பிற நிலை நிகழ்வுகளையும் யதார்த்தமாகப் பார்த்தே பெண்உரிமை மதிக்கப்பட்டு அவரைத் தமிழீழச் சட்டம் காத்துக் கொடுக்கின்றது. ஆனால் நூல் ஆசிரியரோ பெண்கள் தொடர்பான மரபு ரீதியான கருத்தியல் சிந்தனையில் இருந்து வெளிவரும் சட்டங்களைப் போலவே பெண் உரிமை தொடர்பில் பழைய சித்தாந்தங்களை அடியொன்றியே ஒறுப்புச்சட்டமும் தன்னை




அடையாளப்படுத்தி நிற்கின்றது எனக் கூறியுள்ளார். எனவே ஒறுப்புச் சட்டத்தில் அவர் கூறும் பிரிவுக்கு நாமும் சென்று அவர்கூறும் விளக்கத்தை உற்றுப் பார்ப்போம்.

*எமது சமுதாயம் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பெண்களை சமூக முன்னிலையிலிருந்து ஒதுக்கி அவர்களின் சுதந்திரமான வளர்ச்சிக்கு பல்வேறுபட்ட தடைகளை பல வடிவங்களில் கையாண்டு வந்துள்ளது. இவ்வடிவங்களில் மூடநம்பிக்கைகளும் மதம் சார்ந்தவைகளும், முதன்மையானவையாக காணப்படுகின்றன. சமுதாயத்தில் இவை ஆழமாகப் புதைக்கப்பட்டு விட்டன. எமது சமுதாயத்தோடு புரையோடியுள்ள பெண் ஒடுக்குமுறை கால நீரோட்டத்துக்கு ஏற்பவே படிப்படியாக உடைக்கப்படக்கூடியதாக அமையும். இந்த வகையிலேயே பெண்களின் உரிமைகளை தமிழீழ ஒறுப்புச் சட்டமும் ஏனைய தமிழீழ சட்டங்களும் ஒழுங்குபடுத்தியுள்ளதாக நான் கருதுகிறேன்.*

**கருக்கலைத்தல்.**

துணைவன், துணைவி இருவரது இசைவுடனேயே கருக்கலைக்கப்படலாம் என தமிழீழ ஒறுப்புச் சட்டம் வரையறுத்துள்ளது. நூலாசிரியர் துணைவியின் இசைவு மட்டும் போதுமானது எனவும் துணைவனின் இசைவைக் கேட்பது பாரதூரமானது எனவும் எடுத்தியம்பியுள்ளார். இவற்றினை ஆய்வு செய்கையில் ஆண், பெண் குடும்ப உறவில் கருவைச் சுமக்கும் பொறுப்பு பெண்ணிடம் மட்டுமே தனித்து விடப்பட்டுள்ளதை யாரும் மறுத்துரைக்க முடியாது. இது ஓர் இயற்கைப் படைப்பாகும். அக்கருவை அத்தாய் 280 நாட்கள் சுமந்து உடல் உளநெருக்கடிகளைச் சந்தித்து தாங்கொணா வேதனையில் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள் என்பதும் உலகறிந்த உண்மை. கருவொன்று உருவாகியதில் இருந்து அக்கருவை குழந்தையாக பெற்றெடுக்கும் காலம் வரையும் அதற்கு அப்பாலும் ஒரு தாயின் துன்பங்களும், நெருக்கடிகளும், தியாயங்களும் அளப்பரியது. எனவே அளப்பரிய தியாயங்களை செய்யும் அத்தாயிடம் மட்டும் அக்கருவை அழிக்கும் உரிமை வழங்கலாமா? என்பதை பின்வரும் விடயங்களை ஆராய்ந்து விடை கூறலாம்.

1. திருமணத்தின் நோக்கம்.

2. தாய் ஏன் கருவைக் கலைக்க விரும்புகின்றாள்.

**திருமணத்தின் நோக்கம்**

ரோமடச்சுச் சட்டம், வேறு எவரையும் தவிர்த்து ஆண், பெண் இருவரும் கூடி வாழ்வதற்கான ஓர் ஒப்பந்தம் என்று எடுத்துக் கூறுகின்றது. வொன்ரெல்டன் (Wontelder) எனும் அறிஞரின் கூற்று : சந்தோசம் பெற்று கொள்ளுதலும், பிள்ளைகள் பெற்றுக் கொள்ளுதலும், அப்பிள்ளைகளை முறையாக வளர்த்தலும் இறுதிக்காலம் வரை ஒன்றாகக் கூடி வாழ்தலும்" என வெளிப்படுத்தியது. எனினும் இக்கூற்றுக்கு மாறாக வயது முதிர்ந்த காலத்திலும் சாவுகாலங்களிலும் கூடப் பல திருமணங்கள் நடந்தேறியுள்ளன. இருந்தும் திருமணம் எனும் நிகழ்வால் பிணைக்கப்பட்டு இன்பம் பெறும் சங்கமத்தில் சந்ததிகளை உருவாக்கி இறுதிக் காலம் வரை ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக ஒன்றாக கூடி வாழ்தல் என்பது ஓர் எளிய அளவிடை எனலாம். எனவே ஆண் ஒருவர் திருமண பந்தத்தில் ஈடுபடும் பொழுது மேற்படி அம்சங்கள் உட்கிடையாக அர்த்தப்படுகின்றது.

**தாய் ஏன் கருவைக்கலைக்க விரும்புகின்றாள்.**

அ) கருவை உண்டாக்கியவர் கணவன் அல்லாது வேறு ஒருவராகக் காணப்பட்டால்,

ஆ) பாலியல் வல்லுறவு கருவுறுவதற்குரிய காரணமாக இருந்தால்,

இ) தாயின் உடல், உளப் பலவீனங்கள்,

ஈ) இளமையழகு அழிந்துவிடும் என்பதால்,

மேற்படி அம்சங்களின் பிரகாரம் "ஆ" "இ" ஆகிய உட்பிரிவுக்கு அமைய கருக்கலைப்பதற்கு துணைவனுடைய இசைவில் தேவைப்பாட்டை இல்லாமல் செய்யலாம். ஆனால் "அ" "ஈ" உபபிரிவுகளின் படியாக கருக்கலைப்பிற்கு அத்தகைய துணைவனின் இசைவை இல்லாதொழித்தல் ஒருபக்க சார்பான சட்டமாகவே கருதப்படலாம் என்பதுடன் உபபிரிவு (அ)விற்கு அமைய உருவாகிய கருவால் பெண் தகுதியற்ற மருத்துவரிடமோ வேறு நபரிடமோ, தானாகவோ, தகுதியில்லாத மருந்துகளை உட்கொண்டு உயிராபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. எனவே திருமணத்தில் அடிப்படை நோக்கத்தோடு துணைவனதும், துணைவியினதும் புரிந்துணர்வின் அடிப்படையில் இருவரது இசைவின் தேவைப்பாட்டை சட்டம் வேண்டி நிற்பது நற்சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்திற்கு உறுதுணையாக அமையும்.

**மறுமணம்**

வலிதான திருமணம் ஒன்று சட்டப்படி வலிதாக்கப்பட்ட பின்னர் அத்தகைய துணைவன், துணைவி மறுமணம் செய்து கொள்ளலாம். மேலும் துணைவனோ, துணைவியோ தம்மில் மற்றவர் எங்கு உள்ளார் என்பது பற்றி அறிய முடியாதவராக காணப்படும் இடத்து அவர் 5 வருடம் கழிந்த பின் அத்தகைய தகவல் எதுவும் கிட்டாதவராக காணப்படும் இடத்து மறுமணம் செய்ய அனுமதிக்கப்படலாம். இத்தகைய 5வருட கால அவகாசம் முதன்மையானது அல்ல என நூல் ஆசிரியர் கருத்துக் கூறியுள்ளார். அக்கருத்துக்கு கீழ்காணும் பிணக்கினை ஆராயலாம். சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் பல நூற்றுக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளனர். அவற்றுள் நூற்றுக்கு மேற்பட்டவர்களுடைய மரணச் சான்றிதழ்கள் அண்மைக் காலத்தில் வழங்கப்பட்டும் வழங்கிக்கொண்டும் உள்ளனர். கிட்டத்தட்ட 4 1/2, 5 வருடங்களின் பின்னரே காணாமல் போனவர்கள் உறுதிசெய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். இத்தகைய நிகழ்வுகளில் குடும்பஸ்தர்களும் காணாமல் போயிருந்தால் அவர்களைப் பாராது தம்பதியினருள் எஞ்சியவர் 1, 2, வருடத்தில் மணம் முடிக்க 3ஆவது வருடத்தில் காணாமல் போனவர் திரும்பி வந்தால் காணாமல் போயிருந்த்வரின் உரிமை, உணர்வு, உடமைகளுக்கு எந்த வகையில் பதில் கொடுப்பது. இறுதிகாலம் வரை கூடிவாழ்வதாக வாக்களித்த தம்பதியினருள் ஒருவர் மற்றயவரை குறைந்தது 5 வருடங்களாவது எதிர்பார்த்து இருப்பது மனித நேயம் உள்ள துணைவன், துணைவி நற்பண்பாகும். இந்த 5 வருடங்களுக்குள் மற்றவர் உயிருடன் இல்லை என்ற உறுதிப்பாட்டுடன், உயிருடன் உள்ளவர் மறுமணம் செய்ய சட்டம் எந்த விதத்திலும் தடை செய்யவில்லை. எனவே போர்க்கால சூழ்நிலையை கருத்தில் கொண்டு மணமுடித்த ஒருவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா, என்ற தகவலை அறிய 5 வருடங்களாவது காத்திருக்க வேண்டும் என்பது எந்த விதத்திலும் பிழையானதாக அமைந்துள்ளதென நாம் கருதவில்லை.

**பாலியல் வல்லுறவு**

பாலியல் வல்லுறவு குற்றம் பற்றிய வழக்கானது அத்தவறு இழைக்கப்பட்டதில் இருந்து மூன்று மாதங்களின் பின் வழக்கு தொடரப்படலாகாது. அத்தகைய வழக்கு தொடர முடியாமல் போனவர்களுக்கு நீதித்துறை நீதிவழங்கமுடியாது என்று கூறுவது சரியானதொன்றல்ல என அந்நூலாசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். இத்தகைய அம்சம் "பாலியல் வல்லுறவு குற்றம்" தொடர்பாக தமிழீழ ஒறுப்புச்சட்டத்தில் எந்த இடத்திலும் வரையறுக்கப்பட்டு இருக்கவில்லை. எனவே அது புறநீக்கலாக அடுத்த விடயத்திற்கு செல்கையில், பெண், பெண்மீதும், ஆண், ஆண்மீதும் பாலியல் வல்லுறவு கொள்வதையும் சட்டம் கண்டும் காணாமலும் விட்டுள்ளது என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண், பெண்மீது கொள்கின்ற பாலியல் வல்லுறவின் விளைவால் சமுதாயத்தில் ஒரு பெண் எத்தகைய நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடுகிறதோ அத்தகைய அளவை விட பலமடங்கு குறைவான நெருக்கடியையே ஒரு பாலார் அதே பாலார் மீது கொள்கின்ற பால் உறவின் தாக்கம் அமைக்கின்றது. எனவே இரண்டிற்கும் ஒரே ஒறுப்பு வழங்கமுடியாது. இருந்தும் அத்தகைய செயல்களைக் கூட இயற்கைக்கு முரணான பாலியல் உறவு எனும் குற்றப்பிரிவு அவர்களைத் தண்டிக்கின்றது. எனவே நூல் ஆசிரியர் சுட்டிக்காட்டியது போல் சட்டம் கண்டும் காணாமல் இருக்கவில்லை. ஒரு பிரிவில் அடக்கப்படாதது போல் தெரிகின்ற அம்சங்கள் வேறு பிரிவுகளில் தன்னை அடையாளப்படுத்துவது சட்டத்தின் இயல்பும் ஆழமானதும் ஆகும்.

தொடர்ச்சி VIIம் பக்கம்...


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொல்லப்படுகிறது...

ஜெயா மித்ரா




கொல்லப்படுகிறது எது? மனிதம், மனிதநேயம், மனித உணர்வுகள், உயிர் உடல் இவை எல்லாம் தான். மைத்ரேயி தேவி என்கிற பிரபல பெண் எழுத்தாளர் பகவத்கீதையில் இடம் பெறும் ""ந ஹன்யதே"" (கொல்லப்படுவதில்லை... கண்ணன் ஆத்மா கொல்லப்படுவதில்லை என்று கூறும் போது இச் சொற்தொடரைப் பயன்படுத்துகிறான்) என்ற தலைப்பில் தன் இளம் பருவக் காதலின் கதையை எழுதியுள்ளார். அந்தக் காதல் வெற்றி பெறவில்லை, எனினும் காதல் என்றும் அழியாது. அது கொல்லப்படுவதில்லை என்பதை அவர் அந்த நூலில் குறிப்பிடுகிறார். "கொல்லப்படுகிறது" என்ற இந் நாவலின் ஆசிரியர் ஜெயா மித்ரா நான் காண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர். சிறையில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நேரிற் கண்டவர். தானும் அனுபவித்தவர். ஆத்மா கொல்லப்படாமல் இருக்கலாம். ஆனால் உடம்பு கொடுமைப்படுத்தப்படுகிறது. கொல்லப்படுகிறது என்பதை உணர்த்தவே அவர் இத் தலைப்பைத் தெரிவு செய்திருக்கிறார். இந்தியாவின் மிகப் பயங்கரமான, கொடூரம் நிறைந்த சிறைகளும், அங்குள்ள பெண் கைதிகளின் அவலங்களும், ஜெயிலர்கள், வார்டன்கள், போன்றோரின் மனிதாபிமானமற்ற கொடுமையும் ஆசிரியரால் பதிவு செய்யப்படுகிறது. எமது நாட்டிலும் பயங்கரவாதத் தடைச் டம், மற்றும் அவசர காலச் சட்டத்தின் கீழ் பெண்கள் கைது செய்யப்படுகிறார்கள். பொலிஸ் நிலையங்களிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்படுகிறார்கள். பொலிஸ் நிலையங்களிலும், தடுப்பு முகாம்களிலும் அவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது எப்போதாவது வெளிவந்தால் உண்டு. சிறையில் இன்னும் வாடுகின்ற இளைஞர்களைப் பற்றியே அக்கறைப்படாத எம்முடைய அரசியல்வாதிகள் இந்தப் பெண்கள் பற்றி அக்கறைப்படுவார்கள் என்று எண்ண என்ன இருக்கிறது? ஜெயா மித்ரா போன்று இங்குள்ள படைப்பாளிகள் யாராவது தான் இவற்றை வெளிக் கொணர வேண்டும் இந்திய உழவர்களின் சக்தியில் நம்பிக்கை கொண்டு ஜெயா மித்ரா 1970 இலிருந்து நான்காண்டுகள் விசாரணை இன்றி சிறையிடப்பட்டார். கடும் நோய் வாய்ப்பட்டதாலும், அரசியல் கைதிகளின் விடுதலை இயக்கத்தின் அழுத்தத்தாலும் விடுதலை செய்யப்பட்டார். இப்போது முழு நேர எழுத்தாளர், 4 கவிதைத் தொகுப்புகள், 6 நாவல்கள், உட்பட 30க்கு மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ள இவர் ஒரு நல்ல மொழி பெயர்ப்பாளரும் கூட. "பூமத்ய சாகர்" என்ற காலாண்டுப் பத்திரிகையை நடாத்தி வருகிறார். இவர் வங்காள மொழியில் எழுதிய "கொல்லப்படுகிறது" நாவலை தமிழில் சு. கிருஷ்ணமூர்த்தி மொழி பெயர்த்துள்ளார். அதிலிருந்து ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது.

பெர்ஹாம்பூர் சிறையில் அளிக்கப்படுவது போல் பிரெசிடென்சி சிறையில் எவருக்கும் சிறப்பு மரியாதை அளிக்கப்படுவதில்லை. அதற்கேற்ற நிருவாக அமைப்பே இல்லை இங்கே. கண்ணியமான மரியாதை இங்கே அளிக்கப்படுவதெலலாம் வார்டுக்கு வெளியே தான். இருந்தாலும் ஒரு நாள் காலையில் வார்ட்டு மிகவும் துப்புரவாகப் பெருக்கப்பட்டது. கீழ்த் தளத்தில் முகுல், டூரா ஆகியோரின் அறை வாசலில் புதிய சாக்குத் திரை தொங்கவிடப்பட்டது. மருத்துவமனையின் ஒவ்வொரு கட்டிலிலும் படுக்கை விரிக்கப்பட்டு அதன் மேல் வெள்ளை விரிப்பு விரிக்கப்பட்டது.

இந்த ஏற்பாடுகளுக்குக் காரணம் சிறை மந்திரி வருகை தருகிறாராம், சிறையை மேற்பார்வையிட.

அவர் வந்தார். கூடவே பரிவாரங்கள் - சிப்பாய்கள், மற்ற அதிகாரிகள், விசித்திரத் தோற்றமுடைய ஓரிரண்டு சமூக சேவகிகள், நிச்சயம் இவர்கள் இந்தத் துர்ப்பாக்கிய சமூகத்துக்கு உயர்தர சேவை செய்பவர்களாயிருக்க வேண்டும். மாடியில் காலையில் ஏழரை மணியிலிருந்தே எங்கள் அறைக் கதவுகள் அழுத்தமாகப் பூட்டப்பட்டு விட்டன. வந்தவர்கள் மாடிக்கு ஏறி வந்தார்கள். எங்கள் அறைகளுக்கு முன்னிருந்த வராந்தாவின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை நடந்து போனார்கள், நாங்கள் அவர்களைச் சற்றும் லட்சியம் செய்யாமல் எங்கள் அறைகளில் உட்கார்ந்திருந்தோம். ஒரு சமூக சேவகி கிருஷ்ணாவின் அறைக்கு முன்னால் நின்று கொண்டு வியப்போடு கேட்டாள் - "இவங்களுக்கு ஜெயிலுக்குள்ளே பத்திரிகையெல்லாம் ஏன் கொடுக்குறீங்க?"

பிறகு எல்லோரும் கீழே இறங்கிப் போனார்கள். அப்போது தான் பகலுணவை வார்டுக்குள் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். மந்திரி அதிகம் பேசவில்லை. அவர் சாப்பாட்டை மேற்பார்வையிடும் போது ஓரிரு கைதிகள் சற்றுத் துணிவோடு உணவின் தரத்தையும் அளவையும் பற்றிப் புகார் செய்தார்கள். அதற்கு அவர் சொன்னார் - "ஜெயிலுக்குள்ளே சோத்தோட காய்கறியும் கிடைக்குதே, இதுவே ஜாஸ்தியில்லியா? ரொம்ப ஜாஸ்திதான். ஓங்களுக்கு வெறும் சப்பாத்தியும், தண்ணியுந்தான் கொடுக்கணும்!"

மந்திரி வெளியிட்ட இந்தக் கருத்து ஒன்றும் புதியதல்ல. 1852-55ஆம் ஆண்டுகளில் சிறை இலாகாவின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாயிருந்த எஃப்.ஜே. மொட்டாயின் அறிக்கையின் ஒரு பகுதி இது. ஹீக்கு மாவட்டப் பெண்கள் சிறையின் நிலைமை நன்றாகத்தானிருக்கிறது. கைதிகளின் உடல் நிலையும் நன்றாக உள்ளது. தாங்கள் செய்ய வேண்டிய பளுவைக் குறைக்கும் படி சில கைதிகள் விண்ணப்பித்திருக்கிறார்கள். தனக்குப் போதுமான அளவு உணவு கொடுக்கப்படுவதில்லை என்று ஒரு கைதி புகார் கூறினார். ஆனால் இப்படிப் புகார் செய்தவளின் உடல் நிலையைப் பார்த்தால் அவளுடைய புகாரை நம்ப முடியவில்லை. வேலைப் பளுவைக் குறைப்பதற்கான கோரிக்கையும் ஏற்கத்தக்கதல்ல. இவர்கள் நன்றாகச் சாப்பிடுகிறார்கள், நன்றாக நடத்தப்படுகிறார்கள். இவர்களுக்கு சுலபமான வேலைதான் கொடுக்கப்படுகிறது.

"பாங்கூர மாவட்டம்: இந்த மாவட்டப் பெண் கைதிகள் வெளியிலுள்ள தொழிலாளர்கள் நூற்கும் நூலை விடக் குறைவாகத்தான் நூல் நூற்கிறார்கள் என்று தோன்றுகிறது. மாஜிஸ்திரேட் இந்த விஷயத்தை ஆய்வு செய்ய வேண்டும். கைதிகள் உண்மையிலேயே குறைவாகத் தான் நூற்கிறார்களென்றால் அவர்களிடமிருந்து இன்னும் அதிகமாக வேலை வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும். தண்டனை மூலம் திருத்தப்படத்தக்க பெண்களுக்கேற்ப ஏற்பாடுகள் எல்லா சிறைகளிலுமே இல்லை. இவர்களுக்கு அரவையில் அரைப்பது போன்ற கடினமான வேலைகள் தரப்பட வேண்டும்..."

இன்று எங்களுக்கு உருளைக்கிழங்குக் கறி கிடைத்தது. அரசாங்க மேற்பார்வை வாழ்க!

இந்த ஒரு நாள் ஒவ்வொரு கட்டிலிலும் படுக்கை விரிக்கப்பட்டத்திலிருந்து ஓர் உண்மை தெரிகிறது - ஒவ்வொரு கட்டிலிலும் விரிக்கத் தேவையான அளவு படுக்கைகள் உள்ளன என்று. நாலைந்து நாட்களுக்கு முன்னால்தான் ஒரு நாள் சாந்தி பாய் முற்றத்தில் தரையில் புரண்டு கொண்டு அழுதாள் - "பூப்போன்ற குழந்தை கட்டில்லே செத்துப் போயிடுச்சு." அப்போது தான் பிரசவித்த குழந்தையை இழந்து களைத்திருந்த சியாமா பாய்க்கு பலமாக அழக்கூட சக்தியில்லை. அவளுடைய சிவப்பான நெடிய உடம்பில் கருப்புக் கறைகள். அவள் ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டு பலவீனமான குரலில் அழுது கொண்ட சாந்தி பாயை, "பேசாம இரு. பேசாம இரு!" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

சாந்தியும், சியாமாவும் சகோதரிகளல்லர், ஒரு வேசிக் குடியிருப்பில் பக்கத்து வீடுகளில் வசித்தவர்கள். இருவருமே நன்றாகப் பாடக் கூடியவர்கள். சாந்தி பாய்க்கு நடனமும் தெரியுமாம். இருவரும் இரண்டு செல்வர்களின் வைப்பாட்டிகள். சாந்தி பாயின் ஆசை நாயகன் இறந்த பின் அவளுடைய வீட்டுக்காரியும், வீட்டுக்காரியின் பிள்ளைகளும் அவன் அவளுக்கு கொடுத்திருந்த நகைகளையும், அவளுடைய சொந்த நகைகளையும் போலீஸ் உதவியுடன் பிடுங்கிக் கொண்டு அவள் மேல் திருட்டுக் குற்றம் சுமத்தி விட்டார்கள்.

சியாமாபாய் தன் சிநேகிதியின் சார்பில் வாதாட ஒரு வக்கீலை ஏற்பாடு செய்தாள். வழக்கு நடைபெறும் நாட்களில் நீதிமன்றத்துக்கு வந்தாள். விசாரணைக் கைதியாகச் சிறையில் இருந்த சாந்தி பாய்க்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு வந்து கொடுத்தாள். சாந்தி பாயின் இறந்து போன ஆசை நாயகனின் செல்வாக்குள்ள சுற்றத்தார் சியாமாபாய் மேலும் பழி தீர்த்துக் கொள்ள விரும்பினார்கள். ஆதரவற்ற இரு பெண்களை விட சுலபமான வேறு இலக்கு அவர்களுக்கு எங்கே கிடைக்கும்? சியாமா பாய் திருட்டுப் பொருட்களை வைத்திருந்ததாகவும் திருடியதற்கான சாட்சியத்தை அழிக்க முயன்றதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டாள். அப்போது அவள் நாலைந்து மாத கர்ப்பிணி. வழக்கு விசாரணை நடந்து அதில் தீர்ப்பு வர நெடுங்காலம் பிடிக்கும். வழக்கை சீக்கிரம் முடிக்க யாருக்கு அக்கறை! ஆகையால் இப்போது அவள் ஒரு விசாரணைக் கைதி, அவளுடைய ஆசை நாயகன் அவளுடைய வீட்டுக்காரிக்குக் கொஞ்சம் பணம் கொடுத்திருக்கிறான், வக்கீலை அமர்த்தி வழக்கை நடத்த. இதுவே அதிகமில்லையா!

சாந்தி பாய் குட்டையாக இருப்பாள், மாநிறம். சியாமா பாய் நல்ல உயரம், ஜொலிக்கும் நெருப்பு மாதிரி சிவப்பாக இருப்பாள். ஒருத்தி வருத்தமாயிருந்தால் மற்றவள் அவளைத் தேற்றுவாள். சிலசமயம் இருவருமே வருத்தமாய் உட்கார்ந்திருப்பார்கள். நீண்ட நாள் சிறையிலேயே இருக்க நேர்ந்ததால் விடுதலையான பிறகு சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று கவலைப்படுவார்களோ என்னவோ! எனினும் இருவரில் சியாமா பாய் உற்சாகமாக இருப்பாள், இடையிடையே பாட்டும் பாடுவாள் - கர்ப்பத்தின் பளு அதிகரித்து வந்த நிலையிலும்!



சென்ற வாரம் ஒரு நாளிரவில் லாக் - அப் ஆகும் நேரத்தில் சியாமா பாய்க்கு பிரசவ வலி ஏற்பட்டு விட்டதால் சிக்காவும் லால்மோதியும் வேண்டா வெறுப்போடு அவளை மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அன்றிரவு வெகுநேரம் வரை மருத்துவமனையிலிருந்து சியாமா பாயின் வேதனையொலி, கதவருகில் உட்கார்ந்து கொண்டு வார்டருடன் சீட்டாடிக் கொண்டிருந்த சிக்கா, சரஜூவின் அசிங்கமான திட்டுகள், வார்டின் ஜன்னல் கிராதியைப் பிடித்துக் கொண்டு சாந்தி பாயின் அழுகையும் வார்டரிடம் கெஞ்சலும் - இந்த ஒலிகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். இரவு வெகு நேரங்கழித்து நிசப்தம் நிலவியது. மருத்துவமனையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்ன நேர்ந்ததென்று எங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

காலையில் லாக் - அப் கதவு திறந்த போது சாந்தி பாய் கதறியழுவது கேட்டது. சியாமா பாயின்ழ குழந்தை இறந்து விட்டதாம். சரஜூவுக்கு மருத்துவமனைப் படுக்கையை அழுக்காக்க இஷ்டமில்லை. ஆகையால் அவள் சியாமா பாயை வெறும் இரும்புக் கட்டிலின் மேல் படுக்க வைத்திருக்கிறாள். கட்டில் உடைந்து போய் நடுவில் ஓட்டையாக இருந்திருக்கிறது. குழந்தை செத்துப் போய்த்தான் பிறந்ததென்று சொன்னாள் சிக்கா. ஆனால் சியாமா பாய் பொது நல அதிகாரியிடம் சொன்னாள் - தன் குழந்தை பிறந்த போது அழுததாக அழுது அழுது களைத்த குரலில் அவள் சொன்னாள் - "நான் வீட்டிலிருந்தே கொண்டு வந்திருந்த மூங்கில் பிளாச்சாலே தொப்புள் கொடியை நறுக்கற போது கை வழுக்கிக் கொளந்தை ஓட்டை வழியாக் கீளே விழுந்து செத்துப் போயிடுச்சி."

டாக்டர் பத்து மணிக்கு வந்தார். செத்த குழந்தை பிறந்ததாகச் சான்றிதழ் கொடுத்துவிட்டு சியாமா பாயை மருத்துவமனையிலிருந்து வார்டுக்கு அனுப்பி விட்டார்.

சியாமா பாய் பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஜாமீனில் விடுதலையாகிப் போகும் வரையில் குப்பைக் கூளம் நிறைந்த முற்றத்தின் ஒரு மூலையில் சாந்தி பாய் தன்னாலியன்ற வரை சியாமா பாய்க்குப் பணிவிடை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். சில சமயம் இருவரும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு விம்மி விம்மியழுவார்கள் - இருதோழிகள், சகோதர பாசங்கொண்டவர்கள், உடலை விற்பதற்காகக் கடைத் தெருவுக்கு வந்த இரண்டு பெண்கள்.

ஆனால் இந்த சியாமா பாயின் நினைவையும் மங்கச் செய்யும்படி எவ்வளவோ பயங்கர நினைவுகள் - எல்லாம் இந்த மாதிரி பிரசவம் பற்றியவை.

பலர் பல நேரங்களில் என்னைக் கேட்டிருக்கிறார்கள். "ஜெயில்லே ரொம்பக் கஷ்டப்படுத்தினாங்களா, கொடுமைப்படுத்தினாங்களா?" என்று. சாதாணமாக நான் இத்தகைய கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் மழுப்பி விடுவேன். கொஞ்சிச் சீராட்டுவதற்காகவா ஜனங்களைச் சிறைக்குக் கொண்டு போகிறார்கள்? வெளியிலுள்ள சமூகத்தில் பாதுகாப்பான கூண்டில் வாழ்க்கை நடத்தும் நமக்குக் 'கஷ்டம்', 'கொடுமை' என்ற சொற்களின் பொருள் தெரியுமா?

கர்ப்பிணியாக இருக்கும் காலத்தில் பல பெண்களின் மனச் சமநிலை சற்றுப் பிறழ்வது இயல்பு. அந்தச் சமயத்தில் அவர்கள் பால் சிறிது அக்கறை காட்டினால் போதும். உடலளவிலும், உணர்ச்சியளவிலும் அவர்கள் அனுபவிக்கும் வேதனை குறித்துச் சிறிது அனுதாபங்காட்டினால் போதும். ஒரு நாள் நான் வராந்தா இடைவெளி வழியே பார்த்த போது கீழே முற்றத்தின் ஒரு பக்கத்தில் கந்தல் துணியுடுத்திய பெண்ணொருத்தி கால்களை நீட்டிக் கொண்ட உட்கார்ந்திருந்தாள். அக்கறையோ, அனுதாபமோடு அவளுக்கு ஒரு போதும் கிடைத்திருக்காது. அவள் தெருவில் அலைந்து கொண்டிருப்பதைப் பார்த்து போலீஸ் அவளைப் பிடித்து வந்து சிறையில் 'பாதுகாப்புக் காவலில்' அடைத்து வைத்திருக்கிறது! 'பாதுகாப்புக் காவல்' என்ற சொற்றொடரைக் கண்டு பிடித்தவர் யாராயிருந்தாலும் அவருடைய கசப்பு ரசனையைப் பாராட்டத்தான் வேண்டும். நாஜிகளின் சாவுக் கிடங்குகளுக்கு முன்னால் எழுதப்பட்டிருக்குமாம் 'உழைப்பிலிருந்து விடுதலை'என்று. கொடுமையாளர்கள் எல்லோருமே இத்தகைய குரூர நகைச்சுவையைப் படைப்பதில் வல்லவர்கள் என்று தோன்றுகிறது.

'பாதுகாப்புக் காவல்' பகுதியில் மாலையுணவு கொடுக்கப்பட்டு விட்டது. மேலே வானத்திலிருந்து அந்தி வெயிலின் எச்சம் மறையவில்லை. ஐம்பதடித் தொலைவில் உள்ள நகரத்தில் அலுவலக ஊழியர்கள் வீடு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் முன்னிரவை உற்சாகமாகக் கழிக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இங்கோ பெண் கைதிகள் தட்டுகளில் குடிதண்ணீரை நிரப்பியெடுத்துக் கொண்டு நாற்றமெடுக்கும் தங்கள் இருட்டறைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறார்கள். அடைக்கப்படுவதற்காக. அந்தப் பைத்தியக்காரப் பெண் - பூரண கர்ப்பிணி - இரண்டு நாள் முன்பு தான் வந்திருக்கிறாள்.

அவளுக்கருகில் அவளுடைய சாப்பாட்டுத் தட்டு. தரையை நோக்கிச் சரிந்திருக்கும் தன் வயிற்றுக்கு இருபுறமும் கால்களைப் பரப்பிக் கொண்டு, முகத்தைத் தன் மார்பில் சாய்த்தவாறு ஏதோ நினைவில் ஆழ்ந்திருக்கிறாள் அவள். அந்தப் பக்கத்திலிருந்த வார்டர் அவளை இரண்டு, மூன்று முறை கூப்பிட்டாள். அவள் அசையவுமில்லை. தலையைத் தூக்கவுமில்லை. வார்டர் தன்னைத் தான் கூப்பிடுகிறாள் என்று கூட அவளுக்குப் புரிந்திருக்காதோ என்னவோ! சிக்கா அவளை நோக்கி வந்தாள், அவளருகில் வந்து தன் இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு அவளைக் காலால் உதைத்தாள். அந்தப் பெண் தரையில் விழுந்தாள். லால்மோதி அவளுடைய முடியைப் பிடித்து அவளைத் தரையில் இழுத்துக் கொண்டு போனாள். அந்தப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள லால்மோதியைத் தள்ளிவிட்டு எழுந்து நிற்க முயற்சித்த அந்தப் பெண்ணின் மேல் தாவிப் பாய்ந்தார்கள் சிக்காவும் அவளுடைய கையாளான சோந்தியும். அவள் வார்டுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு என் கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டாள்.

கொடுமை செய்யும் இந்தப் பெண்களும் குழந்தைகளைப் பெற்றவர்கள் தான், பிரசவ வேதனையின் கடுமையை அனுபவித்தவர்கள் தாம். ஆனால் இவர்களே சிறையில் மற்ற பெண்களை இவ்வளவு கொடுமையாக நடத்த முடிவது எப்படி? அழகின் மேல் அதிகாரம் செலுத்தக் குரூரத்துக்கு வாய்ப்புக் கிடைப்பதாலா? துணிவுள்ளவனுக்கு தண்டனையளிக்கக் கோழைக்கு உரிமை கிடைத்திருப்பதாலா? மரியாதைக்குரியவனை அடக்கி வைக்க அயோக்கியனுக்கு அதிகாரம் கிடைப்பதாலா? கதியற்ற மனிதர்களைக் கொடுமைப்படுத்துவதற்காகச் சற்றும் மனிதத் தன்மையற்ற ஆட்களே பொறுக்கியெடுக்கப்படுகிறார்களா?

தேங்கிக் கிடக்கும் தண்ணீர் கெட்டுப் போய் நாற்றமெடுக்கிறது. அடைத்து வைக்கப்படும் மனிதர்கள் இன்னும் அதிகமாகக் கெட்டுப் போகிறார்கள்.

இரவில் வெகுநேரம் வரை நானும் கிருஷ்ணாவும் எங்கள் அறைகளில் இருந்து கொண்டே அன்றைய மாலை நிகழ்ச்சிகளைப் பற்றியும், இவற்றில் எல்லாம் எங்களால் எதுவும் செய்ய முடியாத நிலை பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு பேச்சே பளுவாகிப் போக, மௌனமாகி விட்டோம். வராந்தாவில் விழுந்த நிழலிலிருந்து புரிந்து கொண்டேன், கிருஷ்ணாவும் என்போல் கதவுக் கிராதிக்கருகில் உட்கார்ந்திருக்கிறாளென்று. மற்ற இரவுகளில் அவள் தன் கை கால்கள் மரத்துப் போகாமலிருக்க தன் சிறுஅறைக்குள்ளேயே நடந்து கொண்டிருப்பாள், பாட்டுப் பாடிக் கொண்டிருப்பாள்.

இரவு பத்து மணிக்கான மணியோசை கேட்டது. சுவருக்குப் பின்னால் சிப்பாய்களின் ஷிஃப்ட் தொடர்பான ஒலிகள் கேட்டன. திடீரென்று இரவின் ஆழ்ந்த அமைதியைச் சுக்கு நூறாகக் கிழிக்கும் அலறல் - ஏதோ ஒரு மிருகத்தின் பயங்கரமான அலறல் போல, ஒரு தடவை - இரண்டு தடவை... பிறகு தொடர்ந்து அலறல் ஒலி. முதலில் திடுக்கிட்டு எழுந்து நின்றேன். பிறகு புரிந்து கொண்டேன் - நின்று கொண்டே இருந்தேன்...

எங்கள் அறைப்பக்கம் அக்காவுக்கு டியூட்டி.. கீழே வார்டின் கதவருகே உட்கார்ந்து கொண்டு மற்றவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாள். நாங்கள் கூப்பிட்ட பின் வந்தாள். கருத்த முகத்துடன் தலை குனிந்து நின்றாள்.

நாங்கள் கேட்ட ஓசை வெறும் பிரசவ வேதனை ஓலமல்ல. மாலையில் அடம் பிடித்த குற்றத்துக்காக அந்தப் பெண்ணின் காலில் விலங்கு மாட்ட உத்தரவிட்டிருக்கிறாள் மேட்ரன். அவளைக் கீழே தள்ளி விலங்கு போட்ட காலை ஓரடி மேலே தூக்கி ஜன்னல் கிராதியோடு கட்டி வைத்திருந்தார்கள். குழந்தையால் அவளுடைய வயிற்றிலிருந்து வெளியே வர முடியவில்லை. செத்துக் கொண்டிருந்த தாயின் ஓலந்தான் இரவின் மௌனத்தைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்டிருக்கிறது.

மனிதர்களைக் கூண்டிலடைத்து வைத்திருக்கும் இந்தக் கட்டிடத்தின் மேல் வானம் இடிந்து விழவில்லையே! பூமி பிளந்து போகவில்லையே! பிள்ளைகளைப் பெற்றுள்ள பெண் பிசாசுகள் மருத்துவமனையில் நோயாளிக்காகக் கொடுக்கப்பட்ட சிறப்பு உணவைத் தாங்களே தின்று விட்டுக் கவலையில்லாமல் லூடே விளையாடுகிறார்களே. அவர்களைப் பூமி ஏன் விழுங்கி விட வில்லை?

ஜன்னல் கிராதியை இறுகப் பிடித்தவாறு கைகள் மரத்துப் போகும் வரை அப்படியே நின்று கொண்டிருந்தோம் நாங்கள். நின்று என்ன பயன்!.....

மரண ஓலம் முனகலாகக் குறைந்து பிறகு ஒரு சமயம் நின்று போய் விட்டது. வெகு நேரத்துக்குப் பின் பொழுது புலர்ந்தது.

இன்னும் வெகு நேரத்துக்குப் பின் டாக்டர் வந்து விட்டுப் போனார். பிறகு அந்தப் பெண்ணின் சடலம் விலங்கு கழற்றப்பட்டு ஸ்ட்ரெச்சரில் கொண்டு செல்லப்பட்டது. அதை மூடியிருந்த போர்வையின் கீழேயிருந்து அதன் கொண்டை போடப்பட்ட முடி தொங்கிக் கொண்டிருந்தது.

என்னைச் சந்திப்பவர்கள் கேட்கிறார்கள் - "சிறையில் கொடுமை செய்தார்களா?" என்று.

"

*கர்ப்பிணியாக இருக்கும் காலத்தில் பல பெண்களின் மனச் சமநிலை சற்றுப் பிறழ்வது இயல்பு. அந்தச் சமயத்தில் அவர்கள் பால் சிறிது அக்கறை காட்டினால் போதும். உடலளவிலும், உணர்ச்சியளவிலும் அவர்கள் அனுபவிக்கும் வேதனை குறித்துச் சிறிது அனுதாபங்காட்டினால் போதும். ஒரு நாள் நான் வராந்தா இடைவெளி வழியே பார்த்த போது கீழே முற்றத்தின் ஒரு பக்கத்தில் கந்தல் துணியுடுத்திய பெண்ணொருத்தி கால்களை நீட்டிக் கொண்ட உட்கார்ந்திருந் தாள். அக்கறையோ, அனுதாபமோடு அவளுக்கு ஒரு போதும் கிடைத்திருக்காது. அவள் தெருவில் அலைந்து கொண்டிருப் பதைப் பார்த்து போலீஸ் அவளைப் பிடித்து வந்து சிறையில் "பாதுகாப்புக் காவலில்" அடைத்து வைத்திருக்கிறது! "பாதுகாப்புக் காவல்" என்ற சொற்றொடரைக் கண்டு பிடித்தவர் யாராயிருந்தாலும் அவருடைய கசப்பு ரசனையைப் பாராட்டத்தான் வேண்டும். நாஜிகளின் சாவுக் கிடங்குகளுக்கு முன்னால் எழுதப்பட்டிருக்குமாம் "உழைப்பிலிருந்து விடுதலை"என்று. கொடுமையாளர்கள் எல்லோருமே இத்தகைய குரூர நகைச்சுவையைப் படைப்பதில் வல்லவர்கள் என்று தோன்றுகிறது.*



"

## போர்த்தடுப்பும், தேசச் சுவரும்...

முட்கம்பிச் சுருளுக்குள்
முள்ளாய்குவிந்து..
சித்திரம் கௌவ்விய..
வண்ணத்து புச்சியாய்
தேகங்களை பதித்து என்
வாழ்விடம் கொழுவியது
துருப் பிடித்த துப்பாக்கிக்குள்...

இந்த நிலமைக் கலாச்சாரம்
என்னையும், உயிரையும்
அர்த்தத்துடன் அர்பணிக்க..
சாபம் கொடுக்கும்.
என் மேனிப் பூக்கள்
பட்ட தொரு கணப் பொழுதினில்
நொந்து வலிப்பட்டு
கண்கள் கசந்து கண்ணீர் வழிய
நதிப் பெருக்கப் பட்டன.
இன்றோ...
பல கிலோ இரும்புச் சுமையுடன்
கோணல் மாணலாக சுழன்று
தளும்பு படுவதை நெஞ்சம்
என்னுள் ஊழியாக எழுப்புகிறது.

இருப்பினும்
மார்பு மேட்டில் மென்மைப்
பதங்களின் பொழிவுகள்
ஈரக் காற்றை தடை விடுத்து
வெப்பம் பற்றி கொதிக்க
மீண்டுமொரு... நீர் கழுவுக்காய்.
இதமாகும் வரையிலே..
தணல் தகிப்புக்குள்... நான்..

கொட்டும் மூடுபனியிலும்,
எரிக்கும் நடு வெயிலிலும்,
வீசும் கடும் புயலிலும்,
வாழ்தலின் வாடலுக்காய்
ஜீவித்தலினை ஜீரணித்து...
சொல்லொனதத் தனிமையை...
நினைக்க தவிக்கையிலே..
அந்த
வெறுமைப்பட்ட நிலவும்,
இருள் பிடித்த மரங்களும்,
அலறல் எழுப்பும்குருவிகளும்,
பேய் உலாவும் ஊரும்,
எனக்கு துணை நின்றன

போர்க்களத் தடுப்பில்
பார்வைக் கசிவுகளால்
இயலாத ஒன்றை
இதயத்தின் பாதையில்
யுத்தம் செய்து..
நிசப்த வெளிக்காய்...
அவதரித்து முகாந்திரமிடுகிறேன்.

- கோ. நாதன் -
பொத்துவில்

## ஆட்சேபமில்லை அவதியுறுகிறோம்

அவர்கள் வருகிறார்கள்
எங்கள் மௌன உணர்வினது
நரம்புகள் புடைத்தெடி
நாங்கள் விழிநீர் சிந்தி நிற்கிறோம்..

வாழ்வின் துயரக் கதவுகள்
ஓவென..
நித்தமாய் திறந்து விடப்பட்டன.

சோலைகளற்ற பாலைவனங்கள்
சுகந்தமற்ற இரவுக்கனாக்கள்
சுவாசமற்ற பகல்கள்...

ஓ... அவலக்கதவுகள் திறந்துவிட்டன.

அவர்கள் போகிறார்கள்

- டர்ஸான் [illegible]மத் -


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிகழ்ந்திருக்கூடிய சம்பவங்களினால் தொகுக்கப்பட்ட - வனசப்பு மல -

- ஆழ்வார்க்குட்டி



காட்டுச் சண்பகப் பூவை நான் கண்டதில்லை. அதற்கு விசேஷ இயல்புகள் ஏதாவது உள்ளதா என்பது பற்றியும் அறியேன்.

ஆனால் 'வனசப்பு மல்" என்னும் சிங்கள நாவலின் ஆங்கில மொழி பெயர்ப்பு சமீபத்தில் படிக்கக் கிடைத்தது. கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்திரரட்ன பண்டார இதன் ஆசிரியர். இந்நாவல் 1991 ஆம் ஆண்டின் சிறந்த நாவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா - கனடா அபிவிருத்தி நிதியத்தின் உபயத்தில் 1993இல் Hostage City (பயணம் வைக்கப்பட்ட நகரம்) என்ற தலைப்பில் விஜித பெர்னாண்டோ அவர்களால் இந்நாவல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

இந்நாவலின் சம்பவங்கள் வன்னியிலுள்ள கொண்டச்சி குளம் எனும் ஊரிலும், யாழ் நகரிலும், வவுனியா நகரிலும் நிகழ்கின்றன. கொண்டச்சி குளத்தில் இராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையே நிகழ்ந்த சமர் ஒன்றின்பின் காஸ்ட்ரோ எனும் இளைஞன் அவனது தாயாரான பிரபா தேவியுடன் அகதி முகாமைத் தஞ்சமடைகிறான். அதன் பின்னர் நிகழ்பவையே நாவலில் சித்திரிக்கப்படுகின்றன.

காஸ்ட்ரோவின் தந்தை வேலாயுதம் ஒரு கம்யூனிஸ்ட் மாத்திரமல்ல, ஒரு வியாபாரியும் கூட. இந்து உயர் வேளாள வகுப்பைச் சாராத வேலாயுதம் பொருளாதார ரீதியாக மேல்நிலையாக்கம் பெற்றபோதிலும், வேளாள வகுப்பினருக்கு இணையான சமூக அந்தஸ்தைப் முடியாததையிட்டு விசனமடைவார். தனது பிள்ளைகளுக்கு லெனின், ரோஸா, காஸ்ட்ரோ எனப் பெருந் தலைவர்களது பெயர்களைச் சூட்டும் வேலாயுதம் கொழும்பில் வசித்ததுடன் அவர்களுக்கு நல்ல கல்வியையும் செழிப்பான வாழ்க்கை வசதிகளையும் அளிக்கிறார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்ற லெனின், சாதீய முரண்பாடு காரணமாக தோல்வியுறும் தனது காதலின் பேறாய் தற்கொலை செய்து கொள்கிறான். ரோஸா உயர் கல்வி பெறும் நோக்கில் இங்கிலாந்துக்கு சென்று விடுகிறாள்.

வேலாயுதத்தின் மரணத்தின் பின் காஸ்ட்ரோவும், பிரபாதேவியும் கொண்டச்சிகுளத்தில் வசிக்கின்றனர். அங்கு நிகழ்ந்த போரினால் சகலவற்றையும் இழந்த அவர்கள் அகதி முகாமை தஞ்சமடைகின்றனர். இதற்கிடையே போர்ச் சூழல் ஒன்றில் ரஞ்சினி எனும் பெண்ணுடன் ஒரே மலசல கூடத்தில் ஒழியும் காஸ்ட்ரோ அவள் பால் காதல் கொள்கிறான்.

எதையும் வெளிப்படையாகப் பேசும் இயல்புடைய காஸ்ட்ரோ அகதிமுகாமின் சீர்கேடுகளைப் பற்றிய மனுவொன்றைத் தயாரித்து, கொழும்புக்கு அனுப்ப முயற்சிக்கிறான். அகதி முகாமுக்கு வருகை தந்த தொண்டர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த சிங்கள இளம் பெண் ஒருத்தியின் துணையுடன் ரஞ்சினிக்கும், ரோசாவுக்கும் கடிதங்கள் அனுப்புகிறேன்.

## (சிங்கள நாவலொன்றின் முதல் வரைவு)

> தமிழ் மக்களது போராட்டம், வெறுமனே மொழி, நிலம், பாதுகாப்பு, அரசியல் அதிகாரம் என்பவற்றுடன் மட்டும் மட்டுப் படுத்தப்படப் போகின்ற ஒன்று அல்ல. அது அவர்களின் ஆன்மாவிலிருந்து எழுகின்ற ஒன்று. அதைப் புரிந்து கொள்ள சிங்கள மக்கள் கடக்க வேண்டிய தூரம் இன்றும் நிறையவுண்டு என்ற உணர்வையே "வனசப்பு மல" தருகின்றது.

அந்த மனு விவகாரம் காட்டிக் கொடுப்போரின் கைங்கரியத்தினால் அகதி முகாமைக் காவல் செய்யும் இராணுவத்தினருக்குத் தெரிய வருகின்றது. காஸ்ட்ரோ விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகிறான். இதனால் நோயாளியான பிரபாதேவி நோய் முற்றிய நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறாள்.

காட்டிக் கொடுப்போரை இகழ்ந்து, காஸ்ட்ரோவின் நேர்மையை மெச்சும் இராணுவ பொறுப்பதிகாரி நேர்மையான, வன்முறை பிரயோகிக்கப்படாத, புத்திஜீவித்தனமான நீடித்த விசாரணையின் பின்னர் காஸ்ட்ரோவை விடுக்கிறான். காஸ்ட்ரோ தாயைக் காணாது தவிக்கிறான். அன்று இரவே அகதி முகாமிலிருந்து தப்பி ஓடுகின்றான்.

போராளிகளைச் சந்திக்க நேரும் காஸ்ட்ரோ, அவர்களால் விசாரிக்கப்படுகிறான். பல்கலைக்

## மறுபக்கம்

கழகத்தில் அவனுடன் பயின்ற திருச்செல்வம் அவனை விசாரிப்பதுடன், யாழ் வைத்தியசாலையைச் சென்றடைய காஸ்ட்ரோவுக்கு உதவுகிறான், வைத்திய சாலையைச் சென்றடையும் காஸ்ட்ரோ அங்கு தனது தாய் பிரபாதேவி மரணமடைந்து விட்டதை அறிந்து கொள்கிறான்.

திருச்செல்வத்தினதும் இதர போராளிகளினதும் தூண்டுதலின் பேரிலும், வெறுமையான வாழ்வின் துயரத்தின் பயனாகவும் போராளிகளுடன் காஸ்ட்ரோ இணைகிறான்.

காஸ்ட்ரோ தகவல் பிரச்சார பணியாளனாக பணியாற்றுகிறான். அதற்கிடையில் ரோஸா இலங்கைக்கு வருகிறாள். காஸ்ட்ரோவை சந்திக்கும் அவள் ரஞ்சினியை கல்யாணம் செய்து கொண்டு இங்கிலாந்துக்கு வருமாறு வற்புறுத்தி விட்டுத் திரும்புகிறார்.

இதற்கிடையில், சில நாட்களுக்குள்ளேயே தனது புத்தி ஜீவித்தனத்தின் உதவியால் பிரதேசப் பொறுப்பாளராக காஸ்ட்ரோ பதவி உயர்த்தப் படுவதுடன் பொதுமக்களின் நன்மதிப்பையும் பெற்றுக் கொள்கிறான்.


தனது வெளிப்படையான பேச்சுக்கள் மூலம் இயக்கத்தினுள் அதிருப்தியைச் சம்பாதிக்கும் காஸ்ட்ரோ, இயக்கத்திலிருந்து வெளியேற்றப்படுகிறான். சாதாரண மனிதனாக வவுனியாவை அண்மிக்கும் போது அறிமுகமான அவனுக்குக் கீழே இயங்கிய போராளி ஒருவனால் சுட்டுக் கொல்லப்படுகிறான்.

இந்நாவலின் இடம்பெறும் சம்பவங்கள் யாவும் தனித்தனியே எடுத்து நோக்கும் போது நூற்றுக்கு நூறுவீதம் நிகழக் கூடியவையே. நிகழாமலும் விடலாம்.

எனினும், சர்வ நிச்சயமாக நூற்றுக்கு நூறு வீதம் நிகழ்ந்து கொண்டிருக்கும் பல கொடூர சம்பவங்கள் இங்கு சாதுரியத்துடன் தவிர்க்கப்பட்டுள்ளன. இதற்குக்

தொடர்ச்சி VIIம் பக்கம்...

# சோமாலியாவில் புதிய யுத்தம்!



- எம்.கே.எம். ஷகீப் -

சோமாலியா தாக்குதலுக்குள்ளாகலாம் என்பது இப்போது பொதுவாகத் பத்திரிகை மற்றும் புஷ் நிர்வாக அறிக்கைகளில் தலைப்புச் செய்திகளாக இடம்பெறுகிற விடயம். இன்னொரு வகையில் பார்த்தால், நவம்பரில் அல்-பரகத் என்கிற சோமாலியருக்குச் சொந்தமான பண மாற்று நிறுவனத்தை அமெரிக்கா மூடச் செய்தது. சோமாலியாவுக்கு வெளியே வாழும் சோமாலியர்கள் இதனூடாகவே பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் சொந்தங்களுக்கு பணம் அனுப்பியும் ஏனைய நிதிஉதவி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். பல்லாயிரக்கணக்கான சோமாலிய மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இந்த வெளிநாட்டு வருவாய்களிலேயே தங்கியிருக்கிறார்கள். இது 1992ன் அமெரிக்க ஊடுருவலுக்கு சொல்லப்பட்ட காரணத்தை மீண்டும் நினைத்துக் கொள்ள வைக்கிறது. அதாவது பட்டினியால் வாடுபவர்களுக்கான மனிதாபிமான உதவிச் செயற்பாடு என்கிற அமெரிக்கக் காரணம்! இந்தச் செயற்பாட்டை மீண்டும் நிகழ்த்துவதற்கு சோமாலியர்கள் பட்டினியில் வாட வேண்டும். அவ்வாறு அவர்களைப் பட்டினி போடுவதற்கான ஒரு முதல் நடவடிக்கை அவர்களுக்கு பணம் கிடைக்கும் வழிகளைத் தடை செய்தல். அதனை மேற்சொன்ன தடை மூலம் அமெரிக்கா செய்திருக்கிறது.

இதுமட்டுமல்லாது சோமாலியர்களின் இணையத்தள நிறுவனமான Somali Internet Company யையும் மூடியுள்ளது. இதனால் சோமாலியர்கள் முழு அளவில் இணையச்செயற்பாட்டிலிருந்து தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன், சர்வதேச தொலைபேசித் தொடர்பலைகள் பலவும் தடைகளுக்குட்பட்டிருக்கின்றன. இவை ஒரு நாட்டின் குரல்வளையைப் பிடித்து நசுக்குகிற செயற்பாட்டின் ஆரம்பங்களாகவுள்ளன.

செப்டம்பர் 11 தாக்குதலுடன் சோமாலியாவை நேரடியாகத் தொடர்புபடுத்த அமெரிக்க அரசாங்கத்துக்கு முடியாதிருப்பதால், அது வேறு மாதிரியான நியாயப்படுத்தல்களைக் கையாள்கிறது. பென்டகன் முடிக்க வேண்டிய சில வேலைகள் இன்னுமிருப்பதாகக் கருதி பல புதிய போர்த் தந்திரங்களை மேற்கொள்கிறது. புதிய எதிர்பார்ப்புகளும், பழைய பழிவாங்கல்களும் இந்தப் போர் முயற்சிகளைச் சூழ்ந்திருக்கிறது. இத்திரைப்படத்தின் இலக்கும் இதுதான்.

மக்களுக்கு நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்று அவாவுறுபவர்களான நாங்கள் அனைவரும் இந்த சோமாலியாவுக்கெதிரானதும், ஏனைய சாத்திய இலக்குகளான சூடான், பிலிப்பைன்ஸ் (இங்கு ஏற்கனவே அமெரிக்கா தன் படைகளை அனுப்பிவிட்டது!) ஈராக், கொலம்பியா போன்ற நாடுகளுக்கெதிரானதுமான அமெரிக்க அச்சுறுத்தலை முழு அளவில் எதிர்க்க வேண்டும். எமக்கு அடுத்த இலக்கு எது என்று சரியாகத் தெரியாதிருக்கிறது. இனி வருகிற காலமெல்லாம் யுத்த காலம் தான் என்றும், இலக்குகளை தாங்கள்தான் தெரிவுசெய்வார்கள் என்றும் அடாவடித்தனமாக அறிவித்துள்ளது பென்டகன். என்றாலும் அமெரிக்க மக்கள் சோமாலியாவுக்கெதிரானதும் ஏனைய நாடுகளுக்கெதிரானதுமான இந்த யுத்த முனைப்புக்களை நியாயப்படுத்தவும், ஆமோதிக்கவும் தயாராகயிருக்கிறார்களா என்பதும் இன்னும் தெரியாமலுள்ளது.

இத்திரைப்படத்தை பகிஷ்கரியுங்கள் ..யுத்த எதிர்ப்பிரச்சாரங்களை மேற்கொள்ளுங்கள்..

சென்ற இதழின் தொடர்ச்சி இவ்வாறு முடிவடைகிறது. என்றாலும் புகிஷ்காரத்திற்கான இவ்வாறான அழைப்பு மறுபுறத்தில் ஒரு பிரச்சாரமாகவும் மாறிப்போய்விடுகிறது என்பதுபோல் இல்லையா?

### கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு

நிறவெறி பற்றி நாம் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறோம். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்திருக்கும் எம்மவர்கள் பலர் இதனை அனுபவித்திருப்பார்கள். அடையாளப்படுத்தப்படுகிற வெள்ளையல்லாத நிறமற்றவர்களை "Coloured People" என்று பொதுவாக அழைக்கிறார்கள். இந்த Coloured மக்களின் போராட்டங்கள், புரட்சிகள் பல நடந்திருக்கின்றன. அண்மையில் வாசித்தகட்டுரையொன்றில் அமெரிக்க மறுபக்கச் செய்திகளாக இந்தக் கறுப்பர்களின் அவலங்கள் பல எடுத்துரைக்கப்பட்டிருந்தன. வியட்நாம் போரில் கலந்து கொண்ட கறுப்பினப் படைவீரர்கள் இன்று புறக்கணிக்கப்பட்டவர்களாக அமெரிக்க நகர வீதிகளில் பிச்சை எடுத்துத் திரிகிறார்கள் என்றும், பல அபாயகரமான யுத்த முனைகளில் கறுப்பினத்தவர்களே முன்னனுப்பப்படுகிறார்கள் என்றும் அக்கட்டுரை சில இனவெறி நிகழ்வுகளைச் சொல்லியிருந்தது.

கீழுள்ள உணர்வு வெளிப்பாட்டை வாசித்துப்பார்.. சுவாரஷ்யமாகவும் சோகம் நிறைந்ததாகவும் இருக்கும்..!

ஒரு கறுப்பு நிறத்தவன் வெள்ளையனைப் பார்த்துச் சொல்கிறான்-

## குறிப்பேடு

நான் பிறக்கும் போது கறுப்பு..
வெளியில் போகும் போது கறுப்பு..
பயந்து நடுங்குகையிலும் கறுப்பு..
வளர்ந்து பெரியவனானாலும்
கறுப்பு
குளிரிலும் கறுப்பு, நோயிலும்
கறுப்பு
ஏன் செத்துப் போனால் கூடக்
கறுப்புத்தான்...
ஆனால் உன்னைப் பார்
நீ பிறக்கையில் குங்கும நிறத்தில்
பிறக்கிறாய்.,
வெயிலில் போனால்
சிவப்பாகிவிடுகிறாய்
பயந்தால்
மஞ்சளித்துப்போய்விடுகிறாய்
வளரும்போது
வெள்ளையாகிவிடுகிறாய்
குளிரில் நீலம்பாரித்துவிடுகிறது
உனக்கு
நோயில் பச்சையாகிவிடுகிறாய்..
கடைசியில் செத்தும்போகையிலும்
சாம்பல்
நிறத்தவனாகிவிடுகிறாய்..!

இப்போது சொல்லு
யார் COLOURED மனிதன்/
நீயா நானா/

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "சுதந்திரம்" என்ற குறியீட்டு வன்முறை

- ரவிக்குமார்

'சுதந்திர நாள் பொன்விழா" இது தற்போது புதிதாக சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வரும் ஒரு சரக்கு! பற்பசைகளில் 'எக்ஸ்ட்ரா" பத்திரிகைகள் நடத்தும் பரிசுத் திட்டங்கள், இந்தித் திரைப்படம் முதல் கடிகார நிறுவனங்கள் வரை தீவிரமாயிருக்கின்றது. தேசபக்தி வியாபாரம். கூடவே, சுதந்திரப் போராட்டம் பற்றிய கட்டுக் கதைகளும் அவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அருண்ஷோரி போன்றவர்கள் அவதூறுகளை ஆராய்ச்சிகள் என்ற பெயரில் விற்பனை செய்ய முன்வந்திருக்கின்றனர். இந்தச் சூழலைத் தொகுத்துப் பார்த்தால், 'சுதந்திரப் பொன்விழா" என்ற பெயரில் ஒரு விளம்பர வியாபாரப் போர் - வெகு மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ளதைப் புரிந்து கொள்ளலாம். இதன்மூலம் செலுத்தப்படுவது குறியீட்டு வன்முறையாகும்.

இந்த நாட்டு மக்கள் தொகையில், கால்பகுதி மக்கள் பொதுச் சாலைகளில் நடக்க முடியாது: பொதுக் கிணற்றில் நீரெடுக்க முடியாது: சிரட்டைகளில் தான் 'டீ" குடிக்க வேண்டும்: தங்கள் சவங்களை சாலைகளில் சுமந்து செல்ல முடியாது: தங்கள் பிள்ளைகளை மற்றவர்களைப் போல படிக்க வைக்க முடியாது: அந்தப் பெண்களை யார் வேண்டுமானாலும் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கலாம்: அவர்களை யார் வேண்டுமானாலும் கொலை செய்யலாம்: அவர்கள் குடிசைகளை யார் வேண்டுமானாலும் எரித்துச் சாம்பலாக்கலாம், அதைக் கேட்க அரசியல் கட்சிகள் இல்லை, பத்திரிகைகள் இல்லை, நீதிமன்றங்களும் இல்லை - என்ற கேடுகெட்ட நிலை நிலவுகின்றதே இந்த நாட்டில் - அதற்காக அகமகிழ்ந்து பொன்விழாக் கொண்டாடுவதா?

சுதந்திர நாள் வெள்ளி விழாவின் போது, பெரியார் சொன்னார்: ''நமது சுதந்திரமானது ஒரு யோக்கியன், ஒரு பெரிய மனிதன் என்று சொல்வதற்கு ஒரு ஆள் கூட நமது தேசத்தில், நமது நாட்டில் இல்லாமல் செய்துவிட்டது. அது மட்டுமா? நம் நாட்டில் காலித்தனம், அயோக்கியத்தனம், கயவாளித்தனம், புரட்டு, பித்தலாட்டம், மோசடி, துரோகம், வஞ்சனை முதலிய குணங்கள் - தன்மைகள் இல்லாத மக்களையோ, அரசியல் கட்சிகளையோ, தலைவர்களையோ, அரசியல்வாதிகளையோ காணமுடியாதபடி செய்து விட்டது. பெரிய பித்தலாட்டம், துரோகம், வஞ்சனை இவைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் தான் தலைவர்களாகிறார்கள்: தேசியவாதிகளாகின்றார்கள்: தேசபக்தர்களாகின்றார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இந்தச் சுதந்திரம் உள்ளவரை மக்களின் நேர்மையுள்ள யோக்கியன் இருக்க மாட்டான் என்பதோடு, தோன்றவே மாட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.""

தந்தை பெரியார் குறிப்பிட்டு 25 ஆண்டுகள் கடந்துவிட்ட இன்றைய நிலையில், ஏதேனும் மாற்றம் நடந்திருக்கின்றதா? அரசியலில் நாம் பெற்ற மாறுதல் என்பது 'கேடுகெட்ட நிலையிலிருந்து கழிசடை நிலைக்கு சென்று கொண்டிருக்கிறோம்", என்ற அளவில்தான் உள்ளது.

இப்படியான கேடுகெட்ட நிலையை உருவாக்கித் தந்த ''சுதந்திரப் போராட்டத்தில்"" தலித் மக்கள் பங்கேற்கவில்லையென்று குறைபட்டு குற்றம் சொல்கிறார்கள் - சில மேதாவிகள், ஆதிக்க சாதி இந்துக்களால் நடத்தப்பட்ட அந்தப் போராட்டத்தில், இஸ்லாமியர்கள் பங்கேற்றார்களா? 'கிலாபத்" இயக்கத்தின் போது தான் அவர்களது பங்கேற்பு இருந்தது. தலித் மக்கள் தம்மை அடக்கி ஒடுக்கும் ஆதிக்க சாதி இந்துக்களோடு சேர்ந்து கொண்டு என்ன போராட்டம் நடத்த முடியும்?

தங்களுக்குச் சமத்துவம் தராத சாதி இந்துக்கள், சுயராச்சியம் கிடைத்த பிறகு, அதைத் தருவார்களென நம்புவதற்கு தலித் மக்களுக்கு என்ன நியாயமிருக்கின்றது? "இந்திய சுதந்திரம் என்பது, இந்து ஆதிக்கத்தை நிலை நிறுத்தும். இந்த இந்து ஆதிக்கம் தீண்டாத மக்களைப் பொறுத்தவரை வாழ்க்கைக்கும், சுதந்திரத்துக்கும், மகிழ்ச்சிக்கும், என்றுமே வாய்ப்பில்லாமல் செய்துவிடும். அவர்கள் விறகு வெட்டிகளாகவும், நீர் இறைப்பவர்களாகவுமே தொடர்ந்து காலந்தள்ள வேண்டிவரும்"" என்ற அச்சம் தலித் மக்களிடையே இருந்தது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திடமிருந்து 'சுதந்திரம்" பெறுவதை தலித் மக்கள் ஒருபோதும் எதிர்க்கவில்லை. மாறாக, பெரும்பான்மையாகவுள்ள இந்துக்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும், சிறுபான்மையாகவுள்ள தங்களுக்குச் சில பாதுகாப்பு வழிமுறைகளைக் காண்பதற்கும் தான் அவர்கள் போராடினார்கள்.



அன்று தலித் மக்கள் எதற்காகப் பயந்தார்களோ அது இன்று நிரூபணமாகியுள்ளது. இந்திய அரசு என்பது இந்துக்களின் அரசுதான் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. 'இந்துத்துவ" என்றால் அது ஆர்.எஸ்.எஸ். மற்றும் பரிவார அமைப்புகளின் கொள்கைகள், நடைமுறைகளில் தான் உள்ளது என்பது போல நம்மில் பலர் நம்பிக் கொண்டிருக்கின்றோம். அனைத்து வார்த்தைகளின் பின்னாலும் செயல்களின் ஆழத்திலும் பொதிந்துள்ள 'இந்துத்துவ" வை நாம் கிளறிக் கண்டறிந்தாக வேண்டும். அப்போதுதான் இன்று சுதந்திரப் பொன்விழா என்ற பெயரில் நடத்தப்படும் கூத்து 'இந்துத்துவ" வின் வடிவம்தான் என்பதை நாம் உணரமுடியும். இதை வெளிப்படுத்த, இந்தக் கொண்டாட்டங்கள் கட்டியெழுப்பும் மதிப்பீடுகளை நம்பிக்கைகளை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டும். அது மட்டுமின்றி 1947க்குப் பின்னால் சென்று "சுதந்திரப் போராட்டம்"" என்று முன்வைக்கப்படும் - ஒற்றைப் பரிமாணம் கொண்ட வரலாற்றைக் கேள்விக்குள்ளாக்க வேண்டும். அதற்கான ஒரு வழிமுறை தான் காந்தியத்தைப் பற்றிய விசாரணையும், தனி வாக்காளர் தொகுதி உரிமை பற்றிய பிரச்சாரமும் ஆகும்.

தலித் மக்களை ஏமாற்ற ஒரு குறியீடாக 'அரிஜன்" என்ற வார்த்தையை காந்தி கண்டு கொண்டது 1931 ஆகஸ்ட் மாதம் இரண்டாம் நாளில் தான். அந்த நாளில்தான் காந்தியின் வார்த்தைக் கட்டத்தில் அந்தச் சொல் இடம் பிடித்தது. நார்சி மேத்தா என்ற பார்ப்பனக் கவிஞர் பயன்படுத்திய அந்த வார்த்தையை காந்தி அன்றுதான் முதன் முதலில் எடுத்தாண்டார். ஒடுக்கப்பட்ட தீண்டப்படாத மக்களை 'அரிஜன்கள்" - கடவுளின் குழந்தைகள் என்று குறிப் பிட்ட காந்தி, ''நாம் துரிஜன்கள்" (சாத்தானின் பிள்ளைகள்) எனவும் குறிப்பிட்டுக் கொண்டார். இது 'யங் இந்தியா" இதழில் (ஆகஸ்டு 6. 1931) பதிவாகியுள்ளது.

"நாமும் அரிஜன்களாக - கடவுளின் குழந்தைகளாக மாறமுடியும். அது தலித் மக்களுக்கு நாம் இழைத்துவரும் பாவத்தை நாம் உணர்ந்து அதற்குப் பரிகாரம் செய்யும்போது மட்டும்தான் சாத்தியமாகும்"" எனவும் காந்தி சொன்னார். அதற்காகத்தான் அதாவது - பாவிகள் பரிகாரம் தேட "சாத்தானின் மக்கள்"" ''கடவுளின் குழந்தைகளாக"" மாறுவதற்காகத்தான் காந்தி, தலித் மக்களை இந்து மதத்தின் பிடியிலேயே நிறுத்தி வைக்க வேண்டுமென்றார். தலித் மக்கள் பிரச்சினையை அவர் அணுகிய விதம் முழுவதும் இந்துக்களின் ஆன்மீக ஈடேற்றம் / பாவத்துக்கான பரிகாரம் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்து மதம் என்பதன் பிடிக்குள் இருக்கும் வரை 'அரிஜன்கள்" நடைமுறையில் ''துரிஜன்களாகவே"" இருப்பார்கள், என்பதை அம்பேத்கர் மட்டுமே உணர்ந்து கொண்டார்.

ஏனென்றால், காந்தியைப் போல தனது ஆன்மீகத் தேடல் தொடர்பான பிரச்சினையான சாதிப் பிரச்சினை அவருக்கு இருக்கவில்லை. அது வாழ்வா சாவா என்ற பிரச்சினையாக அம்பேத்கருக்கு இருந்தது. இதுதான் காந்தியின் போலிச் சீர்திருத்தத்திலிருந்து அம்பேத்கரின் சமூக நீதிக்கான போராட்டத்தை வேறுபடுத்தியது.

இன்று, காந்தியின் கொள்கைகளை நாம் பரிசீலிப்பதென்பது, நம்மை அன்பால் கொன்றொழிக்க முயலும் அனைத்து சக்திகளையும் அடையாளம் காண உதவும். 'சமபந்தி" போன்ற, காந்திய மாயைகள் தமிழக அரசினால் களத்தில் மீண்டும் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் இன்றைய நிலையில், இத்தகைய விழிப்புணர்வு மிகவும் அவசியமாகும்.

இன்று, குறியீட்டுத் தளத்தில், தலித் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ள வன்முறையை அதே களத்தில் எதிர்கொண்டாக வேண்டும். குறியீட்டு வன்முறைகளை எதார்த்த தளத்தில் நின்று எதிர்க்க முடியாது. நாம் எல்லாவற்றையும் குறியீட்டுத் தளத்துக்கு மாற்றியாக வேண்டும் இந்த அமைப்பின் அதிகார விதிகளை அதற்கு எதிராகத் திருப்புவதே ஒரே வழியாகும்.

இதற்கான எடுத்துக்காட்டுக்களை, அம்பேத்கரின் பெரியாரின் சிந்தனைகள் மற்றும் நடைமுறையிலிருந்து நாம் உருவாக்கிக் கொள்கினறோம். அதனால் தான் இன்று, தலித் ஒருவர் குடியரசுத் தலைவராக வந்திருப்பதாகச் சொயல்படுவதை ஆளும் வர்க்கம் செய்துள்ள குறியீட்டு மோசடி என்று புரிந்து கொள்கின்றோம். அதனால் தான் இன்று தமிழக அரசு முன் வைக்கின்ற 'சமபந்தி போஜனம்" முதல், சமத்துவபுரம் வரை எதை நினைத்தும் நாம் மகிழ்ச்சி கொள்ள முடியாது போகின்றது. அதனால் தான் கூறுகின்றோம்: எங்களுக்குத் தேவை சில பருக்கைகளல்ல - முழு சாப்பாடு, எங்களுக்குத் தேவை வெற்று சலுகைகளல்ல - இந்த நாடு.

## தமிழீழ ஒறுப்புச்சட்டத்தில்...

III ம் பக்கத் தொடர்ச்சி

### இயற்கைக்கு முரணான பாலியல் வல்லுறவு

நவநாகரீக வளர்ச்சியில் புதிய விஞ்ஞான கண்டு பிடிப்பு வரிசையில் ஆண், பெண்ணுக்கான செயற்கைப் பாலியல் புணர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வரிசையில் இயற்கைக்கு முரணானது குற்றம் என்பது ஆண், பெண் சுதந்திரத்தின் மீதான மோசமான கட்டுப்பாட்டு திணிப்பாகும் என ஆசிரியர் கூறியுள்ளார்.

"இயற்கைக்கு முரணான பாலியல் உறவு" எனும் பிரிவு விளக்கத்திற்கு குழப்பத்தை ஏற்படுத்துவதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அப்பிரிவு மட்டுமல்ல சட்டத்தில் எப்பிரிவும் அத்துறை சாராதவிடத்து சிக்கல்களை ஏற்படுத்துவது இயல்பு. இப்பிரிவு ஆண், அல்லது பெண், விஞ்ஞான ரீதியில் செயற்கை பாலியல் புணர்வுகளின் மூலம் சுய இன்பம் பெறுவதை ஒரு போதும் தடுக்கவில்லை என்பதுடன் கட்டுப்பாடே விதிக்கப்படவில்லை. எனவே மோசமான கட்டுப்பாடு என்பது இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணி எடுத்தியம்பப்பட்ட ஒரு சொற்பதமாகும்.

### பரத்தமை

பரத்தமையில் ஈடுபடும் பெண்களை மட்டும் தண்டித்து ஆண்களை ஒறுப்புச் சட்டம் தப்பவிடுகின்றது என ஆசிரியர் எடுத்தியம்பியுள்ளார்.

காசு நோக்கத்திற்காக ஒரு பாலர் மறுபாலாருடன் "உடல்உறவு கொள்ளுதல் பரத்தமை எனும் தவறாகும். இத்தவறுக்கு 4 ஆண்டுகள் நீடிக்கக் கூடிய இருவகையில் ஒருவகை சிறையொறுப்பு வழங்கலாம். இவ் ஒறுப்புச் சட்டப் பிரிவு - பெண்ணை மட்டும் சுட்டவில்லை. இருபாலாரையும் சுட்டி தண்டிக்கின்றது. (த.ஒ.பி : 420, 421) மேலும் பரத்தமை விடுதி நடத்துவோர், உடந்தையாளர் போன்றோரும் தண்டிக்கப்பட ஒறுப்புச் சட்ட பிரிவு 419 வழிவகுத்துள்ளது என்பதுடன் பரத்தமை விடுதியில் பரத்தமை பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டால் கூட அக்குற்றம் பாலியல் வல்லுறவாகவே கணிக்கப்படவும் அப்பிரிவுகள் வழியமைத்துக் கொடுத்துள்ளன. எனவே இச்சட்டத்தில் ஆண் தண்டிக்கப்படவில்லை என்பது எந்த விதத்திலும் சரியானதல்ல.

மேலும் நூல் ஆசிரியரால் சுட்டிக்காட்டப்படாத 418, 415, 416 ஆகிய பிரிவுகளையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். எந்த நாட்டிலும் குற்றவரையறைக்குட்படுத்தப்படாததும், குடியியல் நடவடிக்கையில் பின்பற்றப்பட்டு வந்ததுமான காதல் வாக்குறுதி மீறல்கள், எமது சமுதாயப் பெண்ணின் உரிமை பாதுகாக்கப்படும் வண்ணம் தமிழீழ ஒறுப்புச்சட்டம் அதனை வடிவமைத்துள்ளது. அதாவது குறித்த பிரிவுகள் முறையே காதலித்து கைவிடுதல், காதலித்து உடல் உறவுகொண்டு கைவிடல், காதலித்து தாய்மை அடையச் செய்து கைவிடல் ஆகிய குற்றங்களாக அடையாளப்படுத்தி குற்றம் புரிந்தவருக்கு தண்டனையும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு குழந்தைக்கும் இழப்பீடும் குழந்தைக்கு தந்தைப்பெயர் பதிவையும் ஒரே நடவடிக்கையில் செய்து முடிகின்றது.

ஆகவே மேற்படி பிரிவுகளின் படியும், ஆய்வுகளின் படியும், ஒறுப்புச்சட்டம் பெண்கள் விடயத்தில் அசட்டையாகவும், பெண் விடுதலை சிந்தனையின்றியும் ஆக்கப்பட்டுள்ளதென்ற ஆசிரியரின் கூற்று, குறித்து ஒறு சட்டப் பிரிவுகளை ஆழமாக பார்க்காது மேலெழுந்த வ[illegible] தட்டிப்பார்த்து எழுதப்பட்டதாகவே நான் கருதுவதுடன் வேதனையும் அடைகின்றேன்.

## நிகழ்ந்திருக்கூடிய..

VIம் பக்கத் தொடர்ச்சி

காலாக இருப்பது நாவலாசிரியரின் கருத்துருவாக்க[illegible]

இச்சம்பவங்களை அவர் தொகுத்துக் கூறும் முறைமையினால் தமது கருத்துருவாக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

நாவலாசிரியரின் முழுத் தேசத்தின் மீதானதும், மக்கள் மீதானதுமான அக்கறைகளை கொச்சைப்[illegible] எனது நோக்கமன்று. அவரது 'பெருந்தன்மை"யும் போராட்டத்தினதும், போராளிகளினதும் நியாயாதிக்[illegible] அவர் உணர்ந்து கொண்டுள்ள முறைமையும் நிச்ச[illegible] இன்றைய இனவாத கொக்கரிப்புகளுக்கு மத்தியில் வேறுபடுத்திப் பார்க்க வேண்டியவை என்பது உண்[illegible]

எனினும் அவற்றை தக்கபடி அவற்றின் ஆன்மாவோ[illegible] சேர்த்து உள்வாங்கியுள்ளாரா, வெளிப் படுத்தியுள்ளாரா என்பதில் மிகுந்த அதிருப்தி கொள்ள நேர்கிறது.

தமிழ் மக்களது போராட்டம், வெறுமனே மொழி, நில[illegible] பாதுகாப்பு, அரசியல் அதிகாரம் என்பவற்றுடன் மட்டும் மட்டுப் படுத்தப்படப் போகின்ற ஒன்று அல்ல. அது அவர்களின் ஆன்மாவிலிருந்து எழுகின்ற ஒன்று.

அதைப் புரிந்து கொள்ள சிங்கள மக்கள் கடக்க வேண்டிய தூரம் இன்னும் நிறையவுண்டு என்ற உணர்வையே 'வனசப்பு மல" தருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் சினிமாவில் நம்பிக்கை கொள்ள வைக்கும் 'அழகி'

-றேவ்

எழுத்தாளராகவும், சிறந்த ஒளிப்பதிவாளராகவும் அறியப்பட்ட தங்கர் பச்சானின் 'அழகி' படம் வெளிவந்திருக்கிறது. அவர் எழுதி நெறியாள்கை செய்துள்ள முதல் படம் இது. இவர் காதல் கோட்டை, பாரதி போன்ற படங்களுக்கு ஒளிப்பதிவு செய்திருப்பவர். அத்துடன் ஒன்பது ரூபாய் நோட்டு, (நாவல்) வெள்ளைமாடு (சிறுகதைத் தொகுதி) முதலான நவீன படைப்புகளைத் தமிழுக்கு வழங்கியவர். தமிழக அரசு, அக்னி அஷர விருது (திருப்பூர் தமிழ்ச்சங்கம்) இலக்கியச் சிந்தனை ஆகிய பரிசுகளை இலக்கியத்திற்காகப் பெற்றவர் தங்கர்பச்சான்.

புதிதாக இயக்குநர்களாக வருபவர்கள் நல்ல திரைப்படங்களை தர வேண்டும் என்ற ஆவலுடன் வந்தாலும், வழமையான சினிமாப் பாணியில் இருந்து அவர்களால் எவ்வளவு தூரம் வெளியில் வர முடிந்திருக்கிறது என்பது ஒரு கேள்வியே.

அவர்களால் மாறுபட்ட, வித்தியாசமான கதையம்சங்களைப் கொண்ட படங்கள் எடுக்கப்பட்டாலும், கடைசியில் அந்தக் கருவைச் சிதைத்து விடுகின்ற வேலையே அதிகளவில் நடைபெறுகின்றது. ஏனெனில் வழமையான சினிமாவில் இருந்து விலகி நல்ல படத்தினை எடுத்து வெற்றி பெற முடியுமா என்பது இவர்களுக்குச் சந்தேகமே.

மனிதர் மனிதரை நேசிப்பதற்கும், மதிப்பதற்கும், கௌரவப்படுத்துவதற்கும் அப்பால், பழிவாங்குவதும் குரோதம் பாராட்டுவதுமே முதன் நிலைப் படுத்தப்படுவதோடு மனித விழுமியங்கள் சிதைவிற்கு உள்ளாக்குள்ளாக்கப்படுகின்றது.

அந்த வகையில் சாதாரண சினிமாத் தனங்கள் இருப்பினும் மனிதர்களை மதிக்கும், கொண்டாடும் மனிதர்களாய் பார்க்க வைத்ததில் அழகி படத்திற்கு பங்கு உண்டு.

தனது முதற்படத்திலேயே ஒரு சாதாரண மனிதனின் முதற்காதல் பற்றி எடுத்து அதைச் சிறப்பாகச் செய்துள்ளார் தங்கர் பச்சான்.

சமூக வரன்முறை மீறலுக்கு முயற்சி செய்வதாகச் சொல்லிக் கொண்டு, ஏதோ புரட்சி செய்வதாகக் காட்டிக் கொண்டு அதைச் கொச்சைப் படுத்துவதிலும் பார்க்க இருக்கின்ற சூழலிலேயே ஒரு மனிதனை அவனது உணர்வுகளை சரியாகக் கொண்டுவருவதென்பதும், மனிதநேயத்தினை வெளிப்படுத்துவதென்பதும் திணித்தலுக்கு அப்பால் ஒரு கவிதை போல் செய்யப்பட்டுள்ளது.

அழகி படம் காதலையும், வேதனையையும், புரிதலையும் அழகாக வெளிப்படுத்தியிருக்கின்றது என்ற அடிப்படையில் இந்தப் படம் பார்க்கப்பட வேண்டிய படமும் ஆகின்றது.

நிலாக்காலம், குட்டி போன்ற படங்களின் வருகையின் பின்னர் குழந்தைப் பருவத்தினை அழகாக சித்திரிப்பதான படங்கள் என்ற அளவில் எம்மை நாமே திரும்பிப் பார்த்துக் கொள்ளக் கூடிய ஆரம்பம் இந்தப் படத்தினூடாகவும் கிடைத்திருக்கிறது. யதார்த்தமான சிறுவர்களின் கிராமத்தவர்களின் மீதான காட்சிப்படுத்தல்கள். குழப்படிகாரச் சிறுவர்கள் எப்போதும் ரசிக்கத்தக்கவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

அவர்கள் வயலில் வேலை செய்து கொண்டிருக்கும் போது காதில் கடலையைக் கொழுவிவிட்டு வலியில் அழுவதும், பின்பு அதையே கொழுவி அழகு பார்ப்பதும், பள்ளிக் கூடத்தில் அவர்கள் செய்யும் குறும்புகள் என்று ஒரு அழகான காலத்தினை இயல்பாக படமாக்கி உள்ளார் தங்கர் பச்சான்.

அதே சிறுவர்கள் வாலிபர்களானதும், தங்களுடன் படிக்கும் அழகிய பெண்ணின் (தனலட்சுமி) பெயரைத் தங்கள் பெயருடன் கள்ளிச் செடியில் எழுதி தமது இளமை ஆதங்கத்திற்கு வடிகால் தேடிக் கொள்கிறார்கள். அதே நேரம் அவளை நேசித்தும், அவளது பெயரை எழுதாது தனக்குள் ஒழித்து வைத்துக் கொண்டு அவஸ்தைப்படும் ஒரு மாணவனுமான சண்முகம்.

சண்முகமும், தனலட்சுமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலும் விழிகளால் கொண்டாடிக் கொண்டாலும் அதை வெளிப்படுத்தாமல் தமக்குள் வளர்த்துக் கொள்ளும் அவர்கள்.

பள்ளிப் படிப்பை முடித்து, அவன் மேற்படிப்பிற்காக வெளியூர் சென்றதும், அந்த ஊரின் அழகியான தனலட்சுமியின் அக்கா மரணமடைந்துவிடுகிறாள் என்பதற்காக அவளை அவளது அக்காவின் கணவருக்கே மணம் முடிந்து வைத்துவிடுகிறார்கள்.

அவர்களது முதற்காதல் அவர்களுக்குள்ளேயே முடங்கிப் போய்விடுகின்றது. அதற்காக யாரும் செத்துவிடவில்லை. ஒருவர் மீது ஒருவர் காழ்ப்புணர்வு கொள்ளவுமில்லை.

காலம் எல்லாவற்றையும் மாற்றிவிடுகின்றது. அவன் மருத்துவனாகி வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். அவனது துணைவியும் உத்தியோகம் பார்க்கும் பெண். அவனுக்கு இரண்டு பிள்ளைகளும் பிறந்து விடுகின்றன. ஒரு சாதாரண மருத்துவனின் வாழ்க்கையை அவன் வாழ்ந்து கொண்டிருந்தான்.


ஒருமுறை அவனுடைய ஊர்க்காரனான தனலெட்சுமியின் கணவர் அவனைத் தேடி வேலை கேட்டு வருகிறார். அவருக்கு வேலை எடுத்துக் கொடுக்கிறான் சண்முகம். பெருத்த குடிகாரனான அவன் சிறிது



காலத்தில் பின் இறந்து போகிறார்.

தனலெட்சுமியின் கணவராக சிறிய காட்சியில் வந்தாலும் ஷிண்டேயின் (பாரதியாக நடித்தவர்) நடிப்பு அற்புதமானது. குடிகாரனான அவர் வாந்தி எடுத்து விட்டு காலையில் எழுந்து தனது அசிங்கமான செயற்பாட்டை நினைத்து தனக்குத் தானே திட்டிக் கொள்வதும், வேலை எடுத்துக் கொடுக்க அழைத்துச் செல்லும் போது தன்னைச் சிறந்த வேலைக்காரனாகக் காட்டிக் கொள்வதும் என்ற நன்றாகவே நடித்துள்ளார் ஷிண்டே.

சிறிது காலத்தின் பின் சண்முகம் வேலை முடிந்து வரும் போது நடுவீதியில் விபத்து நடந்த இடத்தினைச் சுற்றியுள்ள கூடத்தினை விலத்தி பார்க்கும் போது காயமடைந்த தனது மகனை மடியில் வைத்துக் கொண்டு அழுது கொண்டு நடுரோட்டில் இருக்கும் பெண்ணாக தனது முதற்காதலியைக் காணுகிறான். தனது காதலி காலத்தில் வறுமைக் கோடுகளால் கிழிக்கப்பட்ட பெண்ணாய் சிதைந்து போய் விபத்துக்குள்ளான மகனை மடியில் வைத்துக் கதறி கொண்டு இருப்பாள். அவனைக் கண்டவுடன் அகன்று விரியும் அவளது விழிகள். ஊரில் செல்லப் பெண்ணாகவும், அழகியாகவும் இருந்தவள் இன்று பழைய சேலையும், கூலி வேலைசெய்யும்



பெண்ணாக மகனுடன் நடுவீதியில். அவளை அந்த நிலையில் கண்ணுற்று அதிர்ச்சி அடைந்தவனாய் சண்முகம். தனது முதற் காதலியை கூலி வேலை செய்யும் பெண்ணாய் இனியொருதரம் சந்திப்போமென்று நினைத்திராத அதிர்ச்சி..

அவளது மகனுக்கு மருத்துவம் செய்து விட்டு அவளுடைய வீட்டிற்கு செல்கிறான் சண்முகம். பாதையோரத்தில் கொட்டில்கள் போட்டு குடியிருக்கும் கூலித் தொழிலாளிகளுடன் அவளும் ஒருத்தியாய். மழை பெய்தவுடன் அங்கு இருக்க முடியாமல் ஒதுங்கிக் கொள்வதற்கான இடம் தேடி ஓடுபவர்களுடனான வாழ்க்கை. அவள் தனது வாழ்வின் யதார்த்தினை ஏற்றுக் கொண்டவளாய். அந்தக் கஸ்டங்களுக்குள்ளால் தன்னை இணைத்துக் கொண்டு வாழப் பழக்கப்பட்டவளாய். அது ஒரு அபத்தமான தோல்வி..

அவளுடைய பரிதாப நிலையைப் பார்த்து அவளை தனக்குத் தெரிந்த ஒருவரின் வீட்டில் வேலைக்காரியாய் சேர்த்து விடுகிறான் சண்முகம். அந்த வாழ்க்கை அவளுக்கு முன்னைய வாழ்வை விட சிறந்ததாக இருந்தாலும் அவள் அங்கு அவமானப்படுவதையும், அவளது மகன் பசித்திருந்தும் கூட வீட்டுக்காரர் சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருப்பதும் அவனுக்கு வேதனையை உண்டு பண்ணுகின்றது.

தனது வீட்டிற்கே வேலைக்காரியாக அழைத்து வருகிறான் அவளை. அவனது மனைவியும் வேலைக்குச் செல்லும் பெண் என்பதால் அவர்களது குழந்தையை அவள் பார்த்துக் கொள்கிறாள்.

வழமையாக இரண்டு பெண்டாட்டிக்காரப் படங்களைப் பார்த்து, தனியாக இருந்தாலே ஏதாவது பிரச்சினையாகி விடும் என்று எதிர்பார்த்திருப்பவர்களுக்கு எந்தவித சலனமுமில்லாமல் அவர்கள் பழகுவதும், வழமையான சினிமாவினை பார்த்தவர்களுக்கு ஏமாற்றத்தினைத் தரும். அதே வேளை அவன் மீதான அவளின் காதலை - அதுவும் அவள் இன்னொருவனுக்கு மனைவியாகி குழந்தை பிறந்த பின்பும் அவன் மீது காதல் இருக்கின்றது என்று காட்சிப்படுத்துவது பெண்ணின் மனதிலும் கற்பைக் கோரும் வழமையான தமிழ் சினிமாவிற்கு ஒவ்வாததுதான். ஆயினும், அது அழகாகவே காட்சிப்படுத்தப்படுகின்றது.

அதேநேரம் அவர்கள் இருவரும் முன்பு காதலித்தவர்கள் என்று வள்மதிக்குத் (சண்முகத்தின் மனைவிக்குத்) தெரியவருகின்றது. அவள் அதை நேரடியாகவே சண்முகத்திடம் கேட்கிறாள். முன்பு அவளைத் தான் காதலித்தாக ஏற்றுக் கொள்வதோடு, அவளின் நிலை பற்றியும் சொல்கிறான்.

அதற்கு அவள் உங்கள் மேல் நம்பிக்கையுண்டு. ஆனால் என்றாவது ஒருநாள் உங்களை இழந்து விடுவேனோ என்று பயமாக உள்ளது என்று சொல்கிறாள்.

மிகவும் நாகரிகமான, கொச்சைப்படுத்தப்படாத உரையாடல் இது. தனது துணைவனின் கடந்த கால காதலைப் புரிந்து கொள்வதும், அவனது மனநிலையை, அவனது வேதனையை பகிர்ந்து கொள்வதுடன், அவனை இழந்துவிட முடியாதவளாய் பரிதாபமாய் ஒரு பெண்.

ஏன் முதலே என்னிடம் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் தான் புரிந்து கொண்டிருப்பேன் என்பதும், தனலட்சுமியின் பரிதாப நிலையைப் பார்த்து கவலைப்படுவதும், அதே நேரம் தான் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை அதனால் பாதிக்கப்பட்டுவிடுமோ என்று எண்ணத் தோன்றுவதும் ஒரு சாதாரண பெண்ணின் இயல்பே. ஆனால் அதை நாகரிகமாக வெளிப்படுத்தியிருப்பது இயக்குனரின் வெற்றியே.

காதல் பற்றிப் பல கதைகள் உண்டு. சாஜகானின் ஏழாவது மனைவியான மும்தாஜிற்குத் தான் சாஜகானால் ஒரு கல்லறை கட்ட முடிந்தது. ஆகவே சாஜகானின் முதல் காதல் அவரின் ஏழாவது மனைவியா என்பதற்கப்பால் எத்தனையாவது தரம் நாம் காதலிக்கிறோம் என்பதை விட யாரை நாம் உண்மையாகக் காதலித்தோம் என்பதே முக்கியமானது. அதைப் பொறுத்தே அதனது தாக்கங்களும், வலிகளும், வேதனைகளும் இருக்கும்.

சண்முகத்திற்கும், தனலட்சுமிக்கும் தமது முதலாவது காதல் மீது ஏக்கங்கள் உண்டு, வலிகள் உண்டு, வேதனை உண்டு. நிறைவேறாமல் போனது தொடர்பான கோபம் இல்லை. யதார்த்தினை ஏற்றுக் கொள்ளல், இருக்கும் மனிதர்களை நேசித்தலும் கொண்டாடுதலும் வாழ்வாகிப் போகின்றது.

இறுதியில் தனலட்சுமி குழந்தையை அனாதை இல்லத்தில் சேர்த்துவிட்டு எங்கென்று தெரியாது போய்விடுகின்றாள். தன்னால் சண்முகத்தின் குடும்பம் பிரிவதையும், வேதனைப்படுவதையும் விரும்பாமல் சாதாரணமாக விலகிப் போய்விடும் பெண்.

ஆயினும் அவளின் குழந்தையைக் கண்டுபிடித்து தங்களுடன் வளர்ப்பதோடு அவளின் வருகைக்காக காத்திருக்கும் அவனின் குடும்பம்.

எந்தவித அலட்டல்களும் இல்லாமல் மிகவும் இயல்பாக எடுக்கப்பட்டிருக்கிற படம். ஒரு சாதாரண மருத்துவனின் முதற் காதல் தோல்வி. அவனை நேசிக்கும் அவனது காதலி. அவனது மனைவியாக நேசிக்கும் இன்னொரும் பெண். எந்தவித கொச்சைப்படுத்தலுக்கும் உள்ளாகாமல் வெளிவந்தது இயக்குனரின் வெற்றி.

இயக்குனர் ஒரு முறை தனது பேட்டியொன்றில் கூறினார்.

இன்று சினிமாத்துறையில் என்ன நடக்கிறது. ஒரு இசையமைப்பாளரின் பின்னால் இயக்குநர்கள். தயாரிப்பாளர்கள் எல்லோரும் அலைகிறார்கள். அந்த இசையமைப்பாளர் போட்டுக் கொடுக்கும் ஐந்தாறு பாடல்களை மையமாக வைத்துக் கதையை உருவாக்குகிறார்கள். ஒட்டுமொத்த இந்திய ரசிகர்களையும் கவருவதற்காக எந்த ஒரு பிராந்திய மொழியின் நேட்டிவிட்டியும் ஒரிஜினாலிடியும் இல்லாமல் படம் எடுக்கிறார்கள். தமிழர்கள் என்பதற்காக நாம் எப்படி சந்தோஷப்பட முடியும். தமிழின் கலாசாரம். தமிழின் மண் வாசனை. தமிழின் இசையழகுகள் அதில் இல்லையே. அந்தந்தப் பிரதேசங்சகளிலிருந்த ஒவ்வொரு விசயங்களை மற்றும் மிகவும் மாடர்னான விஷயங்களை எடுத்துக் கொடுக்கிறார்கள். என்னைக் கேட்டால் நமது தமிழ் சினிமாவின் நேட்டிவிட்டி மகேந்திரன், பாரதிராஜா இளையராஜாவோடு போய்விட்டது. தலையைச் சுற்றித் தூக்கி எறிய வேண்டிய பாடல்கள் தான் இன்றைய சினிமாவை ஆள்கின்றன. தமிழ் சினிமாவை மேலும் கெடுக்காமல் கேமரா இயக்குநர் டெக்னிஷியனாக இருந்துவிட்டுப் போகிறேன்.

என்று தெரிவித்தார்.

அவரின் கோபங்கள் நியாயமானது தான் என்றாலும், அதையே அவரின் படத்திலும் காண நேர்ந்தது மிகப் பெரிய வேதனை. அதாவது ஒரு பாடல் காட்சியில் தேவையே இல்லாமல் நன்கு பருத்த பெண் ஒரு சிறிய உடையை அணிந்து கொண்டு அசிங்கமாக நடமானடுகிறாள். இதை படத்தில் சேர்த்தது எதற்காக? அதே நேரம் விவேக்கின் நகைச்சுவை என்ற பெயரில் அறுத்தது எதற்காக?

எவ்வளவு தான் தமிழ்ச் சினிமா மீதான விமர்சனத்தினைக் கொண்டுள்ள இயக்குனராக இருந்தாலும் மசாலாத்தனங்களைச் சேர்க்காமல் படம் எடுக்க முடியாது என்பது நியாயம் தானா?

அப்படியானால் தலையைச் சுற்றி எறிய வேண்டிய பாடல்களையும், ஆடல்களையும் தங்கர்பச்சானாலுமா தூக்கி எறிய முடியவில்லை?

இசையமைத்திருப்பவர் இளையராஜா. தயாரிப்பு உதயகீதா சினி கிரியேஷன்ஸ் சார்பில் திருமதி உதய கீதா.

குறைகள் இருப்பினும் மனிதரை மனிதர் நேசிப்பதற்கும் கொண்டாடுவதற்குமான படத்தினை அளித்திருப்பது இன்னும் அவரிடம் எதிர்பார்க்கலாம் என்று தோன்றுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாசகர் செ(ா)ல்லடி!

# தமிழ் தேசிய எழுச்சிக்கு பொருத்தமான நிறுவன வடிவம் எது?

## - டி.சிவராமின் கட்டுரைக்கு மேலதிகக் குறிப்பு! -

நிகரி 2வது இதழில் "தமிழ் தேசிய கூட்டமைப்பு திசைமாறி விடக் கூடாது" என்று தலைப்பிட்டு டி. சிவராம் எழுதியிருந்த கட்டுரை பார்த்தேன்.

தமிழ் தேசிய எழுச்சியை நிறுவனமயப்படுத்துவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பை ஒரே கட்சியாக வடிவம் எடுக்க செய்வது, அச்சக்தி தமிழரின் உரிமைகளை அரசியல் தளத்தில் முன்னெடுப்பது எனும் செய்தியை இக்கட்டுரை கொண்டிருப்பதாக காண்கிறேன்.

கூட்டமைப்பினரின் நலன்சார் சந்தர்ப்பவாத அரசியல் பற்றி டி. சிவராம் தெளிவாகவே சுட்டிக்காட்டியிருக்கிறார். கூட்டமைப்பின் நம்பகத்தன்மை இன்னும் நிரூபிக்கப்படவில்லை. கூட்டமைப்பிலுள்ள ஒவ்வொரு தமிழ் குழுவும் தத்தம் சொந்த நலன்களை முன்னெடுக்கும் தனியான நிகழ்ச்சி நிரலைக் கொண்டு செயற்படுகின்றன. தமிழர் விடுதலை கூட்டணி போன்ற சக்திகள் இன்னும் தமது சந்தர்ப்பவாத சமரச அரசியலை துல்லியமாக வெளிப்படுத்தி வருகின்றனர். மக்கள் மத்தியிலும் இவர்கள் மீது நம்பிக்கையில்லை. தாம் இவர்களுக்கு வாக்களித்தது தமது தேசிய உணர்வின் வெளிப்பாடேயன்றி பாராளுமன்றத்தில் பெரிய எதிர்பார்ப்பு கொண்டில்லை என்பதை மக்களின் பல்வேறு தரப்பினரும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் குறிப்பிட்டுள்ளனர். அவ்வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பை எங்கனம் தமிழரின் தேசிய எழுச்சிக்கு நிறுவன அடையாளம் கொடுக்கும் கட்சியாக அடையாளப்படுத்துவது? தமிழ் மக்களது அங்கீகாரத்தையும் தமிழ் தேசத்தின் அடையாளத்தையும் சுமந்து கொண்டு இவர்கள் தமதும் தாம் சாரும் அந்நிய சக்திகளினதும் நலன்களை முன்னெடுக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதமுள்ளது? தமிழர் எழுச்சியில் தமக்கான சொந்த நலன்களை தேடும் பிரிவினரிடம் எப்படி இந்தப் பாரிய பொறுப்பை வழங்குவது சரியாகும்?

இரத்தத்தையும், கண்ணீரையும், துயரங்களையும், அளப்பரிய தியாகங்களையும் வரலாறாய்க் கொண்டு உருவாகியிருக்கும் தமிழரின் தேசிய எழுச்சியானது தனது உரிமைகளை வென்று கொள்வதற்கு நிறுவனமயப்படுவது காலத்தின் தவிர்க்க முடியாத தேவையாகி விட்டது. இதை பலரும் உணர்கின்றனர்.

அதை எவ்வாறு உருவாக்குவது என்பதில் வெவ்வேறு பார்வைகள் இருக்கலாம். இங்கு பிரதானமானது, மீளவும் பழைய வழிமுறைகளையே பின்பற்றி தமிழர் தேசிய எழுச்சிக்கு நிறுவ்ன வடிவம் வழங்குவதா? அல்லது தமிழர் தேசவிடுதலைப் போராட்டம் வந்தடைந்திருக்கும் வரலாற்றுக் கட்டத்தையும், தமிழ் தேசத்தின் அக புற தேவைகளையும் மதிப்பிட்டு அதற்குப் பொருத்தமான வகையில் நிறுவனவடிவம் கொடுப்பதா என்பதே.

அயர்லாந்தில் மக்களின் தேசிய அரசியல் தலைமையாக சின்பெய்ன் அமைப்பு செயற்படுகிறது. பாலஸ்தீனத்தில் மக்கள் எழுச்சி இந்திபாதா எனும் பெயருடன் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது. மெக்சிக்கோவில் சப்டிஸ்டா அமைப்பு, கொலம்பியாவில் கொலம்பிய தேசிய விடுதலை முன்னணி, காஷ்மீரில் ஷூரியட் கொன்பரன்ஸ் போன்றனவும் இத்தகைய அரசியல் பண்பைக் கொண்டிருப்பதை காணலாம். ஈழத்தமிழரினதும் தேசிய எழுச்சியை நெறிப்படுத்தி தலைமைதாங்க, மக்களது அரசியல் கோரிக்கைகளை, தேசிய உணர்வெழுச்சியின் நியாயத்தை உலகுக்கு அறிவித்திட நேர்மையான அர்ப்பணிப்புடன் கூடிய ஒரு அரசியல் நிறுவனமே இன்று தேவை. இத்தகைய நிறுவனமாக இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பு பரிணமித்திட முடியாது. அதற்கான அரசியல் பண்பும் அதனிடம் கிடையாது.

இன்று தமிழர் தாயகத்தில் மக்களின் உண்மையான தேவைகளிலிருந்து உதித்த பல்வேறு அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. ஆயுதப் போராட்டத்திற்கு சிறிதும் சளைக்காத வகையில் ஆக்கிரமிப்பு இராணுவத்தினை எதிர்த்து தமது உரிமைகளுக்காக இவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களே மக்கள் எழுச்சியின் சாரமாயிருக்கிறார்கள். கடற்றொழிலாளர் அமைப்புகள், மாணவர், ஆசிரியர், சீவல்தொழிலாளர் அமைப்புகள், அன்னையர் முன்னணி, மனிதஉரிமை அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் என இவர்கள் அடையாளம் பெறுகிறார்கள். இவர்களுடன் தமிழ் தேசபக்த ஊடகவியலாளர்களும், நேர்மையான அறிவுத்துறையினரும் இணைந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரது போராட்டத்தினதும் திரட்சிதான் தமிழ் தேசிய எழுச்சியாக வெளிப்படுகிறது. எனவே தமிழர் தாயகத்தில் உருவாகியிருக்கும் இம்மக்கள் போராட்ட அமைப்புகளின் தலைமைகளை இணைத்து அதற்கே நிறுவன வடிவம் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் அமைப்பு (அதை தற்போதைக்கு தமிழர் தேசிய உரிமைக்கான கட்சி என குறிப்பிடலாம்) தமிழ்தேசிய எழுச்சியின் பிரதிநிதியாக செயற்பட வேண்டும். இதில் இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பும் அங்கம் வகிக்க வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு தேசிய எழுச்சியின் நிறுவனமயமாக்கல் போக்கில் ஒரு கூறு மாத்திரமே. அதுவே முழுமையல்ல.

இவ்வாறு மக்கள் மத்தியில் உருவான போராட்ட சக்திகளின் இணைவில் உருவாகும் தேசிய கட்சியே இறுதிவரையில் தமிழரின் உரிமைக்காக அரசியல் தளத்தில் போராடும் உயிரோட்டமான போர்க்குணாம்சத்தை சுமந்து கொண்டிருக்கும். ஏனெனில் அது வாழ்வுக்கான போராட்டங்களினூடாக உருவான மக்கள் தலைவர்களின் சேர்க்கையாய் இருக்கப் போவதாலாகும். இன்று மக்கள் பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து போராடிக் கொண்டிருக்க தமிழ் கூட்டமைப்பினர் பெரிதும் பார்வையாளர்களாகவே இருக்கிறார்கள். ஒப்புக்கு இறுதி நேரத்தில் போராட்டங்களில் கலந்து கொள்கிறார்கள். தமது அரசியல் இருப்பை பேணிக்கொள்ளும் வகையில் நாசூக்கான அறிக்கைகளை விடுவதுடன் நிறுத்திக் கொள்கிறார்கள். ஆனால் மக்கள் சக்தி அப்படியில்லை. இறுதிவரை போராடினால் தான் அவர்களால் தமது இருப்பை தக்கவைக்க முடியும். இதுவே இன்று வரையிலான வரலாறாயுமுள்ளது. எனவே இந்த பல்வேறு மக்கள் போராட்ட அமைப்புகளின் தலைமைகளை இணைத்து ஒரு தேசிய அரசியல் கட்சியை உருவாக்குவதே இன்றைய நிலைமைகளுக்கு பொருத்தமுடையதாகும்.

இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருப்பவர்கள் மக்களுக்கு துரோகம் செய்ய முயன்றால் அவர்களை அம்பலப்படுத்தி தூக்கியெறிய முடிவதும் இத்தகைய மக்கள் போராட்ட சக்திகளின் பெரும்பான்மை பலத்தில் தேசிய கட்சி உருவாகினால் மாத்திரமேயாகும். ஏனெனில் மக்கள் ஒருபோதும் தமது விரல்களால் தமது கண்களை குத்திக்கொள்ள மாட்டார்கள். தமது சொந்தக் கரங்களால் தாமே தமது அடிவயிற்றில் கத்தியை செருக மாட்டார்கள். வாழ்வுக்காக போராடிக் கொண்டிருக்கும் மக்களது போராட்ட அமைப்புகளின் தலைமைத்துவ திரட்சியில் உருவாகும் கட்சி எப்பொழுதும் விழிப்புடன் இருப்பது அது சார்ந்த மக்களின் (அதாவது ஒட்டுமொத்த ஈழத்தமிழரதும்) வாழ்வுக்கான தேவையாய் உள்ளது.

அரசியல் கட்சியாக இருப்பவர்கள், அரசியல்வாதிகளாக வாழ்ந்தவர்கள், அந்த பாரம்பரிய அடையாளங்களை சுமந்து கொண்டிருப்பவர்கள், படித்தவர்கள், மேட்டுக்குடியினர் தான் தேசிய எழுச்சிக்கு நிறுவனமயப்பட்ட தலைமையளிக்க பொருத்தமானவர்கள் எனும் மாயைகளும் உடைபட வேண்டும். மக்கள் மத்தியிலிருந்து மக்களின் அடிப்படை நலன்களை முதன்மைப்படுத்தி உருவாகும் சக்திகளின் சேர்க்கையிலும் தேச எழுச்சிக்கு நிறுவனமயப்பட்ட தலைமைத்துவத்தை வழங்கமுடியும் என்பது நிரூபிக்கப்பட வேண்டும். இன்று தமிழ்தேசிய கூட்டமைப்பு ஒரு வடிவம் பெறுவதற்கு பின்புலமாயிருந்தது இந்த மக்களது எழுச்சிப் போராட்டங்கள் தான் என்பது எதிரிகளும் குறிப்பிடுவதாகும். அவ்வகையில் அம்மக்கள் போராட்ட சக்திகள் தலைமையாக உருவாவது தான் இன்றைய கட்டத்தில் தமிழ்சமூகத்தின் தேவையாயுள்ளது. சமூகம்தான் தனக்குள்ளிருந்து போராட்ட சக்திகளை வெளித்தள்ளிக் கொண்டிருக்கிறது. சமூகத்தினால் உற்பத்தி செய்யப்பட்டவர்கள் சமூகத்தை மீள நெறிப்படுத்தி தலைமை தாங்குவதே அரசியல் நியதி. வெளியிலிருந்து வந்து ஒட்டிக்கொண்ட கூட்டமைப்பினர் அல்ல. கூட்டமைப்பினர் இந்த மக்கள் தலைமையுடன் தாமும் ஒரு கூறாக இணைந்து மக்களுக்காக நேர்மையுடன் பணிசெய்வதன் மூலம் தமது வரலாற்று கறைகளை கழுவிக் கொள்ளட்டும்.

இதற்காக கூட்டமைப்பினர் செய்ய வேண்டியதெல்லாம் டி. சிவராம் தனது கட்டுரையின் இறுதியில் தெளிவாக சுட்டிக் காட்டியிருப்பது போல் ஒரு எழுச்சி மாநாட்டை நடாத்துவதாகும். இம்மாநாட்டில் மக்கள் போராட்ட சக்திகளையும் தேசபக்த தனிநபர்களையும் ஒருங்கிணைத்து தமிழ் தேசிய அரசியல் கட்சியை உருவாக்கிட வேண்டும். இத்தகையதொரு மாநாட்டை நடாத்தி தமிழ் அரசியல் கட்சியை உருவாக்குவதற்கான வாய்ப்பையும் வளங்களையும் கூட்டமைப்பினரே இன்று கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை.

ஆனால் உங்களுடைய "அரசியல் நலன்கள்" அதற்கு இடமளிக்குமா? அவ்வாறில்லாவிடில் தமிழ் தேசபக்த சக்திகள் எவ்வாறு ஒரு கூட்டினைஅல்லது அமைப்பினை உருவாக்கிக் கொள்வது? இதுவே இன்று எம்முன் உள்ள கேள்வி.

*- குவேனி, கொழும்பு-05*

## புலிகள்...

11ம் பக்கத் தொடர்ச்சி

வரமுடியுமாயிருந்தால் அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பானதொன்றாகும். ஏனெனில், யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றின் மூலமாக இந்நாட்டின் அனைத்து மக்கள் பிரிவினரும் பெற்றுக் கொள்ளும் ஆறுதலை பிரயோசனப்படுத்தி, தடையை நீக்குவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு அவசியமான சூழலை உருவாக்குவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுவதனாலாகும்.

இராணுவ தளபதி லயனல் பலகல்ல குறிப்பிட்டதுபோல் சமாதானத்தை ஏற்படுத்துவது என்பது யுத்தம் செய்வதிலும்விட கடினமானதொன்றாகும். ரணில் விக்கிரமசிங்க அந்த சிரமங்களை தற்பொழுது தனது கரங்களில் எடுத்துக் கொண்டிருக்கிறார். தடையை நீக்குவதா இல்லையா எனும் சர்ச்சை ஒரு கடினமான தடங்கல் மாத்திரமே. த.வி.புலிகள் அமைப்பின் கடந்தகால நடவடிக்கைகளைப் பார்க்கையில், தமது அமைப்பின் உயிரோட்டமான போர்க்குணாம்சத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக எந்தப் பாதுகாப்பற்ற நிலைமையையும் எதிர்கொள்ள அவர்கள் தயாராயிருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். புலேந்திரன் அடங்கலாக த.வி.புலிகள் அமைப்பின் 13 தலைவர்கள் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொள்ள காரணமாயிருந்த இந்திய இராணுவத்துடன் யுத்தம் புரியவும் அவர்கள் தீர்மானித்தது அத்தகையதொரு நிலைமையில்தான். அந்தத்தருவாயிலும் வடக்கு கிழக்குக்கான இடைக்கால அரசாங்கத்தின் பிரதான பொறுப்புகள் அனைத்தையும் த.வி.புலிகள் ஒப்படைக்க அரசாங்கம் தயாராகவேயிருந்தது.

தவிபுலிகள் மீதான தேசிய தடை பற்றின விடயமானது அத்தகையதொரு தீர்மானகரமான விடயமாக அமைந்து விடக்கூடாது என நாம் விரும்புவோமாக. ஏனெனில் தடையை காரணமாகக் கொண்ட 4வது ஈழப் போர் நம்யாருக்கும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் யாருக்குமே அவசியமற்றது என்பதாலாகும் பாதுகாப்பு அமைச்சரும் முன்னாள் நீதியரசருமான திலக் மாரப்பனவின் கருத்துப்படி இத்தேசிய தடையில் எந்தவிதமான சட்டரீதியான பெறுமதியோ இராணுவ ரீதியான பெறுமதியோ கிடையாது என்பதாகும். உண்மையில் அதுவொரு அரசியல் தந்திரம் மாத்திரமே. எனினும், தற்போது சந்திரிகா குமாரதுங்கவில் இருந்து டில்வின் சில்வா வரை இந்தத் தடையில் தான் தொற்றிக் கொண்டிருக்கப் போகிறார்கள். அது அவர்களுக்கு மீள யுத்தத்திற்கு செல்வதற்கு ஈடான பெரும் பெறுதிமதிக்குரியதொன்றாகும். த.வி.புலிகள் அமைப்பிற்கு அது அவ்வாறு இருக்கக் கூடாதென நாம் பிரார்த்திப்போமாக. அரசாங்கமும் தவிபுலிகள் அமைப்பும் உத்தியோகபூர்வமான உரையாடலில் ஈடுபட்டு இந்த திருப்பித்தாக்கும் சுழலிலிருந்து மீள்வதற்கான வழியை கண்டடைய வேண்டும். உருப்பெற்றுவரும் நிலையான யுத்த நிறுத்தம் இந்த 'தடை' காரணமாக தகர்ந்து மீளவும் யுத்தத்தீ பரவிடுமாயின் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு பதில்சொல்லப் போவது சந்திரிகாவா? ரணிலா? பிரபாகரனா?

○

## நிகரியின் வருகை தரும் உவகை!

ஒரு உயிர் மீண்டும் உலாவுதல் நிலையினை நிகரி வருகை ஏற்படுத்துகின்றது. 'சொல்லாயோ வாய்திறந்து" ஈழமோகத்தினை மருதானை வீதியோர பத்திரிகைகளிடையே கண்ட போது கட்டுரைகளும் அதன் எழுத்தாளர்களும் ஒருவருட மீட்டலுக்கு உள்ளாக்கப்பட்டனர். பின்னர் ஆசிரியர் தலையங்கம் அதனை உறுதி செய்தது.

கவிஞ சல்மா அற்புதமான வாழ்வினைக் கவிதையாய் தருகிறவர். துயரமான இசையிலிருந்து இனிமையை நோக்கும் போது வாழ்வில் மோதும் சோகங்கள் எவ்வளவு அழகாய் ஸ்வரமாயிற்று. சிலவேளைகளில் இவர் ஒடுக்கப்படாவிட்டால் எங்களுக்கு உணர்வுக் கவிகளும் உயிர்ப்புடனான விடுதலைக் குரலும் பெண்பக்கமிருந்து கிடைக்காது போயிருக்கும் போல் தோன்றுகின்றது.

நாசமறுப்பான் அவர்களின் பத்தியில் ரணில் நோக்கி எமக்கும் ஒரு கேள்வி எழுகிறது. இனப் பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களின் நிலை தொடர்பாய் ரணிலின் திட்டங்கள் என்ன? தங்களது ஆட்சிப் பங்காளியை மட்டுமே முஸ்லிம்களின் பிரதிநிதியாகவும், அவர்களின் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிலையை ரணில் எடுப்பாரா? அல்லது சிராஜ் எழுதியது போல் சமாதான ஆரவாரங்களிடையே முஸ்லிம்களையும் அமுங்கிப்போக விடுவாரா? இவற்றிற்கு காலம் ஏதாவது கூறத்தான் வேண்டும். அல்லது வரலாற்றில் ரணில் ஒரு மாணவனாக மாற வேண்டும். ஆனால் புலிகள் இதுவரை முஸ்லிம்களைப் பற்றி துல்லியமாய் எதுவும் கூறாத போதும், இது தொடர்கையிலும், தலைவர்கள் என்போர் என்ன செய்யப் போகிறார்கள். அல்லது நாங்கள் கனவு தான் காணப் போகிறோமா...? எளிதில் நெருங்கி விடமுடியாத வாழ்வின் கரையில் இருக்கிறோம் என்கிறார் சல்மா.

*பர்ஸான்.ஏ.ஆர், அட்டாளைச்சேனை - 02*

## நிகரி தரும் உற்சாகம்!

கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேலான காலத்திற்கு பின் மீண்டும் ஒரு காத்திரமான தமிழ் பத்திரிகையொன்று (நிகரி) வெளிவருவதையிட்டு அளவில்லா ஆனந்தமடைகிறேன். வியாபாரத்தை மட்டுமே நோக்காகக் கொண்ட பல பத்திரிகைகளால் சோர்வடைந்திருந்த எம்மைப் போன்றவர்களுக்கு உங்களுடைய "நிகரி"" பெரும் உற்சாகத்தைத் தந்திருக்கின்றது.

"நிகரி"" என்கிற பெயரே இலக்கியத்தரம் வாய்ந்ததாக இருக்கிறது. பெயருக்கேற்ற மாதிரி எந்தவொரு தடைக்கும் சளைக்காது தொடர்ந்து நல்ல காத்திரமான படைப்புகளோடு "நிகரி"" வெளி வர வேண்டுமென ஆண்டவனை பிரார்த்திப்பதோடு, அதற்காக தொடர்ந்து ஒத்துழைப்புத் தருவதற்கும் சித்தமாயிருக்கிறேன்.

*லோ. சுதர்மன், கெங்கல்ல*

## சொன்னது வேறிடத்தில்!

உங்கள் 03.02.2002 இதழில் எனது நூல்கள் பற்றிய நீண்ட குறிப்புக்கு நன்றி.

எனினும் அக் கூட்டத்தில் என் விமர்சனங்கள் - 2 நூல் பற்றி நான் எதுவும் பேசுவதற்கில்லை என்று சொன்னேனே தவிர உங்கள் குறிப்பில் உள்ளவிதமாக எதையுமே கூறவில்லை. அக் கருத்துக்கள் என்னுடையன என்பது உண்மை. அவை அங்கு கூறப்பட்டன என்பது உண்மையல்ல.

*சிவசேகரம், கொழும்பு*

**தவறு**

*சென்ற இதழில் வெளியான கூண்டுகள் என்ற சிறுகதையை எழுதியவர் அம்ரிதா ஏயெம். இப்பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.*

*ஆ-ர்*

## கூட்டமைப்பை...

9ம் பக்கத் தொடர்ச்சி

தங்களை புதியதொரு அரசியல் சூழலுக்கு தயார்படுத்தியிருக்கின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இதனை உணர்ந்து தாங்கள் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை அறிந்து செயற்படவேண்டியது காலத்தின் தேவை. அவ்வாறில்லாது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக கூட்டமைப்பில் உள்ளவர்கள் செயற்படுவார்களானால் அவர்கள் மக்களால் தூக்கி வீசப்படுவதும் திண்ணம்.

○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registred as a Newspaper

நிகரி
NIHARI
83, பிலியந்தலை வீதி, மஹரகம
தொலைபேசி : 851672, 851673 தொலைமடல் 851814
மின்னஞ்சல் : nihari02@yahoo.co.uk

## தவிர்க்க முடியாத முன்நிபந்தனை!

கட்டாயப்படுத்தி சிறுவர்களை தமது படையில் சேர்த்துக் கொள்கிறார்கள் புலிகள் என்ற ஜனாதிபதியின் குற்றச்சாட்டை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வன்மையாக மறுத்திருக்கின்றார்.

புலிகளின் கிழக்குப் பிராந்தியப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்களும் பலவந்த ஆட்சேர்ப்புக் குற்றச்சாட்டை மறுதலித்திருக்கின்றார்.

ஒரு குடும்பத்திற்கு ஒருவர் வீதம் தமக்கு உறுப்பினர்களை தருமாறு மக்களிடம் கேட்பதாகவும், விரும்பி வருபவர்களை மட்டுமே தாம் சேர்த்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார். புலிகள் பலவீனமாக இருந்து விட முடியாது என்பதால் ஆட்சேர்ப்பை நிறுத்திவிடுவது நல்லதல்ல என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சிறுவர்களை தமது படையில் சேர்ப்பதும், கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதும் தொடர்பாக புலிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது இது முதற்தடவை அல்ல. இதற்கு முன்பும் பல தடவைகள் அரசாலும், பிற மனித உரிமைகளுக்கான அமைப்புக்களாலும் இந்தக் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

அப்போதும் புலிகள் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுதலித்து வந்திருக்கிறார்கள்.

இவற்றின் உண்மை பொய்கள் இப்போது முக்கியம் அல்ல, கட்டாய ஆட்சேர்ப்பும் சிறுவர்களை படையில் சேர்த்துக் கொள்வதும் தவறான விடயங்கள் என்பதை புலிகள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை கரிகாலன் பாலசிங்கம் ஆகியோரது கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

இது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

ஆனால் இன்னொரு முக்கியமான விடயமும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

அதுவும் சமாதானத்திற்கான சூழ்நிலை ஓரளவுக்கு மீண்டும் உருவாகி வருகின்ற இன்றைய சூழலில், இந்த விடயம் மிகவும் கவனத்திற்குரிய ஒன்றாகும்.

ஆம், முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் பலவந்தமாக அவர்களிடம் இருந்து பணம் வசூலிக்கப்பட்டு வருகின்றது, பணம் கொடுக்க மறுப்பவர்கள் மிரட்டப்படுகிறார்கள் என்று தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் மூதூர்ப் பகுதியில் முஸ்லிம் வர்த்தகர்களிடம் பணம் தருமாறு புலிகள் கேட்டு வருகிறார்கள் என்று கூறி, அதனை எதிர்த்த ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டது தெரிந்ததே!

மட்டக்களப்பை அண்டிய பிரதேசங்களிலும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்வதாகத் தெரிய வருகிறது.

ஆனால் "தலைமைப் பீடத்திற்கு தெரியாமல், அதன் அனுமதி இல்லாமல் எதுவுமே நடப்பதில்லை என்று தெரிவித்திருக்கிறார் கரிகாலன் அவர்கள்.

அப்படியானால் ஒன்றில் இந்த பணம் கேட்கும் நடவடிக்கையும் புலிகளின் தலைமைப் பீடத்திற்கு தெரிய நடக்க வேண்டும், அதாவது தலைமைப் பீடம் இத்தகைய செயலை ஆதரிப்பதாக இருக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் இந்த வேளையில், முஸ்லிம்கள் மீதான நடவடிக்கைகள் இப்படித் தொடருமானால், அது ஏற்கெனவே உள்ள கசப்புணர்வை மேலும் மோசமாக்கி விடும்.

அதுவே சமாதான முயற்சிக்கு மேலும் குந்தகமாக அமைந்தும் விடும்.

ஏற்கெனவே யாழ் நகரிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்டிருக்கும் அரசியல் பின்னடைவை புலிகளால் இன்னமும் முழுமையாக ஈடுசெய்ய முடியவில்லை.

இன்று நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் தலைமைக்கு தெரியாமல் நடப்பதானால், உடனடியாக அவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும்.

தெரிந்து, நிதி சேகரிக்கும் செயற்பாட்டின் ஒரு அம்சமாக அது செயற்படுத்தப்படுவதாக இருந்தாலும் கூட, உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இனங்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்த என்னென்ன அவசியமான விடயங்களை எல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்ய முடிந்தால் மட்டுமே இன விடுதலைக்கான பாதையில் புலிகளால் வெற்றிகரமாக முன்னேற முடியும்.

இது இன்றைய சூழலின் நீடிப்புக்கு மட்டுமல்ல, விடுதலைக்கும் கூட தவிர்க்க முடியாத ஒரு முன் நிபந்தனையாகும்.

இதை ஏற்று செயற்பட புலிகள் அவசியம் முன்வர வேண்டும்!

## திருமலை, வவுனியா, பொலன்னறுவை, குருநாகல் அதிகரிக்கும் பாலியல் வல்லுறவுகள்

இலங்கையில் பெண்கள், சிறுமியர் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படாதவரை பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை குறைக்க முடியாது என்றே தோன்றுகின்றது.

போர் நிறுத்தக் காலங்களிலும் கூட தமிழ் பெண்கள் மீதான வல்லுறவுச் சம்பவங்கள் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

இலங்கையின் 54வது சுதந்திர தினத்தன்று கூட திருகோணமலை, உவர்மலை, கோணேசபுரத்தில் வசிக்கும் 7 வயதுச் சிறுமி மீது பிளான்ரன் பொயின்ட் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினனால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார். இச்சம்பவத்தினை அறிந்த பொதுமக்கள் இராணுவத்தினனைப் பிடித்து அடித்து திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

பொதுமக்கள் இராணுவத்தினனை அடித்து ஒப்படைத்தது தொடர்பாக இராணுவம் தங்களை பழிவாங்கலாம் என்ற பயம் இருந்தாலும் மக்களின் இந்த நடவடிக்கை மூலம் இராணுவத்தினரின் அச்சமின்றிய தான்தோன்றித்தனமான செயற்பாட்டிற்கு ஒரு எச்சரிக்கையாக இந்நடவடிக்கையாகச் சொல்லாம்.

அதே நேரம் 5ம் திகதி 3 பிள்ளைகளின் தாயாரான பெண் ஒருவரை வவுனியா செட்டிக்குளத்தில் வல்லுறவுக்கு முயற்சி செய்த இராணுவத்தினன் ஒருவன் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பிரஜைகள் குழுத் தலைவரான ஞானப்பிரகாசத்தின் ஊடாக செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளான். இந்த இரண்டு இராணுவத்தினருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படப் போகின்றது என்பதற்கப்பால் இப்படியான நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையே அதிகம் காணப்படுகின்றது.

சட்ட ரீதியாக இவர்களை எவ்வளவு தூரம் தண்டனை மூலம் கட்டுப்படுத்த முடியும் என்பது கூட, காத்திரமான விசாரணையே மேற்கொள்ள முடியாமல் அரசியல் ரீதியான, அதிகார ரீதியான தலையீடுகள் தடுத்து விடுகின்றன. ஆகவே தண்டனைக்கு உள்ளானவர்கள் கூட தப்பிக் கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் அனேகம். அதே நேரம் அரசானது இந்நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்டு இராணுவத்துடன் முரண்பட்டுக் கொள்ளத் தயாரில்லை. ஆகவே தண்டனை என்பது இவர்களைக் கட்டுப்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது.

தென்னிலங்கையிலும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்தே காணப்படுகின்றன. அண்மையில் பொலநறுவையில் பிரிட்டிஷ் பெண் ஒருவரை நாலு பேர் கொண்ட ஆயுதக் கோஷ்டியொன்று வல்லுறவுக்குள்ளாக்கியது. ஆயினும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

அதேபோல் குருநாகலில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிக் கொண்டிருந்த 20 வயது இளம் பெண் ஒருவரை மூவர் கொண்ட குழு ஒன்று பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளது. இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பூராவுமே வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரச நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதே உண்மை.

ஏனெனில் அதில் ஈடுபடும் ரவுடிக் கும்பல்களும் இராணுவமும் தான் அரசைத் தாங்கும் சக்திகளாக உள்ளன.

ஆகவே இது தொடர்பாக மக்கள் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி தாங்களாக போராடாத வரை இவை தொடர்வதை தவிர்க்க முடியாததாகிப் போய் விடுகின்றது.

அதேநேரம் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பானது கைது செய்யப்பட்டுச் சிறையில் இருக்கும் பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவது அதிகரித்து வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்படும் பெண்கள், கண்கள் கட்டப்பட்டு அடித்துத் துன்புறுத்தப்பட்டு பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறையில் ஏற்படும் இப்படியான சம்பவங்களுக்கு சிறை ஊழியர்களும், அதிகாரிகளும் துணை போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் சட்ட ஒழுங்கைப் காப்பாற்ற வேண்டியவர்களே குற்றவாளிகளாகவும், அரசாள்பவர்களே அவர்களின் காவலர்களாகவும் இருக்கின்ற போது இப்படியான சம்பவங்களுக்கு நடவடிக்கை எடுப்பது என்பது வெறும் ஏமாற்றுத்தான்.

அண்மையில் கடற்றொழில் கடல் வள தென்னிலங்கை அபிவிருத்தி அமைச்சர் கொலைகாரர்கள், கொள்ளையர்கள், பாலியல் வல்லுறவுக்காரர்கள் ஆகியோர் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டால் 3 மாதத்திற்குள் மரண தண்டணை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற பிரேரணையை கொண்டு வர இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தண்டனைகள் குற்றத்தைக் குறைத்து விடும் என்று சொல்வரங்கில்லை. நாட்கள் குற்றவாளிகளின் விளை நிலங்களை அழிப்பதை அழிக்க வேண்டும். அதற்கு அரசு தயாரா?

## கடற்தொழிலாளர் போராட்டம்: பணிந்தது அரசு!

மோதல் தவிர்ப்பு அமுலாகியதும் தரைப்பகுதியில் தடையாக இருந்த முக்கியமான விடயங்கள் சிலவற்றிற்கு விடை காணப்பட்டுள்ளது. ஏனைய சிலவற்றில் சிறிது தளர்வுகள். இது ஒரு பகுதியினரிடம் முக்கியமான வினாவொன்றை எழுப்புகின்றது. மோதல் தவிர்ப்பு தரைப்பகுதிக்கு மாத்திரம் தானா என்பதேயாகும்.

ஏனெனில் தொடர்ந்து 20 வருடங்களாக மீன்பிடித்தடைக்கு உள்ளாக்கப்பட்டு வந்த வடபகுதி கடற்தொழிலாளர் ஆட்சி மாற்றத்தோடு தமக்கு நல்லகாலம் ஆரம்பமாகும் எனப் பார்த்திருந்தனர். ஆனால் ஆனதோ ஒன்றுமில்லை. தமக்கான உரிமையை தாமே வென்றெடுக்க வேண்டும் என்ற முனைப்போடு அகிம்சைப் போரில் அணியணியாய் குதித்தனர். மக்களுக்காய் தலைமைதாங்கி போராட வேண்டிய அரசியல்வாதிகள் மக்கள் தலைமை தாங்கிய போராட்டத்தில் தாமும் ஒரு பிரிவினராக கலந்து கொண்டனர்.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசம் ஏற்பாடு செய்த இந்த மறியல் போராட்டத்தில் அதில் அங்கம் வகிக்கும் 20 அமைப்புகள் பங்கெடுத்தன. கடுமையான வெய்யிலிலும் முதியவர்களும், கைக்குழந்தைகளோடு தாய்மாரும் போராட்டத்தில் ஈடுபட்டோரோடு இணைந்து மறியல் போரை இன்னுமொரு படி மேலுயர்த்தியது. இது பருத்தித்துறை, வன்னியென எங்கும் தனக்கான ஆதரவை விரிவாக்கியது. பல்கலைக்கழக மாணவர்களின் ஆதரவு நியாயமான இப்போராட்டத்திற்கும் கிடைத்ததும் யாழ். செயலக பிரதான இரு வாசல்களையும் மறித்து மறியல் போராட்டம் இடம் பெற்றதனால் செயலகத்திற்கு ஊழியர்கள் செல்ல முடியாமையினால் செயலக செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன. இவையனைத்திற்கும் மேலாக முக்கியமானதொரு விடயம் இடம் பெற்றது. அதுதான் சுதந்திர தினத்தன்று தேசிய கொடி ஏற்ற விடாமல் தடுக்கப்பட்டது. தடுக்கப்பட்டது மாத்திரமல்ல, பதிலாக செயலக கொடிக்கம்பத்தில் போராட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர்களால் கறுப்புக் கொடியும் ஏற்றப்பட்டது. அங்கு வந்த முக்கியஸ்தர்கள் சிலர் செயலகத்தில் தேசிய கொடி ஏற்ற விடுமாறு கோரிய போது அது மறுக்கப்பட்டது. ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர் மகேஸ்வரனுக்கும் தேசியக் கொடி ஏற்றுவதற்கு வழி விடவில்லை போராட்டத்தில் ஈடுபட்டோர். தேசிய கொடி ஏற்ற மறுக்கப்பட்டு பதிலாக கறுப்புக் கொடி ஏற்றிய நிகழ்வானது 69 வருடங்களுக்கு பிறகு மீண்டும் ஒரு தடவை இடம்பெற்ற வரலாற்று நிகழ்வாகப் பதிவாகியுள்ளது. 69 வருடங்களுக்கு முன்னர் யாழ், முற்றவெளியில் தேசியக் கொடி ஏற்ற எடுக்கப்பட்ட முயற்சி "தேசிய இளைஞர் காங்கிரஸால்" தடுக்கப்பட்டு பதிலாக கறுப்புக் கொடி ஏற்றியது குறிப்பிடத்தக்கது. இவர்களின் இப்போராட்டம் உலக கவனத்தை ஈர்க்கும் முகமாக 07.02.2002 ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடாகி இருந்து போது படைத் தரப்பினர் கடற்தொழிலாளர் [illegible] பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. 06.02.2002 பலாலி தலைமையகத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் பலனாக தொண்டமானாறு முதல் பருத்தித் துறை வரை அதிகாலை 4.30 இலிருந்து மாலை 6.00 மணிவரை இயந்திரம் அற்ற படகுகள் மற்றும் கட்டுமரங்களில் 500 மீற்றர் துாரம் வரை சென்று மீன்பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக் கிழமை பகலில் மாத்திரம் ஒன்றறை கிலோ மீற்றர் துாரம் வரை சென்று மீன்பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ அரசியல்வாதிகளால் தலையிட்ட போதும் போராட்டத்தை இடைவிடாமல் தொடர்ந்தன் விளைவால் உடனடியாக முதற்படி வெற்றியை பெற்றுள்ளனர் எனக் கூறலாம். கடற் தொழிலில் அவர்கள் சுதந்திரமாக ஈடுபட தற்போதுள்ள நேரக் கட்டுப்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். அல்லாவிடின் இயல்பு நிலை என்பது பெறுமதியற்றதாகி விடும் மக்கள் தமக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள தாமே சளைக்காமல் போராடுவதன் மூலம் வெற்றி பெறலாம் என்பதற்கு இப்போராட்டம் நல்லதொரு உதாரணம் இடைநிறுத்தப்பட்டுள்ள போராட்டம், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கடற்றொழில் ஈடுபடுவதிலுள்ள காவலரையறை, இடப்பரப்புகள் என்பவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள சகலவிதமான தடைகளும் முற்றுமுழுதாக அகற்றும் வரை ஓய்ந்துவிடக் கூடாது. முன்னைய ஆட்சி போல் தளர்வுகள் என்றே போர்வையில் சிறிய சலுகைகளை வழங்கி உரிமைகளை தரமறுக்க முற்பட்டால் அதை எதிர்த்து உரிமைகளை பெற்றுக் கொள்ள வீறுடன் போராடத் தயாராவதை தவிர வேறு வழி கடற்றொழிலாளர்களுக்கு இல்லை.

இப்பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கரன்சி) நிறுவனத்தால் மஹரகம பிலியந்தல வீதி 83ஆம் இலக்க ராவய அச்சகத்தில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்